ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:






# உள்ளதை உணர்வோம்




## (தத்வபோதம்)

**அத்வைத ஸித்தாந்த சாஸ்த்ரத்தின் அடிப்படை நூல்**


விளக்கி அருளியவர்

**பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகள்**

| | | |
|---|---|---|
| புத்தகத்தின் பெயர் | : | தத்வபோதம் |
| முதற்பதிப்பு | : | மார்ச், 2017 |
| உரிமை | : | வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட் (பதிவு:226/1992) |
| விளக்கம் | : | பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகள் |
| மொழி | : | தமிழ் |
| புத்தக அளவு | : | 1/8 டெம்மி |
| மொத்த பக்கங்கள் | : | 176 |
| எழுத்து அளவு | : | 12 புள்ளிகள் Shree-TAM7-0803<br>16 புள்ளிகள் Shree-DEV7-0709 |
| விலை | : | **ரூ 120/-** |
| தட்டச்சு தொகுப்பு | : | ஸ்ரீமதீ க்ருஷ்ணவேணீ ஹரிராம்<br>ஸ்ரீமதீ உலகலக்ஷ்மி |
| அட்டைப்படம் & புத்தக வடிவமைப்பு | : | ஸ்ரீ ஆ. சுந்தரராஜன் |

வெளியீடு

**ஸ்ரீப்ரஜ்ஞா பதிப்பகம்**

வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு:226/1992)

ஸ்ரீஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம், வேதபுரீ, தேனி-625 531.

தொலைபேசி: 04546-253908

e-mail: swamiomkarananda@gmail.com    www.vedaneri.org

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

# அருளாசியுரை

*எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (திருக்குறள்:355)*

ஸ்ரீஆதிசங்கரபகவத்பாதர் வேதபூர்வ வேதாந்த ப்ரமாணங்கள் வாயிலாக விளக்கி அருளிய அத்வைத ஸித்தாந்த சாஸ்த்ரத்தின் பாலபாடமாக விளங்கும் **தத்வபோதம் (உள்ளதை உணர்வோம்)** நூல் குருவின் பேரருள் துணைகொண்டு அடியேனால் வகுப்புக்களில் விளக்கப்பட்டது.

அதனை முமுக்ஷுக்களாகிய ஜிஞ்ஞாஸுகளுக்கு நன்கு பயன்படும் வண்ணம் புத்தகமாக்கி **வேதாந்த சாஸ்த்ரப்ரசார ட்ரஸ்டின்** ‘‘ஸ்ரீப்ரஜ்ஞா பதிப்பகம்’’ வெளியிடுவது அறிந்து மகிழ்கிறேன்.

இதற்காக இடைவிடா முயற்சியுடன் ஸேவை புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைப் பேரன்புடன் வழங்கி மகிழ்கிறேன்.

*கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி. (திருக்குறள்:356)*

ஓம் நமோ நாராயணாய
பேரன்புடன்

ஸ்வாமீ ஓங்காராநந்த

(ஸ்வாமீ ஓங்காராநந்த)

*ஸ்ரீதுர்முக, மாசி 19 ஆம் நாள்,
பால்குன சுக்ல ஸப்தமீ (03.03.2017) வெள்ளிக்கிழமை*

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:



# தத்வபோதம்

## பொருளடக்கம்


1. முகவுரை 5

2. மங்கள ச்லோகம் 8

3. அதிகாரி விசார: 12
(வேதாந்தம் கற்பதற்குரிய தகுதிகள்)

4. ஆத்ம விசார: 37
(ஆத்மாவைப் பற்றிய ஆராய்ச்சி)

5. ஈச்வர விசார:/ ஜகத் விசார 98
(இறைவன், ப்ரபஞ்சத்தைப் பற்றிய ஆராய்ச்சி)

6. ஜீவ ஈஶ்வர ஐக்ய விசார: 127
(உயிரும் இறைவனும் ஒன்று என்பதைப் பற்றிய ஆராய்ச்சி)

7. ப்ரயோஜந விசார:
(வேதாந்தம் கற்பதின் பயன்) 150

# முகவுரை

உயிர்கள் நனவிலும் கனவிலும் எப்பொழுதும் உள்ளத்தோடு இணைபிரியாது இருக்கின்றன. உறக்கத்தில் மட்டும் உள்ளம் ஒடுங்குகிறது. நனவாகிய விழிப்பு நிலையிலும், விழிப்பற்ற, உறக்கமற்ற கனவு நிலையிலும் உள்ளம் வெளிப்படுகிறது. இதனை நாம் நன்கு நினைத்துப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எண்பத்து நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட உடல்களில் முற்றிலும் ஊனமில்லாத மனித உடலில்தான் உயிர்கள் உள்ளத்தை நன்கு பயன்படுத்த இயலும் என பாரத நாட்டு தர்மசாஸ்த்திரங்கள் உறுதியுடன் உபதேசிக்கின்றன. மனித உடலில் வாழும் உயிர்களையும் மற்ற உடல்களில் வாழும் உயிர்களையும் பிரித்துக்காட்டுவது உள்ளத்திலிருநது நன்கு வெளிப்படும பகுத்தறிவாற்றலே ஆகும். அனைத்து உடல்களில் வாழும் உயிர்கள் எல்லாம் இடைவிடாது துன்மில்லாத அமைதியுடன் கூடிய இன்பத்தையே இயல்பாக விரும்புகின்றன என மனித உடலில் வாழும் சில உயிர்கள் சாஸ்த்திரங்களின் துணையோடுகூடிய தனது பகுத்தறிவாற்றலால் புரிந்துகொள்ள வேண்டும்.

வேத தர்ம, தத்துவ சாத்திரங்கள் மனித உடலில் வாழும்உயிர்களின் ஆழ்ந்த குறிக்கோளாகிய துன்பமில்லாத இன்பத்தை உணர்வதற்கு நான்கு வகை குறிக்கோள்களையும் அதனைப் பெற முயல்வதற்கான வழிமுறைகளையும்சிறப்பாக அருள் நிறைந்த தன்மையுடன் உபதேசிக்கின்றன. அக்குறிக்கோள்கள் முறையே அறம், பொருள், இன்பம், வீடு என நான்காக அமைகின்றன. அறம் என்பது வாழ்நாள் முழுவதும் சொல்லிலும் செயலிலும் சிந்தனையிலும் முறையாக செயல்படுவதே ஆகும். பொருள் என்பது இவ்வுடலைப் பாதுகாப்பதற்கான அனைத்து வகைக் கூட்டமைப்பு என்பதாகும். இன்பம் என்பது அறவழியில் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறிகளால் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புலன்களை அறவழியில் நுகர்ந்து அனுபவிப்பதே ஆகும்.

வீடு என்பது விடு என்பதன் நீட்சி ஆகும். புறப்பற்றாகிய உலகு, உறவு, பொருட்கள் போன்றவையும், அகப்பற்றாகிய தன்னுணர்வையும் (Individuality) மெய்யறிவால் அல்லது மெய்யுணர்வால் முற்றத் துறந்து உணரப்படும் துன்பம் கலவாத எல்லையற்ற அல்லது வரையறையற்ற பேரின்பத்தை உணர்வதே ஆகும். ஸம்ஸ்க்ருதத்தில் அறம், பொருள், இன்பம், வீடு எனும் இக்குறிக்கோள்களை தர்ம அர்த்த காம மோக்ஷம் என்று உபதேசிப்பார்கள். இவற்றுள் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் அடைவதற்கு கர்மம் (செயல்) ஸாதனமாகிறது.

வீடு எனப்படும் மோக்ஷத்தை உணர ஞானம் (மெய்யறிவு) ஸாதனமாகிறது என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். வேதத்தில் உள்ள கர்மகாண்டப் பகுதி கர்மத்தைப் பற்றிய அறிவையும், ஞானகாண்டப் பகுதி மெய்ப்பொருளைப் பெற்று மோக்ஷத்தை உணர்வதற்குரிய அறிவையும் உபதேசிக்கின்றன. பிறந்து, இறந்து, மீண்டும் பிறந்து பிறவிச் சூழலில் உழன்றுகொண்டிருக்கும் உயிருக்குப் பிறவாப் பெருநிலையாகிய பேரின்பத்தை உணர, வேத சாஸ்த்ரங்கள் வழிகாட்டுகின்றன. எல்லையற்ற பேரின்பத்தைத் தன்னுடைய உண்மை இயல்பாக உணர்ந்துகொள்வதற்கு வேதாந்த சாஸ்த்ரம் துணைபுரிகிறது. உபநிஷத்துக்கள், பகவத்கீதை, ப்ரஹ்மஸூத்ரங்கள் ஆகிய மூன்றும் ப்ரஸ்தாந த்ரயம் எனப்படும். அவற்றிலிருந்து வேதாந்த சாஸ்த்ரங்களின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். இவை முதல் நூல் எனப்படும். வேதாந்த சாஸ்த்ரங்களின் உபதேசங்களில் ஒரு கருத்தை எடுத்து, அதனைக் கொண்டு தனி நூலாக எழுதப்படும் நூலுக்கு ப்ரகரண க்ரந்தம் என்று பெயர். தமிழில் இதனைச் சார்புநூல் என்று கூறுவர். தத்த்வபோதம் ஒரு வேதாந்த ப்ரகரண க்ரந்தமாகும். இந்நூல் வேதாந்த சொற்களஞ்சியத்தைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

## பெயர்க்காரணம்

போதம் என்றால் அறிவு. தத்வபோதம் என்றால் தத்துவத்தைப் பற்றிய அறிவு என்று பொருள். சாஸ்த்ரங்களில், ப்ரபஞ்சத்திலுள்ள பொருட்கள் அனைத்தும் பல்வேறு தத்துவங்களாகப் பிரித்துக் கூறப்படுகின்றன. ஐம்பூதங்கள், ஐந்து அறிவுக்கருவிகள், ஐந்து செயற்கருவிகள், ஐந்து ப்ராணன்கள் மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகியவற்றை தத்துவங்கள் என்று கூறுவதுண்டு. தத்துவம் என்ற சொல் அடிப்படையில் மெய்ப்பொருளைக் குறிக்கும். தத்த்வபோதம் என்றால் மெய்ப்பொருளைப் பற்றிய அறிவு என்று பொருள். இந்நூலானது, சீடன் கேள்வி கேட்க, குருநாதர் பதில் கூறுவதாக உரைநடை வடிவில் அமைந்துள்ளது.

## நூலின் நோக்கம்

வேதாந்த நூல்களில் கையாளப்படும் சொற்களை அறிமுகப்படுத்துவதே இந்நூலின் நோக்கமாகும். எத்துறையிலும் பரிபாஷைச் சொற்கள் (technical terms) இருக்கின்றன. அவற்றின் பொருளை ஒவ்வொரு முறையும் விளக்கிக் கூறுவது இயலாத காரியம். உதாரணத்திற்கு, அனைத்தும் மாயை என்று ஓரிடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். மாயை என்ற சொல்லுக்கு உள்ளார்ந்த பொருள் என்ன என்பதை அறிந்துகொண்டால்தான், அதன் தன்மையைப் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். ஆக, வேதாந்த சாஸ்த்ரங்களில் உள்ள சொற்களின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்வதற்காக, இந்நூலைக் கற்க முற்படுகிறோம். வேதாந்தம் கற்பதற்குரிய தகுதிகளை இந்நூல் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. தகுதிகளை வளர்த்துக்கொள்வதற்குரிய வழிமுறைகளையும் இந்நூலின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்..

## நூலின் அமைப்பும் விஷயங்களும்

இந்நூலில் உள்ள கருத்துக்கள் எளிமையாகப் புரிய வேண்டும் என்பதற்காக சிஷ்யனின் கேள்விக்கு குருவானவர் பதில் கூறும் வகையில் இந்நூல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நூல் 6 தலைப்புகளின் வாயிலாக விஷயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

1. **மங்கள ச்லோகம்**

2. **அதிகாரி விசார:**

   (வேதாந்தம் கற்பதற்குரிய தகுதிகளைப் பற்றிய அறிவைப் பெறுதல்.)

3. **ஆத்ம விசார:**

   (ஆத்மாவைப் பற்றிய, அதாவது இம்மனித உடலில் வாழும் தன்னைப் பற்றிய ஆராய்ச்சி)

4. **சிருஷ்டி விசார:**

   (படைப்பைப் பற்றிய ஆராய்ச்சி)

5. **ஜீவ ஈஶ்வர ஐக்ய விசார:**

   (உயிரும் இறைவனும் ஒன்று என்பதைப் பற்றி ஆராய்ந்து அறிவைப் பெறுதல்)

6. **ப்ரயோஜந விசார:**

   (மெய்யறிவின் பயனைப்பற்றிய தெளிந்த அறிவைப் பெறுதல்.)

# மங்கள ச்லோகம்

எந்தவொரு நூலையும் மங்கள ச்லோகத்துடன் தொடங்குதல் மரபு. மங்கள ச்லோகங்கள் மூன்று வகைப்படும்.

**1. நமஸ்கார:**
(இறைவனையும் குருவையும் போற்றி வணங்குதல்)

**2. ஆஶீர்வாத:**
(உலகிற்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தல்)

**3. வஸ்து நிர்தேஶ:**
(மெய்ப்பொருளை விளக்குதல்)

காளிதாஸர் போன்ற பண்டிதர்கள் மூன்றுவிதமான மங்கள ச்லோகங்களும் தங்களுடைய நூலில் அமையும்படி இயற்றியிருக்கிறார்கள். பெரும்பாலான மங்கள ச்லோகங்கள் வணக்கத்தைத் தெரிவிப்பதாகவே அமைந்துள்ளன. சில மங்கள ச்லோகங்கள் உலகில் எல்லோருக்கும் நன்மை ஏற்படட்டும் என்ற வாழ்த்துக்களின் வடிவில், ஆசீர்வாத ப்ரார்த்தனையாக அமைந்திருக்கும். நல்விருப்பங்கள் நிறைவேற நல்வார்த்தைகளைக் கூறுதல் மங்கள ச்லோகமாக அமையும். இறைவன் இருக்கிறார் என்று கூறுவதே ஒரு மங்கள ச்லோகம். வஸ்து இருக்கிறது என்பதைத்தான் ஆதிசங்கரர் தன்னுடைய கீதை வ்யாக்யானத்தில் மங்கள ச்லோகமாக இயற்றியிருக்கிறார். உலகு ஆதிபகவன் முதற்றே என்று தொடங்குகிறார் திருவள்ளுவர். அதில் வணக்கமோ, ப்ரார்த்தனையோ இல்லை. மெய்ப்பொருள் இருக்கிறது என்று கூறியதாலேயே, அதனை எண்ண வேண்டும், போற்ற வேண்டும் என்ற கருத்துக்கள் புரிந்துகொள்ளப்படுகின்றன.

## மங்கள ச்லோகத்தின் நோக்கம்

நூலாசிரியரின் உள்ளத்தில் நல்ல கருத்துக்கள் தோன்ற வேண்டும். தோன்றிய கருத்துக்கள் நன்கு எழுத்துவடிவம்

பெற வேண்டும். எழுத்துவடிவம் பெற்று, நூலானது நன்கு நிறைவுபெற வேண்டும். (நூலை இயற்றிக்கொண்டே இருப்பது குறிக்கோளல்ல). இந்நூல் மக்களிடையே நன்கு சென்று பரவ வேண்டும். இந்நூலானது அனைவருக்கும் நன்மை பயக்க வேண்டும். எத்தனையோ காலமாக இந்நூலையும், நூலைக் கற்கும் பரம்பரையும் காப்பாற்றப்பட்டு வந்திருப்பதை நாம் நன்கு உணர்ந்துகொள்ளலாம். நாமும் இந்நூலை நன்கு கற்று, உள்வாங்கி, மெய்ப்பொருளை உணர்ந்து, அத்தத்துவத்தில் நிலைத்திருந்து, பிறருக்கும் உரைத்து, இந்த ஞானப்பரம்பரையைக் காப்பாற்ற வேண்டும் என்ற ப்ரார்த்தனையோடு கற்கத் தொடங்குகிறோம்.

**वासुदेवेन्द्रयोगीन्द्रं नत्वा ज्ञानप्रदं गुरुम्।**
**मुमुक्षूणां हितार्थाय तत्त्वबोधोऽभिधीयते॥**

**வாஸுதேவேந்த்ரயோகீந்த்ரம் நத்வா ஜ்ஞாநப்ரதம் குரும்।**
**முமுக்ஷூணாம் ஹிதார்த்தாய தத்த்வபோதோऽபிதீயதே॥**

**ஜ்ஞாநப்ரதம்** - மெய்யறிவை அருளக்கூடிய, **குரும்** - குருவாகிய, **வாஸுதேவேந்த்ர யோகீந்த்ரம்** - ஞானயோகிகளுள் தலைசிறந்தவராக விளங்கும் ஸ்ரீவாஸுதேவந்த்ரரை, **நத்வா** - நன்கு போற்றி வணங்கி, **முமுக்ஷூணாம் ஹிதார்த்தாய** - மோக்ஷத்தை அடைய வேண்டும் என்ற பேராவல் கொண்டவர்களின் நலனுக்காக, **தத்த்வபோத:** - தத்த்வபோதம் என்ற பெயருடைய இந்நூலானது, **அபிதீயதே** - உபதேசிக்கப்படுகிறது.

*மெய்யறிவை அருளக்கூடிய குருவாகிய ஞானயோகிகளுள் தலைசிறந்தவராக விளங்கும் ஸ்ரீவாஸுதேவந்த்ரரை நன்கு போற்றி வணங்கி, மோக்ஷத்தை அடைய வேண்டும் என்ற பேராவல் கொண்டவர்களின் நலனுக்காக, தத்த்வபோதம் என்ற பெயருடைய இந்நூலானது உபதேசிக்கப்படுகிறது.*

## தெளிவுரை

உலகில் பெரும்பாலான மனிதர்கள் பொருளையும் இன்பத்தையுமே நாடுகிறார்கள். பொருளும் இன்பமும் இரும்பு விலங்குகள், அறம் பொன்விலங்கு. இரண்டு வகை விலங்குகளும் தனக்கு வேண்டாம், தனக்கு மோக்ஷமே வேண்டும் என்று, அதன்பொருட்டு தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணிப்பவனுக்கு முமுக்ஷு என்று பெயர். இந்த ச்லோகமானது, ஸ்ரீகுருவை வணங்கித் தொடங்குகிறது. மெய்யறிவைப் பேரன்புன் வழங்குவதாலேயே ஸ்ரீகுருவானவர் போற்றப்படுகிறார். அதனோடு அநுபந்த சதுஷ்டயம் (ஒன்றோடு ஒன்று தொடர்புடைய நான்கு கருத்துக்கள்) எனப்படும், சாஸ்த்ர நூல்களின் தொடக்கத்தில் கூறப்படும் கருத்துக்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது.

### அநுபந்த சதுஷ்டயம்

1. **அதிகாரி** (வேதாந்தம் கற்பதற்குரிய தகுதி) :
   **முமுக்ஷு** (மோக்ஷத்தை விரும்புபவனே தகுதி பெற்றவன்)

2. **விஷயம்** (நூலின் பொருள்) :
   **தத்த்வபோதம்** (மெய்ப்பொருளைப் பற்றிய அறிவு)

3. **ப்ரயோஜநம்** (நூலின் பயன்) :
   **மோக்ஷம்** (பிறவிச்சூழலிலிருந்து விடுதலை)

4. **ஸம்பந்தம்** (நூலைக் கற்பவனுக்கும் நூற்பொருளுக்கும் உள்ள தொடர்பு): மோக்ஷத்தை உணர விரும்புபவன், இந்நூலைக் கற்றால் மோக்ஷத்தை உணரலாம்.

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:




# அதிகாரி விசார:

## (வேதாந்தம் கற்பதற்குரிய தகுதிகளைப் பற்றிய அறிவைப் பெறுதல்)

## சாதன சதுஷ்டயம்

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

## साधनचतुष्टयसंपन्नाधिकारिणां मोक्षसाधनभूतं तत्त्वविवेकप्रकारं वक्ष्यामः।

**ஸாதநசதுஷ்டயஸம்பந்நாதிகாரிணாம் மோக்ஷஸாதநபூதம் தத்த்வவிவேகப்ரகாரம் வக்ஷ்யாம:।**

**ஸாதந சதுஷ்டய** - (வேதாந்தம் கற்பதற்குரிய) நான்குவித ஸாதனங்களாகிய, **ஸம்பந்நாதிகாரிணாம்** - தகுதிகளை நன்கு உடையவர்களுக்கு, **மோக்ஷஸாதநபூதம்** - மோக்ஷத்தை உணர்வதற்குக் காரணமாக விளங்கக்கூடிய, **தத்த்வ விவேக ப்ரகாரம்** - தத்துவங்களைப் பகுத்து ஆராயும் முறையை, **வக்ஷ்யாம:** - கூறுவோமாக!

*(வேதாந்தம் கற்பதற்குரிய) நான்குவித ஸாதனங்களாகிய தகுதிகளை நன்கு உடையவர்களுக்கு, மோக்ஷத்தை உணர்வதற்குக் காரணமாக விளங்கக்கூடிய, தத்துவங்களைப் பகுத்து ஆராயும் முறையைக் கூறுவோமாக!*

## தெளிவுரை

மோக்ஷத்திற்குக் காரணம் தத்துவ விசாரம். தத்துவ விசாரம் செய்வதற்குரிய தகுதி ஸாதந சதுஷ்டயம் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

ஸாதந சதுஷ்டயம் எனப்படும் நான்குவித தகுதிகளை நூலாசிரியரே விளக்கிக் கூறப் போகிறார்.

சிஷ்யனின் கேள்வி: **साधनचतुष्टयं किम्?**
**ஸாதநசதுஷ்டயம் கிம்?**

குருவின் பதில்: **नित्यानित्यवस्तुविवेकः।**
**इहामुत्रार्थफलभोगविरागः।**
**शमादिषट्कसंपत्तिः।**
**मुमुक्षुत्वं चेति।**

**நித்யாநித்யவஸ்துவிவேக:।**
**இஹாமுத்ரார்த்தபலபோகவிராக:।**
**ஶமாதிஷட்கஸம்பத்தி:।**
**முமுக்ஷுத்வம் சேதி।**

**ஸாதந சதுஷ்டயம் கிம்?** – ஸாதந சதுஷ்டயம் என்றால் என்ன?

**நித்யாநித்யவஸ்துவிவேக:** – எது நிலையானது, எது நிலையற்றது என்பதைப் பற்றிய பகுத்தறிவு.

**இஹாமுத்ரார்த்தலபோகவிராக:** – மண்ணுலகிலும் விண்ணுலகிலும் உள்ள இன்பப் பொருட்களில் பற்றற்ற தன்மை.

**ஶமாதிஷட்கஸம்பத்தி:** – ஶமம் முதலான ஆறுகுணங்கள்.

**முமுக்ஷுத்வம் சேதி** – முக்தியை உணர வேண்டும் என்ற பேராவல் ஆகியவை (ஸாதந சதுஷ்டயம் எனப்படும்).

**ஸாதந சதுஷ்டயம் என்றால் என்ன?**

*எது நிலையானது, எது நிலையற்றது என்பதைப் பற்றிய பகுத்தறிவு; மண்ணுலகிலும் விண்ணுலகிலும் உள்ள இன்பப் பொருட்களில் பற்றற்ற தன்மை; ஶமம் முதலான*

*ஆறுகுணங்கள்; முக்தியை உணர வேண்டும் என்ற பேராவல் ஆகியவை ஸாதந சதுஷ்டயம் எனப்படும்.*

## தெளிவுரை

**ஸாத்யம்** = குறிக்கோள் **ஸாதனம்** = குறிக்கோளை அடைவதற்குரிய வழிமுறை, கருவி

மோக்ஷமே நம்முடைய குறிக்கோள். அதனை அடைவதற்கு தத்துவத்தை விசாரம் செய்ய வேண்டும். தத்துவ விசாரத்திற்கு ஸாதனம், ஸாதந சதுஷ்டயம் எனப்படும் இந்த நான்கு தகுதிகள். இந்நான்கையும் நூலாசிரியரே மேலும் விளக்கிக் கூறப் போகிறார்.

கேள்வி: **नित्यानित्यवस्तुविवेकः कः?**
**நித்யாநித்யவஸ்துவிவேக: க:?**

பதில்: **नित्यवस्त्वेकं ब्रह्म तद्व्यतिरिक्तं सर्वमनित्यम्।**
**अयमेव नित्यानित्यवस्तुविवेकः।**
**நித்யவஸ்த்வேகம் ப்ரஹ்ம தத்வ்யதிரிக்தம் ஸர்வமநித்யம்।**
**அயமேவ நித்யாநித்யவஸ்துவிவேக:।**

**நித்யாநித்யவஸ்துவிவேக: க:?** - நித்யாநித்யவஸ்து விவேகம் என்றால் என்ன?

**நித்யவஸ்து** - யாண்டும் நிலையாக உள்ள பொருள், **ஏகம் ப்ரஹ்ம** - ஒன்றேயான மெய்ப்பொருளாகும். **தத் வ்யதிரிக்தம்** - அந்த மெய்ப்பொருளுக்கு வேறாக உள்ள, **ஸர்வம்** - அனைத்தும், **அநித்யம்** - நிலையற்றவை. **அயமேவ** - இவ்வாறு பகுத்தறிந்து உணர்ந்துகொள்வதே, **நித்யாநித்யவஸ்துவிவேக:** - நித்யாநித்யவஸ்து விவேகம் எனப்படும்.

**நித்யாநித்யவஸ்து விவேகம் என்றால் என்ன?**

*யாண்டும் நிலையாக உள்ள பொருள், ஒன்றேயான மெய்ப்பொருளாகும். அந்த மெய்ப்பொருளுக்கு வேறாக உள்ள அனைத்தும் நிலையற்றவை. இவ்வாறு பகுத்தறிந்து உணர்ந்துகொள்வதே நித்யாநித்யவஸ்து விவேகம் எனப்படும்.*

## தெளிவுரை

**விவிச்ய ஜாநாதி இதி விவேக:।**

பகுத்து அறிவதால் விவேகம் எனப்படுகிறது.

இது கனி என்பது அறிவு; இது காய், இது கனி என்று பிரித்தறிவது பகுத்தறிவு.

பொதுவாக, விவேகம் நான்குவகையாகக் கூறப்படும் : லௌகிக விவேகம் (உலகியல் பகுத்தறிவு), தர்மாதர்ம விவேகம் (எது அறம், எது மறம் என்பது குறித்த பகுத்தறிவு), நித்யாநித்ய வஸ்து விவேகம் (நிலையானது எது, நிலையற்றது எது என்பது பற்றிய பகுத்தறிவு), ஆத்ம அநாத்ம விவேகம் (எது ஆத்மா, எது அநாத்மா என்பதைக் குறித்த பகுத்தறிவு).

இங்கு நித்யாநித்ய வஸ்து விவேகமானது கூறப்படுகிறது.

இரண்டற்ற, ஒன்றேயான பரம்பொருள் மட்டுமே யாண்டும் இருக்கிறது. பிறவனைத்தும் ஒரு காலத்தில் இருந்து, மற்றொரு காலத்தில் இல்லாமல் போகின்றன.

### ப்ரஹ்ம

ப்ரஹ்ம என்றால் பெரிய பொருள் (ப்ருஹத் தமத்வாத் ப்ரஹ்ம।) என்று அர்த்தம். இவ்வுலகில் பெரிய பொருள், சிறிய பொருள்

ஆகிய எல்லாவற்றிற்கும் ஆதாரமான பெரிய பொருள் ப்ரஹ்மமாகிய பரம்பொருள்.

ப்ரஹ்ம என்ற சொல்லுக்கு இங்கு நான்முகக் கடவுள் என்று பொருளல்ல. அவர் ப்ரஹ்மா.

ஸம்ஸ்க்ருதத்தில் சொற்களைச் சார்ந்தே பால்வேற்றுமை அமைகிறது. சொற்களுக்கு ஆண்பால் (புல்லிங்க:), பெண்பால் (ஸ்த்ரீலிங்க:), ஒன்றன்பால் (நபும்ஸகலிங்க:) ஆகிய மூன்று பாலினங்கள் கூறப்படுகின்றன.

ப்ரஹ்மா என்பது ஆண்பாற்சொல். ப்ரஹ்ம என்பது ஒன்றன்பால் சொல்.

## நித்ய அநித்ய வஸ்து விவேகம்

எது நிலையானது, எது நிலையற்றது என்று பகுத்தறிவதே வேதாந்த பாடத்தின் அஸ்திவாரமாகும். சற்று ஆராய்ந்தால், நம்முடைய அத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம், நம்மிடம் தெளிவான பகுத்தறிவு இல்லாததுதான் என்பது விளங்கும்.

உலகில் பெரும்பாலான மக்கள் நிலையாமையை உணராதவர்களாகவே இருக்கிறார்கள். கல்வி, செல்வம், பதவி, அழகு, இளமை, உறவுகள் போன்றவற்றை நிலையானவை என்று கருதி, இன்பத்திற்காக அவற்றைச் சார்ந்து வாழ்கிறார்கள். ஆனால் உலகில் அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கின்றன. இடையறாத மாற்றமே வாழ்வின் இயல்பாக இருக்கிறது. மாறிக்கொண்டே இருக்கின்ற தன்மை நம்முடைய மனதிற்கு அச்சத்தை ஊட்டுகிறது. உலகில் நமக்கு ஏற்படுகின்ற அத்தனைவித அனுபவங்களும் நிலையற்றவை.

நிலையான மெய்ப்பொருள் நம்முடைய கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாததாக இருக்கிறது. நம்முடைய கண்ணுக்கும் கருத்திற்கும் எட்டுபவை அனைத்தும் நிலையற்றவையாகவே இருக்கின்றன.

நாம் இன்பத்திற்காக சார்ந்திருக்கும் நிலையற்ற தன்மையுடைய அனைத்தும் ஒருநாள் நம்மை விட்டு நீங்கிவிடும். அல்லது, நாம் அவற்றை விட்டு விலகிவிடுவோம்.

வாழ்வில் மாறி மாறி அநித்ய பொருளைத்தான் பற்றிக்கொள்கிறோம். அதாவது ஒரு அநித்யத்தை விட்டுவிட்டு மற்றொரு அநித்யத்தைப் பற்றிக்கொள்கிறோம். கிலுகிலுப்பை முதலிய விளையாட்டுப் பொருட்களை விட்டுவிட்டு, பணம், புலனின்பப் பொருட்கள், உறவுகள் போன்ற அநித்யங்களைப் பற்றிக்கொள்கிறோம்.

இதைத்தான் ஆதிசங்கரர்,

‘‘சிறுவயதில் விளையாட்டில் பற்று, இளமையில் பெண்மீது விருப்பம், முதுமையிலோ கவலையில் பற்று - நிலையான பரம்பொருளைப் பற்றிக்கொள்பவர்கள் யார்?’’ என்று பஜ கோவிந்தத்தில் கேட்கிறார். மாணிக்கவாசகர் கூறுவதைப்போல், பொய்ம்மையே பெருக்கி, பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையர்களாக நிலையற்ற பொருட்களைப் பற்றிக்கொண்டிருக்கிறோம்.

எவை அநித்யமானவை என்று அறிந்துகொண்டால் மட்டும் போதாது. அநித்யமானவற்றிலிருந்து விலகுவதற்கு, அதனை விடுவதற்குரிய நெஞ்சுறுதி வேண்டும்.

பழக்கத்தினால், அநித்யம் என்று தெரிந்தும் உலகில் பலவற்றை நாம் சார்ந்திருக்கிறோம். எனவே, வாழ்வில் துன்பம் என்பது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

வாழ்வின் நிலையாமையை உணர்ந்துகொள்ளவில்லை என்றால், வேற்றுமையிலும் துன்பத்திலும் உழல்வதைத் தவிர வேறு வழியில்லை.

நிலையாமையை உணர்ந்தவர்களே வேற்றுமை உணர்ச்சியிலிருந்து விடுபட முடியும். எல்லாம் நிலைத்திருப்பவை என்ற தவறான எண்ணத்தினால்தான்

உலகில் பறித்தலும் சண்டை போடுதலும் பழிவாங்குதலும் நிகழ்கின்றன. நிலையாமையை நன்குணர்ந்தவன், தன்னிடமிருப்பவற்றையெல்லாம் பிறருக்கு வாரி வழங்குவான்.

''நிலையற்ற செல்வத்தைப் பெற்றால், நிலையான அறங்களை உடனே செய்து விடுக'' என்று அறிவுறுத்துகிறார் திருவள்ளுவர்.

ஸ்ரீராமர் பதினான்கு வருட வனவாஸத்திற்குப் பிறகு மீண்டும் அயோத்திக்குத் திரும்புவதற்கு முன்னர், ஹநுமனை அனுப்பி, பரதனுக்கு ஆட்சிபுரிவதில் விருப்பம் இருக்கிறதா என்று தெரிந்து வருமாறு பணித்தார். அவ்வாறு பரதனுக்கு விருப்பம் இருக்குமாயின், தான் வனத்திலேயே தங்கிவிட முடிவுசெய்திருந்தார். ஆனால் பரதன் தீயில் குதிக்கத் தயாராக இருப்பதை அறிந்து மீண்டும் அயோத்திக்கு வந்தார் ஸ்ரீராமர்.

பதினான்கு வருடங்கள் ஆட்சி செய்தும் பரதனுக்கு ஆட்சியின் மீது பற்று ஏற்படவில்லை. அறத்திலேயே அவன் கவனம் முழுவதும் இருந்தது. அரசாட்சி நிலையற்றது, அறமே நிலையானது என்று அறிந்து வைத்திருந்தான் பரதன்.

பரம்பொருள் ஒன்றே நிலையானது. அது காலத்தைக் கடந்தது, காலத்திற்குக் கட்டுப்படாதது. பரம்பொருளுக்கு வேறான பிறவனைத்தும், ஒரு காலத்தில் இருந்து, மற்றொரு காலத்தில் இல்லாமல் போகக்கூடியவை.

நிலையான மெய்ப்பொருளைப் பற்றி வேத சாஸ்த்ரங்கள், ரிஷிகள், மஹான்கள் அனைவரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

பரம்பொருள் மட்டுமே காலத்தால் வரையறுக்கப்படாதது. அது பிறவாதது, இறவாதது.

நிலையான மெய்ப்பொருள் தத்துவத்தைப் பற்றி இந்நூலில் மேலும் விரிவாகக் காணப் போகிறோம்.

## விவேகத்தை வளர்த்துக்கொள்வது எப்படி?

விவேகம் என்பது புண்ணியத்தினால் தோன்றுவது. உள்ளத்தில் விவேகம் வலிமை பெற வேண்டுமானால், அறத்தைக் கடைப்பிடித்து, புண்ணியத்தை நிறைய ஸம்பாதிக்க வேண்டும். நம்மிடம் பகுத்தறியக்கூடிய ஆற்றல் இருப்பினும், நம்முடைய அறிவை நிறைய அழுக்குகள் மூடியிருக்கின்றன.

''எப்பொழுது உன்னுடைய பகுத்தறியும் ஆற்றலானது அவிவேகம் என்னும் அழுக்கைக் கடக்குமோ, அப்பொழுது நீ வாழ்க்கையில் கேட்டதிலும் கேட்கப்போவதிலும் பற்றற்ற தன்மையை அடைவாய்'' என்று பகவான் கீதையில் கூறியிருக்கிறார்.

அநித்யத்தை விடுத்து, நித்யமானவற்றை நாடுகின்றவர்களைப் பார்த்து பலர் சிரிக்கிறார்கள். ஆனால், உண்மையில் நித்யத்தை நாடாமல், அநித்யத்தை நாடுவதே அறிவீனம், நகைப்புக்குரியதும் கூட.

உடல் நிலையற்றது என்பது நம்முடைய ஆழ்மனதில் நன்கு பதிவதில்லை.

அநித்யமானவை எவை என்று புரிய வேண்டுமென்றால், நித்யமானவற்றையும் அநித்யமானவற்றையும் பகுத்தறிந்து, அநித்யமானவற்றை விட்டு, நித்யமானதை நாடுகின்ற மஹான்களோடு பழக வேண்டும்.

யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை ஆகியவற்றைப் பற்றித் திருக்குறள், திருமந்திரம் போன்ற நூல்களில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றைக் கற்று உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் என்று தொடங்கி, திருநாவுக்கரசர் திருவாரூரில் அழகான பதிகம் ஒன்றைப் பாடியிருக்கிறார்.

''மனமே! ஓரிடத்தில் நிலைத்திருக்க வேண்டுமென்று நீ எண்ணினால், அதற்குரிய உபாயம் ஒன்று உண்டு. உலகைச் சார்ந்திருப்பதை விடுத்து, இறைவனைச் சார்ந்திருப்பாயாக. அதிகாலையில் திருக்கோயிலுக்குச் சென்று பெருக்கி, மெழுகி, மாலை கட்டி, வாயால் நல்ல பாடல்களைப் பாடி இறைவனைப் போற்றுவாயாக'' என்கிறார்.

''உடல் நிலையற்றது. உடலால் அனுபவிக்கக்கூடிய இன்பங்கள் அனைத்தும் முடிவில் துன்பத்தையே தருகின்றன. நிலையான, உண்மையான இன்பத்தை உணர்வதற்கு, நிலையற்ற உடலைப் பயன்படுத்திக்கொள்வாயாக'' என்று பகவான் கீதையில் கூறியிருக்கிறார்.

நிலையான மெய்ப்பொருளைப் பற்றிய அறிவை சாஸ்த்ரங்களின் வாயிலாகப் பெற்று, அதனைச் சார்ந்திருக்க இடையறாது முயல வேண்டும்.

நிலையற்ற பொருட்களைப் பற்றி அறிந்து அவற்றைப் பற்றிக் கொள்ளாமல் இருந்து பழக வேண்டும்.

விவேகத்தை வளர்த்துக்கொள்ள நிஷ்காம கர்மயோகத்தை மேற்கொள்ள வேண்டும். அதாவது, செயல்களில் விருப்பு வெறுப்பின்றி, செயல்களின் பலன்களிலும் விருப்பு வெறுப்பின்றி இறைவழிபாட்டுணர்வுடன் செயலாற்றக்கூடிய மனோபாவனையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

விவேகமானது ஸத்ஸங்கம் எனப்படும் நல்லாரிணக்கத்தினால் வலிமை பெறும். விவேகத்தின் பயனாக உள்ளத்தில் வைராக்யம் எனப்படும் பற்றற்ற தன்மை பிறக்கும்.

கேள்வி: **विरागः कः ? விராக: க:?**

விராகம் என்றால் என்ன ?

பதில்: **इहस्वर्गभोगेषु इच्छाराहित्यम्।**

**இஹஸ்வர்கபோகேஷு இச்சாராஹித்யம்।**

**இஹ** - இவ்வுலகிலும், **ஸ்வர்க** - விண்ணுலகிலும், **போகேஷு** - உள்ள இன்பங்களில், **இச்சாராஹித்யம்** - பற்றற்றிருத்தல்.

இவ்வுலகிலும் விண்ணுலகிலும் உள்ள இன்பங்களில் பற்றற்றிருத்தல்.

## தெளிவுரை

**விராகஸ்ய பாவ: வைராக்யம்।**

வைராக்யம் என்றால் பற்றற்ற தன்மை என்று பொருள். வைராக்யம் என்ற சொல்லுக்கு வீண் பிடிவாதம் என்று பொருளல்ல.

பற்றற்ற தன்மையாகிய வைராக்யம் எதனால் ஏற்படுகிறது ?

மண்ணுலக விண்ணுலக இன்பங்கள் நிலையற்றவை என்ற அறிவால் ஏற்படுவது வைராக்யம். இவ்வுலக இன்பங்களிலும், ஸ்வர்கலோக இன்பங்களிலும் விருப்பமற்ற தன்மையே வைராக்யம் எனப்படுகிறது.

பற்றற்ற தன்மைக்கு என்றால் உலகப் பொருட்களில் விருப்பு வெறுப்பில்லாமல் இருத்தல் என்று பொருள். பொருட்களை நாடுதலும் இல்லை, அவற்றை விட்டு ஓடுவதுமில்லை.

பற்றற்ற தன்மை மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்பவன் நசிகேதஸ். அவனுக்கு வைராக்யம் இருக்கிறதா என்பதை சோதித்துப் பார்க்க இவ்வுலகிலும் ஸ்வர்கத்திலும் உள்ள போகப் பொருட்களைக் கொடுப்பதாகக் கூறுகிறார் யமதர்மராஜா. அவை அனைத்தையும் மறுத்த நசிகேதஸ், இந்த போகப்பொருட்களினால் வருகின்ற குறைபாடுகளையும் தெளிவாகச் சுட்டிக்காட்டி, தன்னுடைய வைராக்யம் விவேகத்தில் உதித்தது என்பதை நிலைநாட்டுகிறான்.

பற்றற்ற தன்மையைப் பெற வேண்டுமானால், பற்றற்றான் பற்றினைப் பற்ற வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

## வைராக்யத்தை வளர்த்துக்கொள்ள வழி

**விஷய தோஷ தர்ஶநம் வைராக்யஸ்ய ஹேது:।**

வைராக்யத்தை வளர்த்துக்கொள்ள, உலக இன்பங்களில் உள்ள குறைபாட்டை நன்குணர்ந்துகொள்வது ஓர் உற்ற வழியாகும்.

இவ்வுலகில் நாம் அனுபவிக்கும் அனைத்து இன்பங்களிலும் மூன்றுவிதமான குறைபாடுகள் இருக்கின்றன.

1. **துன்பம் கலந்த தன்மை** (து:க்க மிஶ்ரிதத்வம்)
2. **நிறைவைத் தராத தன்மை** (அத்ருப்திகரத்வம்)
3. **அடிமைப்படுத்தும் தன்மை** (பந்தகத்வம்)

துன்பம் கலவாத, நிறைவே வடிவான, அடிமைப்படுத்தாத பேரின்பம் நம்முடைய இயல்பாக இருப்பதாக சாஸ்த்ரங்கள் எடுத்துரைக்கின்றன.

உலக இன்பங்களில் உள்ள மற்றொரு குறைபாடு, அது நிலையற்றது என்பதே. சாஸ்த்ரங்களிலிருந்து பெறும் நூலறிவு வாயிலாகவும், நம்முடைய அனுபவ அறிவாகிய பட்டறிவின் வாயிலாகவும் இதனை நாம் இணைத்துப் புரிந்துகொள்ள வேண்டும். வாழ்க்கையில் எவ்வளவு ஸாதித்த பிறகும், குறைகள் நீங்காமல் இருப்பதை அனுபவத்தில் உணர்கிறோம்.

குறை என்று தெரிந்த பிறகும், அதிலிருந்து விடுபட முடியாத இயலாமை நம்மிடம் இருக்கின்றது.

பஜகோவிந்தம், பட்டினத்தார் பாடல்கள், மஹான்களின் சரித்திரம் போன்றவற்றைப் படிப்பதால் உள்ளத்தில் வைராக்யம் வளரும்.

சாஸ்த்ரம் கூறுகின்ற உண்மைகள் புத்திக்குப் புரிந்தாலும், மனம் பழக்கத்தினால் புலனின்பப் பொருட்களையே நாடுகிறது. அத்தகைய மனதை நெறிப்படுத்த சில ஸாதனைகள் தேவைப்படுகின்றன.

மனதை நெறிப்படுத்துவதற்கு, புலனடக்கம் மிக முக்கியம். விவேகம், வைராக்யம் வந்த பிறகும், மனதில் சில ஒழுங்குமுறைகள், பண்புகள் இல்லையென்றால் அவை ஆடிப்போய்விடும். விவேக வைராக்யத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கே மற்ற ஸாதனைகள் கூறப்படுகின்றன. அடுத்து, ஶமாதி ஷட்க ஸம்பத்தி: எனப்படும் ஆறு பண்புகளைப் பற்றிக் கூறுகிறார் நூலாசிரியர். மனதிற்குள் நுட்பமாக இருக்க வேண்டிய குணங்களாதலால், இவை ஆறும் சேர்த்துக் குறிப்பிடப்படுகின்றன.

கேள்வி: **शमादिषट्कसंपत्तिः का ?**

**ஶமாதிஷட்கஸம்பத்தி: கா ?**

ஶமாதிஷட்கஸம்பத்தி என்றால் என்ன ?

**(குறிப்பு: சில நூல்களில் ஸமாதி ஸாதநஸம்பத்தி என்று உள்ளது)**

பதில் : **शमो दम उपरमस्तितिक्षा श्रद्धा समाधानं च इति।**

**ஶமோ தம உபரமஸ்திதிக்ஷா ஶ்ரத்தா ஸமாதாநம் ச இதி।**

ஶமம், தமம், உபரமம், திதிக்ஷை, ஶ்ரத்தை, ஸமாதாநம் என்பதாகும்.

கேள்வி: **शमः कः ? ஶம: க: ?**

ஶமம் என்றால் என்ன ?

பதில்: **मनो निग्रहः ? மநோ நிக்ரஹ: ?**

மனதை நெறிப்படுத்துதல்.

## தெளிவுரை

ஶமம் என்றால் மனவடக்கம், மனதை நெறிப்படுத்தி, அமைதிப்படுத்துதல், மனம் போன போக்கில் போகாமலிருத்தல் என்று பொருள்.

மனமானது தெளிந்த நீரோட்டம் போன்றிருக்க வேண்டும். மனதில் தரமான அளவான எண்ணங்கள் சரியான திசையில் இயங்க வேண்டும். (Quality of thoughts, quantity of thoughts, direction of thoughts).

மனமானது முதலில் புலனின்ப நாட்டத்திலிருந்து விடுபட வேண்டும். அவ்வாறு விடுபட்ட மனதை ஒருமுகப்படுத்த வேண்டும்.

புகைப்படக் கருவியை ஓரிடத்தில் வைத்து, பிறகு அதனைக் குவிப்பது போன்றது இது.

உலக விஷயங்களை விட்டுவிட்டு கோயிலுக்குள் நுழைகிறோம். கோயிலுக்குள் ஒரு குறிப்பிட்ட தெய்வத் திருவுருவத்தின் மீது நம்முடைய முழு கவனத்தையும் செலுத்துகிறோம். மனவடக்கம் அதைப் போன்றது.

மனதை விட்டுவிட்டால், அது தன் போக்கில் அலைந்துகொண்டுதானிருக்கும். அதனை அமைதிப்படுத்த நிறைய புண்ணியச் செயல்களில் ஈடுபட வேண்டும். பெரியவர்கள் இதற்காகத்தான் புண்ணியத்தை வலியுறுத்திச் சொல்கிறார்கள்.

மனம் குப்பைத் தொட்டியைப் போன்று கண்ட விஷயங்களும் வந்து விழுகின்ற இடமாக இருக்கக்கூடாது.

உள்ளத்தில் உள்ள எண்ணங்களைச் சீர்ப்படுத்தி, நெறிப்படுத்துவது என்பது வாழ்நாள் பயிற்சி.

எண்ணங்களைப் பொறுத்தவரையில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஒருவர் நம்மிடம் வந்து வளவளவென்று பேசினால், தேவையற்ற விஷயங்கள் மனதிற்குள் சென்றுவிடும். அவற்றை கவனமாக உள்வாங்கிக் கொள்ளாமல் நிறுத்திப் பழக வேண்டும். இல்லையென்றால், நம் கட்டுப்பாட்டையும் மீறி, தேவையற்ற எண்ணங்கள் நம்மை ஆளத் தொடங்கிவிடும். எனவே இதில் மிகுந்த விழிப்புணர்வு தேவை.

ஒரு விஷயத்தைப் பார்த்தவுடன் ஏற்படும் முதல் எண்ணம் நம்முடைய கட்டுப்பாட்டில் இல்லை. ஆனால் தொடர்ந்து அதைப் பற்றியே எண்ணிக்கொண்டிருப்பது நம் கையில்தான் இருக்கிறது. இங்குதான் பலர் கட்டுப்பாட்டை இழந்துவிடுகிறார்கள்.

மிதிப்பதை நிறுத்திவிட்டால் மிதிவண்டி நின்றுவிடும். அதுபோன்று, தேவையற்ற எண்ணங்களுடன் ஒத்துழைப்பதை நாம் நிறுத்தினால், அவை நின்றுவிடும்.

நான் இந்த குறிப்பிட்ட எண்ணத்தோடு ஒத்துழைக்க மாட்டேன் என்று மீண்டும் மீண்டும் மனதிற்குள் சொல்லிக்கொள்ள வேண்டும். தேவையற்ற எண்ணத்தை உதறித் தள்ளுவதற்குரிய வலிமை வேண்டும். இது மிகக் கடினமான ஒன்றுதான்.

இறை த்யாநம், ஸத்ஸங்கம், பாராயணம், ஜபம் முதலிய அனைத்து ஸாதனைகளும் மனதை நெறிப்படுத்துவதற்கென்றே அமைந்துள்ளன. அத்தகைய ஸாதனைளை இடைவிடாது பழகி, மனதை விஷயங்களின் பிடியிலிருந்து மீட்டெடுக்க வேண்டும்.

நாலாபக்கமும் அலைவது மனதின் இயல்புதான் என்றாலும், தானாக நடக்கிறது, தன் கட்டுப்பாட்டில் இல்லை என்று சொல்லக்கூடாது. மனதை நெறிப்படுத்தும் முயற்சியை நிறுத்திவிடக் கூடாது. எண்ணத்தினால் மனிதன் எத்தகைய கீழ்மையை அடைகிறான் என்று பகவான் கீதையில் கூறியிருக்கிறார்.

‘‘புலனின்பப் பொருளைப் பற்றிய எண்ணத்திலிருந்து பற்று தோன்றுகிறது. பற்றிலிருந்து ஆசை பிறக்கிறது. நிறைவேறாத ஆசை கோபமாக வடிவெடுக்கிறது. கோபத்தினால் மனிதன் மதிமயங்குகிறான். மதிமயக்கத்தினால் நினைவாற்றலை இழக்கிறான். நினைவாற்றலை இழப்பதால், அவனது சிந்திக்கும் ஆற்றல் செயலிழக்கிறது. அதன் விளைவாக, அவன் அழிந்துபோகிறான்.’’

எண்ணங்களை நெறிப்படுத்தவில்லையென்றால், நம்மிடம் எத்தகைய அறிவாற்றல் இருந்தும் அதனால் பயனில்லை.

பதஞ்ஜலி யோக ஸூத்ரம் முழுவதிலும் மனதை நெறிப்படுத்துவதற்குரிய உபாயங்கள் அடங்கியிருக்கின்றன.

நம்முடைய நன்மையின் பொருட்டு, நாம் மனதை நெறிப்படுத்தியே ஆக வேண்டும்.

மனம் ஒரு கருவி மட்டுமே, நம்மை அது ஆள ஒருபோதும் நாம் அனுமதிக்கக்கூடாது. மனம் என்பது ஒரு வேதியியல் நிகழ்வு என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

நாம் உண்கின்ற உணவில், ஓர் அம்சம் உடலாகவும், மற்றோர் அம்சம் தாதுவாகவும், வேறொரு ஸூக்ஷ்ம அம்சம் மனமாகவும் மாறுவதாக சாந்தோக்ய உபநிஷத் கூறுகிறது. அதனால்தான் உணவிற்கும் மனதிற்கும் தொடர்பு இருப்பதாகக் கூறுகிறார்கள்.

மனதில் எத்தகைய எண்ணங்கள் இடம்பெற வேண்டும் என்பதை தைத்திரீய உபநிஷத் அழகான உருவகத்தின் மூலம் கூறுகிறது. மனதை ஒரு மனிதனாக உருவகப்படுத்தி, யஜுர் வேதமே அவனது தலை. ரிக் வேதம் வலது கை, ஸாம வேதம் இடது கை, அதர்வண வேதம் கால் என்று த்யானிக்குமாறு கூறுகிறது. வேத வ்ருத்திகளே நம்முடைய உள்ளத்தில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதை இது உணர்த்துகிறது.

எந்த எண்ணம் நம்முடைய உள்ளத்தில் மேலோங்கியிருக்க வேண்டும் என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும்.

மனதைத் தூய்மைப்படுத்துவதும் மனதை நெறிப்படுத்துவதின் ஓர் அங்கமே ஆகும்.

காம: (பேராசை), க்ரோத: (பெருங்கோபம்), லோப: (பொருட்பற்று), மோஹ: (மதிமயக்கம்), மதம் (செருக்கு), மாத்ஸர்யம் (பொறாமை) எனப்படும் ஆறு அழுக்குகள் நம்முடைய மனதில் இடம்பெற்றிருக்கின்றன.

இந்த ஆறு பண்புகளுக்கும் மாறான நல்ல பண்புகளைக் கடைப்பிடித்துப் பழக வேண்டும். ஆசையை நீக்கிக்கொள்ள, மனதில் கிடைத்தவற்றில் த்ருப்தியை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

கோபத்திற்கு எதிராக பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும். பொருட்பற்றிலிருந்து விடுபட தானம் கொடுத்துப் பழக வேண்டும். அறியாமையிலும் மதிமயக்கத்திலிருந்தும் விடுபட தெளிந்த மெய்யறிவைப் பெற வேண்டும். கர்வத்தை வெற்றிகொள்ள, பணிவை வளர்க்க வேண்டும்.

பிறரை மனம் திறந்து பாராட்டுவதாலும், பிறரிடம் காணப்படும் சிறப்புகள் அனைத்தும் இறைவனுடைய மஹிமை என்று உணர்வதாலும் பொறாமையை வெல்ல முடியும்.

மனதை நெறிப்படுத்துவதற்கு உற்ற உபாயம், இந்த்ரியங்களை நெறிப்படுத்துவதே ஆகும். எனவே, அடுத்து தமம் எனப்படும் புலனடக்கம் ஸாதனையாகக் கூறப்படுகிறது.

கேள்வி : **दमः कः ? தம: க:?**

தமம் என்றால் என்ன?

பதில் : **चक्षुरादिबाह्येन्द्रियनिग्रहः।**

**சக்ஷுராதிபாஹ்யேந்த்ரியநிக்ரஹ:।**

கண் முதலான புற இந்த்ரியங்களை நெறிப்படுத்துதல்.

## தெளிவுரை

முதலில் மனதில் தோன்றும் எண்ணங்களை ஒழுங்குபடுத்த வேண்டும். அதற்கு மிக முக்கியமான வழி, இந்த்ரியங்களை நெறிப்படுத்துதலாகும். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து அறிவுக்கருவிகளின் வழியாக நம் மனதிற்குள் நுழையும் விஷயங்களைச் சற்று கவனித்துப் பார்க்க வேண்டும்.

அறத்தைக் கடைப்பிடித்து, அறவழியில் உள்ள இன்பங்களையே அனுபவிக்க வேண்டும். அவற்றிலும் மிதம் தேவை. புலன்களால் எவற்றை நுகர வேண்டும், எவற்றை நுகரக் கூடாது என்பதில் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும்.

இந்த்ரியங்களுக்கு விஷயங்களைக் கொடுக்காமல் இருந்தால், அது மன அழுத்தத்திற்குக் காரணமாகிவிடும், பிறகு மற்றொரு சமயத்தில் உணர்ச்சிகள் பொங்கி எழும் என்பது உண்மைதான்.

எனினும் புலனடக்கம் என்பது விவேகமும் வைராக்யமும் நிரம்பிய ஸாதகருக்குச் செய்யப்படும் உபதேசம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

உண்மையான பேரின்பத்தை உணர வேண்டுமானால், பிறவிச்சுழலிலிருந்து விடுபட வேண்டுமானால், கீழான சிற்றின்ப நுகர்ச்சிகளை ஒருவர் விட்டுத்தான் ஆக வேண்டும்.

பற்றற்ற தன்மையுடைய ஸாதகருக்கு புலனடக்கத்தை பழகுவது அத்தனை கடினமல்ல.

‘‘திட்பம் மிகுந்த அறிவு எனும் அங்குசத்தினால், மனதைச் சார்ந்து இயங்குகின்ற ஐம்பொறிகளாகிய ஐந்து யானைகளையும் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துபவன், உயர்ந்ததாகக் கருதப்படுகின்ற பேரின்பத்திற்கு சிறந்த காரணமாக விளங்குகிறான்’’ என்கிறார் திருவள்ளுவர்.

‘‘ஒரு பிறப்பில், ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால், அஃது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்புடையது’’ என்றும் கூறியுள்ளார்.

பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் பகவத்கீதையில் புலனடக்கத்தை இரண்டுவிதமாகக் கூறியுள்ளார். இதனை யஜ்ஞமாகவே கூறுகிறார். விஷயங்களை முறையாகக் கொடுக்கின்ற யஜ்ஞத்திற்கு விஷய க்ரஹண யஜ்ஞம் என்று பெயர். விஷயங்களைக் கொடுக்காமலேயே இருக்கின்ற யஜ்ஞத்திற்கு இந்த்ரிய ஸம்யம யஜ்ஞம் என்று பெயர்.

கைவல்ய நவநீதத்தில் புலனடக்கமானது, புறக்கரண தண்டம் என்று கூறப்படுகிறது. தண்டம் என்றால் தண்டித்தல். தேவையில்லாதவற்றைக் கொடுக்காமல் இருத்தல் என்று பொருள். அதாவது, பொறிகளால் உயிர் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை மட்டும் அனுபவித்துக்கொண்டிருத்தல்.

கண், காது, மூக்கு, நாக்கு, மெய் அனைத்தையும் இறைவழிபாட்டில் செலுத்த வேண்டும் என்பதற்காகவே திருஅங்கமாலை என்ற பதிகத்தை அருளியுள்ளார் திருநாவுக்கரசர்.

“பொறிவாயில்களில் (இந்த்ரிய கோளகங்களில்) ஆற்றல் இல்லையென்றால், அவை பயனற்றவையாகின்றன. அதுபோல, எட்டு குணங்களைச் சிறப்பாக உடைய இறைவனுடைய திருவடிகளைப் பணிந்து வணங்காத தலை முதலான உடல் உறுப்புகள் இருந்தும் பயனற்றவை” என்கிறார் திருவள்ளுவர்.

புலனடக்கம் பழகுவதற்கு, சீரிய அறவாழ்க்கையைக் கடைப்பிடித்தலே சிறந்த வழி. விருப்பு வெறுப்பை விடுத்து, செயல்களை இறைவழிபாட்டுணர்வோடு செய்யும் கர்மயோகமே சீரிய அறவாழ்க்கையின் வெளிப்பாடாகும்.

கேள்வி: **उपरमः कः? உபரம: க:?**

உபரமம் என்றால் என்ன?

பதில்: **स्वधर्मानुष्ठानमेव। ஸ்வதர்மானுஷ்டானமேவ।**

தனது கடமைகளைக் கடைப்பிடித்தலாகும்.

## தெளிவுரை

**உபரம:** என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் உள்ளன. அதில் ஒன்று, சடங்குபூர்வமாக துறத்தல் என்பது.

துறவு வாழ்க்கைக்குரிய நெறிமுறைகள் உபரம: என்ற சொல்லால் அழைக்கப்படும். பெற்ற மனவடக்கத்தையும், புலனடக்கத்தையும் விடாமல் கடைப்பிடிப்பது என்றும் பொருள் கொள்ளலாம்.

சிறிதுகூட நம்முடைய பாதையிலிருந்து விலகாது, உலக விஷயங்களில் மூழ்காது கவனமாக இருத்தல் உபரமம்.

ஏரி அல்லது ஆற்றின் கரை உடைந்துவிடாமல் கவனமாகப் பார்த்துக்கொண்டிருப்பதுபோல், மிகவும் கவனமாக நம்முடைய நடைமுறை வாழ்வின் செயல்பாடுகளில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எங்கேனும் வழி தவறிச் செல்கிறோமா என்ற விழிப்புணர்வு எப்பொழுதும் இருக்க வேண்டும். இதுவே உபரமம் எனப்படும். நாலாபக்கமும் சிதறுகின்ற புலன்கள், மனம் ஆகியவற்றோடு, நுட்பமான பரம்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபடுவதென்பது இயலாத காரியம்.

மனதையும் புலன்களையும் நெறிப்படுத்தினால் மட்டும் போதாது, அவற்றைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பயிற்சியும் வேண்டும்.

பரம்பொருள் தத்துவம் புறநோக்குடையவர்களால் எளிதில் உணரப்படாதது, அகநோக்குடையவர்களால் எளிதில் உணரப்படுவது என்று ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் கூறுகிறது.

கேள்வி : **तितिक्षा का? திதிக்ஷா கா?**

திதிக்ஷா என்றால் என்ன?

பதில் : **शीतोष्णसुखदुःखादिसहिष्णुत्वम्।**

**ஶீதோஷ்ணஸுகது:காதிஸஹிஷ்ணுத்வம்।**

குளிர், வெப்பம், இன்பம், துன்பம் முதலானவைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்.

## தெளிவுரை

இருமைகள் நிறைந்த புற வாழ்க்கைச் சூழல்களில் அதிகக் கவனம் செலுத்தக்கூடாது. பொறுமையைப் பற்றிக் கூறும்போது, சில நூல்களில் நோய்க்கு மருத்துவம் செய்துகொள்ளக்கூடாது என்று கூட சொல்லப்பட்டிருக்கிறது.

உடலுக்கு ஏற்படுகின்ற துன்பங்களைப் பொறுத்துப் பழகிக்கொள்ள வேண்டும். அனைத்துவித துன்பங்களையும் பொறுத்துக்கொண்டு, அதனை நீக்க முயற்சி செய்யாமல், கவலையோ புலம்பலோ இன்றி ஏற்றுக்கொள்வதற்குத்தான் திதிக்ஷை என்று பெயர். ஓயாமல் மாறிக்கொண்டிருக்கும் புறச்சூழ்நிலைகளையும், நம்முடைய உடல்நிலையையும் பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டே இருத்தலும், அவற்றை மாற்ற முயற்சித்தலும் மெய்ப்பொருள் ஆராய்ச்சிக்குத் தடைகளாகும்.

''பொறிகள் புலனின்பப் பொருட்களை நுகர்வதால் குளிர்-வெப்பம், இன்பம்- துன்பம் முதலான உணர்ச்சிகள் ஏற்படுகின்றன; தோன்றி மறையக்கூடியவையாகவும் நிலையற்றவையாகவும் இருக்கக்கூடிய அவற்றைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்'' என்று பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் உபதேசித்திருக்கிறார்.

வேதாந்த சாஸ்த்ரம் கூறும் நுட்பமான கருத்துக்களை நன்கு உள்வாங்கிக்கொள்வதற்கு மனம் அதிலேயே ஊன்றியிருக்க வேண்டும். வேறு எதிலும் நாட்டம் செலுத்தக் கூடாது. எனவே, புறச்சூழல்களில் ஸஹிப்புத்தன்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

கேள்வி : श्रद्धा कीदृशी? **ஶ்ரத்தா கீத்ருஶீ?**

ஶ்ரத்தை எத்தகையது?

பதில் : **गुरुवेदान्तवाक्यादिषु विश्वासः श्रद्धा।**

**குருவேதாந்தவாக்யாதிஷு விஶ்வாஸ: ஶ்ரத்தா।**

குரு, வேதாந்த வாக்யம் முதலானவைகளில் ஆழமான நம்பிக்கை கொள்ளுதல் ஶ்ரத்தையாகும்.

## தெளிவுரை

வேதாந்த சாஸ்த்ரம் கூறுபவையும், குருநாதர் உபதேசிப்பவையும் பொய்யல்ல, உண்மைதான் என்ற ஆழமான நம்பிக்கை ஒரு முக்கியமான தகுதியாகும்.

ச்ரத்தை என்ற சொல்லுக்கு மிக ஆழமான பொருள் இருக்கிறது. அது வெறும் மேலெழுந்தவாரியான நம்பிக்கையைக் குறிப்பிடவில்லை. மிக ஆழமான, அசைக்க முடியாத நம்பிக்கையைக் குறிக்கிறது.

நம்முடைய கண்களை நாம் நம்புவதைப்போல, ஏற்றுக்கொள்வதைப்போல, சாஸ்த்ரத்தையும் குருவின் உபதேசங்களையும் நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். குரு கூறுவது தற்போது புரியவில்லையென்றாலும், காலப்போக்கில் புரியும் என்ற உறுதியான எண்ணத்திற்குத்தான் ச்ரத்தை என்று பெயர்.

நம்முடைய சிற்றறிவிற்கு எட்டாத விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றன. காலப்போக்கில், விசாரத்தின்போது பல கருத்துக்கள் விளங்கும். விளங்கும்வரை, அவை உண்மை என்று நம்புவது ச்ரத்தை.

''ச்ரத்தையுடையவனே மெய்யறிவைப் பெறுகிறான்'' என்கிறார் பகவான் ஶ்ரீக்ருஷ்ணர்.

கேள்வி : **समाधानं किं ? ஸமாதாநம் கிம் ?**

ஸமாதாநம் என்றால் என்ன ?

பதில் : **चित्तैकाग्रता। சித்தைகாக்ரதா।**

மன ஒருமுகப்பாடு.

## தெளிவுரை

இங்கு ஸமாதானம் என்ற சொல்லுக்கு வழக்கமாகக் கூறப்படும் பொருள் அல்ல, அது மன ஒருமுகப்பாடு என்னும் உயரிய பண்பைக் குறிக்கிறது. த்யானத்தின் பயன் ஸமாதி அல்லது ஸமாதானம். மனமானது அறியப்படும் பொருளில் அல்லது த்யானிக்கப்படும் பொருளில் ஆழ்ந்துவிடுதல்.

இறைவனின் வடிவத்தில் அல்லது பரம்பொருள் தத்துவத்தில் மனம் ஒடுங்கிவிடுதல் ஸமாதி எனப்படும். நுணுக்கரிய நுண்ணுவர்வாக விளங்கும் பரம்பொருளைப் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டுமானால், மெய்யறிவைப் பெற வேண்டுமானால், ஒருமுகப்பட்ட மனம் மிக அவசியம்.

உலகியல் துறைகள் சார்ந்த அறிவைப் பெறுவதற்கே மிகுந்த மன ஒருமுகப்பாடு தேவைப்படும்பொழுது, மெய்ப்பொருள் ஆராய்ச்சிக்கு மன ஒருமுகப்பாடு தேவை என்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம். குறிப்பிட்ட நேரத்தில், மனதின் முன்பு ஒரு பொருள்தான் இருக்க வேண்டும். மனம் ஒரு நேரத்தில், குறிப்பிட்ட ஒரு விஷயத்தில்தான் கவனம் செலுத்த வேண்டும். த்யானத்தில் ஆழ்ந்து ஈடுபடுபவனுக்கு, த்யானம் நிகழ்வதே தெரியாது. அந்த அளவிற்கு மனம் ஒடுங்கி, ஒருமுகப்பட்டிருக்கும். மனதை எப்பொழுதும் தூய பரம்பொருளில் வைப்பதுதான் ஸமாதானம். மனம் கேட்பதையெல்லாம் கொடுத்து, அதனைக் கெடுப்பதல்ல.

மனம் ஒரு நல்ல வேலைக்காரன், ஆனால் மோசமான தலைவன் என்று சொல்வதுண்டு. மனதை வெல்பவனே வாழ்வில் வெற்றி பெறுகிறான். மனம் கேட்பதையெல்லாம் கொடுத்து, அதனைக் கெடுப்பவன் மிருகம். மிருகங்கள் காலால் நடக்கின்றன. மனிதன் தனது அறிவினால், அறவழியில் நடக்கக்கூடிய ஆற்றல் படைத்தவன்.

இவ்வாறு ஆறு பண்புகள் கூறப்பட்டன. நிலையற்ற விஷயங்களில் பற்றற்ற தன்மை வேண்டும் என்பதற்காக வைராக்யம் கூறப்பட்டது. நிலையான மெய்ப்பொருளை நாட

வேண்டும் என்பதற்காக முமுக்ஷுத்வம் என்ற தகுதியானது கூறப்படுகிறது.

கேள்வி : मुमुक्षुत्वं किम्? **முமுக்ஷுத்வம் கிம்?**

முமுக்ஷுத்வம் என்றால் என்ன?

பதில் : **मोक्षो मे भूयात् इति इच्छा।**

**மோக்ஷோ மே பூயாத் இதி இச்சா।**

எனக்கு முக்தி ஏற்பட வேண்டுமெனும் விருப்பம்.

## தெளிவுரை

மோக்ஷத்தை அடைய வேண்டும் என்ற ஆசைக்கு முமுக்ஷுத்வம் என்று பெயர். மெய்ப்பொருளை அறிந்து, தன்னுடைய இயல்பாக அதனை உணர்வதே முக்தி என்பது ஸித்தாந்தம். உண்மையை உணர விரும்புபவனுக்கு ஜிஜ்ஞாஸு என்று பெயர். முக்தியை உணர வேண்டும் என்ற ஆவலானது, உண்மையை உணர வேண்டும் என்ற ஆவலாக மாறுகிறது.

**एतत् साधनचतुष्टयम्। ஏதத் ஸாதநசதுஷ்டயம்।**

இதுவே ஸாதநசதுஷ்டயம்.

**ततस्तत्त्वविवेकस्याधिकारिणो भवन्ति।**

**ததஸ்தத்த்வவிவேகஸ்யாதிகாரிணோ பவந்தி।**

இதைப் பெற்ற பிறகே தத்வ விவேகம் செய்வதற்குத் தகுதி உடையவர் ஆகின்றனர்.

## தெளிவுரை

இவையே ஸாதந சதுஷ்டயம் எனப்படும் பண்புகள். இவற்றை அடைந்தவர்களே, தத்துவத்தைப் பகுத்து ஆராய்வதற்குரிய தகுதிகளைப் பெற்றவர்களாகின்றனர்.

உணவு உண்டால்தான் பசி தீரும். உணவு உண்ணவில்லையெனில் பசி தீராது. எனவே, பசி தீருவதற்கு உண்பதே வழி. அதுபோல, இந்த நான்கு தகுதிகளும் இருந்தால்தான் மெய்யறிவைப் பெற முடியும். இல்லையென்றால் மெய்யறிவைப் பெற முடியாது.

குருமுகமாக மெய்யறிவைப் பெறுவதற்கும், பெற்ற மெய்யறிவில் நிலைத்து நிற்பதற்கும் இந்த நான்கு தகுதிகள் மிக முக்கியம்.

இந்த நான்கு தகுதிகளும் ஒருவருக்கு இருந்தால், அவர் எக்குலத்தில் பிறந்திருந்தாலும் அவர் மோக்ஷத்திற்குத் தகுதி பெற்றவராகிறார்.

இத்தகுதிகள் இல்லையெனில், ஒருவர் எத்தகைய உயர்ந்த குலத்தில் பிறந்திருந்திருப்பினும், அவர் மோக்ஷத்திற்குத் தகுதி உடையவராக மாட்டார்.

தேசம், ஜாதி, வர்ணம், பாலினம் முதலிய எந்த வேற்றுமைகளும் இதற்கு இல்லை.


மனிதனாகப் பிறந்து, மோக்ஷத்தில் விருப்பமுடையவர்களாய் இருப்பதே முக்கியம்.

எவ்வித செயல்களும் நிகழ்வதற்கு ஸாதனம் தேவை. உடல், மனம், வாக்கு, சிந்தனை அனைத்தும் ஸாதனங்கள். வாக்கிற்குக் காரணம் சிந்தனை. சிந்தனைக்குக் காரணம், சாஸ்த்ரங்களின் வாயிலாகப் பெறப்படும் அறிவு.

மெய்ப்பொருள் அல்லாதவற்றை மெய்ப்பொருள் என்று தவறாக உணர்கின்ற மயக்க உணர்வால் சிறப்பில்லாத துன்பப் பிறவிகள் உண்டாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தத்துவ விவேக ப்ரகாரம் எனப்படும் தத்துவத்தை பகுத்தறியும் முறையே முழுமையான மன அமைதிக்கு ஸாதனமாகிறது. இந்தப் பகுத்தறிவு மிக முக்கியம்.

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:



# ஆத்ம விசார:

**ஆத்மாவைப் பற்றிய, அதாவது இம்மனித உடலில் வாழும் தன்னைப் பற்றிய ஆராய்ச்சி**

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

கேள்வி : तत्त्वविवेकः कः? **தத்த்வவிவேக: க:?**

தத்வ விவேகம் என்றால் என்ன?

பதில் : आत्मा सत्यं तदन्यत् सर्वं मिथ्येति।

**ஆத்மா ஸத்யம் ததந்யத் ஸர்வம் மித்யேதி।**

ஆத்மா மட்டுமே உண்மையானது. அதற்கு வேறான அனைத்தும் பொய்யானவை என்பதாகும்.

## தெளிவுரை

தத்துவம் என்றால் உள்பொருள் என்று அர்த்தம். ஐம்பூதங்கள், மனம், உடல் ஆகியவற்றையும் கூட தத்துவங்களாகக் கூறுவதுண்டு. பல்வேறு ஸித்தாந்தங்களில் 24 தத்துவங்கள், 96 தத்துவங்கள் போன்றவை பிரித்துக் கூறப்படுகின்றன.

தத்துவம் என்பது இறைவனை அழைக்கின்ற பெயர்களுள் ஒன்றாகும்.

தத் என்ற சொல் பரம்பொருளைக் குறிக்கிறது.

தஸ்ய பாவ: தத்த்வம்।

தத்துவம் என்ற சொல் பரம்பொருளின் தன்மையைக் குறிக்கிறது. தத் என்பது ப்ரதிபெயர்ச்சொல் (pronoun). ஸர்வநாம பதம் என்று ஸம்ஸ்க்ருதத்தில் கூறுவர். அது எல்லா வஸ்துவையும் குறிக்கும். (அவன், அவள், அது, இவன், இவள், இது போன்றவை ப்ரதிபெயர்ச் சொற்கள்). ஆத்மா ஒன்றே மெய்ப்பொருள், மற்றவையனைத்தும் பொய்ப்பொருள் என்று அறிந்துகொள்வதே தத்துவ விவேகமாகும்.

## ஸத்ய மித்யா விவேகம்

ஆத்மா ஒன்றே ஸத்யம். ஸத்யம் என்றால் வாய்மை என்று இங்கு பொருளல்ல, இருப்பது என்று பொருள். தூய இருப்புக்கு ஸத் என்று பெயர்.

எதனை அறிவால் அழிக்க முடியாதோ, அதுவே ஸத்யம் (தூய இருப்பு).

ஆத்மா ஒன்றே இருப்பது. அதற்கு வேறாக உள்ள அனைத்தும் அஸத்யமல்ல, மித்யா எனப்படும். மித்யா என்றால் வெறும் தோற்றம் என்று பொருள். அனுபவத்திற்கு உண்மையாகவும், அறிவுக்குப் பொய்யாகவும் இருப்பது மித்யா.

தங்கம் ஸத்யம், நகை மித்யா.

சொற்கள் இரண்டு, ஆனால் பொருள் ஒன்று. தங்கம்தான் உண்மையில் இருக்கிறது. நகை இருப்பதுமில்லை, இல்லாததுமில்லை. அது வெறும் பெயர் வடிவம் மட்டுமே. தங்கத்திற்கு வேறாக அதற்கு இருப்பு இல்லை.

ஸூர்யன் உதிக்கிறான், மறைகிறான் என்று கருதுவது மித்யா. அதாவது, அனுபவத்திற்கு உண்மையாகவும் அறிவுக்குப் பொய்யாகவும் இருப்பது மித்யா. மித்யை என்ற தோற்றத்தை அறிவால் அழித்துவிடலாம்.

ஸூர்யன் உதிப்பதுமில்லை, மறைவதுமில்லை என்பது ஸத்யம். அதனை அறிவால் அழிக்க முடியாது.

நான் மனிதன், இந்த மொழியைப் பேசுபவன், இந்த ஜாதியைச் சேர்ந்தவன், இந்நாட்டைச் சேர்ந்தவன் என்பது போன்ற அடையாளங்களனைத்தும் மித்யா.

எத்தனை சொற்களைக் கூறினாலும், நான் என்பது ஒருவனே. நான் என்ற சொல்லுக்கு இலக்காக இருப்பது பரம்பொருள், ப்ரஹ்மம். ப்ரஹ்மம் மட்டுமே உண்மை. மற்ற அனைத்தும் இருப்பதுமில்லை, இல்லாததுமில்லை. எனவே அவற்றை மித்யா என்று கூறுகிறோம்.

வேதத்தின் ஞானகாண்ட ஸாரமாக, அத்வைத வேதாந்த ஸாரமாக ஒரு முக்கியமான கருத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். பரம்பொருள் ஒன்றே உண்மை (யாண்டும் இருப்பதாகும்). உலகம் உண்மையும் பொய்யுமற்ற மாயத்தோற்றம். உயிராகிய ஜீவன் பரம்பொருளேயன்றி வேறில்லை. அனைத்து சாஸ்த்ரங்களும் இந்தக் கூற்றின் விரிவாக்கமே ஆகும்.

பொருளின் தன்மை எத்தகையதாக இருப்பினும் அதனை மெய்ப்பொருளாகக் காண்பதே அறிவாகும்.

சிறிய அலை, பெரிய அலை, தேங்கியுள்ள குளம், ஓடுகின்ற ஆறு - ஆகிய அனைத்தும் உண்மையில் நீர் என்று புரிந்துகொள்வதுபோன்று, அனைத்துப் பொருட்களிலும் உள்ள இருப்புத்தன்மையை உணர்ந்துகொள்ள வேண்டும்.

பொருளைப் பயன்படுத்திக்கொண்டே பொருளுக்குத் தருகின்ற உண்மைத்தன்மையை நீக்க வேண்டும். உடல் மனக் கூட்டமைப்பைப் பயன்படுத்திக்கொண்டே, அது உண்மையல்ல என்று நீக்க வேண்டும்.

நம்முடைய உறவினரின் உடலும் நம்முடைய உடலும் ஒரு நாள் இறந்துவிடுமே என்ற அச்சம் நம் எல்லோருக்கும் இருக்கிறது. உண்மையில் நம்முடைய வாழ்க்கையே உண்மையில்லை. நம்முடைய அனுபவம் உண்மைபோன்ற ஒரு தோற்றத்தைத் தருகிறது.

எவனுக்கு மெய்யறிவாகிய விழிப்பு ஏற்படுகிறதோ, அவன் இரண்டற்ற மெய்ப்பொருளைத் தவிர வேறு எதையும் மெய் என்று கருத மாட்டான். மெய்யறிவாளரைப் பொறுத்தவரை இந்த உலகம், இந்திர ஜாலம், கனவு, கானல்நீர் அவ்வளவே.

வாழ்வில் இருமை அனுபவங்கள் இருப்பதுபோன்ற ஒரு தோற்றம் இருக்கிறது. இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்து செல்கின்றன. இரண்டுமே உண்மையில்லை என்பதுதான் உண்மை.

இருமை உண்மையல்ல. இரண்டற்ற தன்மையை உடைய மெய்ப்பொருள் மட்டுமே உண்மை. அறிவால் அழிக்க முடியாதது ஸத்யம். அறிவால் அழிக்கப்படக்கூடியது மித்யா.

உலக வாழ்க்கை வெறும் தோற்றம், மித்யா என்று புரிந்த பிறகு, அதில் பற்றுக்கொள்ளுதல் அறிவீனம்.

நம்முடைய உடல், மனம், புத்தியில் பற்றுக்கொள்ளுதலும் அறிவீனம்.

## ஆத்ம விசாரத்தின் அவசியம்

ஆத்ம விசாரம் என்பது ஏதோ ஒரு பொருளைப் பற்றிய விசாரமல்ல, தன்னைப் பற்றிய விசாரம்.

எல்லோரும் தன்னிடமிருந்து தப்பித்துக்கொள்ள எண்ணுகிறார்கள். தனக்கு ஏன் துன்பம் வருகிறது என்பதை ஆராயாமல், துக்கத்தை மறக்க ஏதேதோ செய்துகொண்டிருக்கிறார்கள்.

சிலர் தன்னைப் பற்றியே பெருமையாகப் பேசிக்கொள்வதும், தன்னைப் புகழ்கின்ற கூட்டத்தை விரும்புவதுமாகப் பொழுதைக் கழிப்பர். இது தன்னிடமிருந்து தப்பித்துக்கொள்கின்ற முயற்சியே ஆகும்.

தன்னிடம் எத்தனையோ திறமைகள் இருக்கின்றன என்று அதிலேயே கவனம் செலுத்தி, தன்னிடமுள்ள அடிப்படை பிரச்சினையை மறைத்து மூடி விட முயல்வார்கள்.

தன்னைப் பற்றிய ஆராய்ச்சியானது மிக முக்கியம். உபநிஷத்தில் ஆத்ம விசாரம்தான் சிறப்பாக உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

கடவுள் வழிபாடு கூட தன்னிடமிருந்து தப்பிக்கின்ற முயற்சியே என்கிறது பௌத்த மதம். அதனால் அவர்கள் கடவுள் கொள்கையை ஏற்றுக்கொள்வதில்லை.

ஸநாதந தர்மத்தின் கூற்றுப்படி ஆத்ம ஞானத்தினால்தான் கடவுள் கொள்கையையும்கூட நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

உண்மையான பக்தி என்பது ஆத்ம ஞானத்தினால்தான் ஏற்படுகிறது. உயிராகிய நான், உயிருக்கு உயிரான இறைவனுக்கு அடிமை என்ற எண்ணத்துடன்தான் முதலில் பக்தி செய்யத் தொடங்குகிறோம்.

உயிராகிய ஜீவன் கண்ணுக்குத் தெரிவதில்லை. நம் உடலுக்கு வேறாக, நம்முடைய உடலில் உயிர் இருக்கிறது என்று அநுமானம் செய்கிறோம்.

முதலில் உயிர் இருக்கிறது என்று ஏற்றுக்கொண்டால்தான், உயிருக்கு உயிரான இறைவனை ஏற்றுக்கொள்ள முடியும். இல்லையென்றால், தாத்தா வழிபட்டார், ஊரில் வழிபட்டார்கள் என்ற அடிப்படையில் வெறுமனே பிறர் செய்தவற்றைப் பின்பற்றத்தான் முடியும். தன்னிடத்திலிருந்து ஒருபோதும் தப்பிக்கக்கூடாது. அதற்கு ஆத்ம விசாரம் மிக முக்கியம்.

## த்யாநம் ஸாதனமல்ல, விசாரமே ஸாதனம்

ஆத்ம தத்துவமானது, த்யானத்தில் கண்டுணர்கின்ற விஷயமல்ல, ஆராய்ச்சி செய்து புரிந்துகொள்வதே ஆகும்.

த்யானத்தின் நோக்கம், மனதை அமைதிப்படுத்தி, ஒருமுகப்படுத்துவதும், விரிவுபடுத்துவதும், தூய்மைப்படுத்துவதும், பண்புகளை வளர்ப்பதுமே ஆகும்.

பெற்ற ஞானத்தை ஆழ்மனதிற்குக் கொண்டு செல்லும் பயிற்சியில் த்யானம் உதவுகிறது. த்யானத்தின் வாயிலாக எவ்விதமான புதிய ஞானத்தையும் ஒருவர் பெற முடியாது.

குருநாதரிடம் அமர்ந்து தொடர்ந்து வேதாந்த சாஸ்த்ரங்களை முறைப்படி கற்றாலொழிய இந்த விஷயத்தில் தெளிவு ஏற்பட வாய்ப்பே இல்லை.

அங்குமிங்கும் பல நூல்களைக் கற்பதால் தொடக்க நிலையில் குழப்பமே மிஞ்சும். அரைகுறையாகக் கற்று, அதனை பிறருக்குக்கூறி, ஒரு குறிப்பிட்ட பரம்பரையை உருவாக்குபவர்கள், அறிவுரீதியான தீவிரவாதத்தில் இறங்குகிறார்கள். எனவே விசாரம் எனப்படும் முறையான ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

## ஞானத்தின் பயன்

மெய்ப்பொருளையும் பொய்ப்பொருளையும் பகுத்தறிவதன் வாயிலாகப் பொய்ப்பொருளில் பற்று நீங்குவதே ஞானத்தின் பயனாகும். இந்த உண்மை விளங்கிவிட்டால், தாமரை இலைத் தண்ணீர் போல உலகில் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ முடியும்.

நான் மட்டுமே ஸத்யம். எனக்கு வேறாக இருக்கக்கூடிய உடல், மனம், புத்தி, உலகம் அனைத்தும் மாயத்தோற்றம். அவற்றை உண்மையென்றோ, பொய்யென்றோ விளக்கிக் கூற முடியாது.

உண்மையுமில்லாத, பொய்யுமில்லாத பொருளைத் தூக்கி எறிந்துவிட்டு, மெய்ப்பொருளைச் சார்ந்திருப்பதே நாம் செய்ய வேண்டியது.

நம்முடைய புறக்கண்கள் பொய்யை மெய்யென்று காட்டுகின்றன. அறிவுக்கண் கொண்டு பார்த்தால், ஆத்மா ஒன்றே மெய் என்பது விளங்கும். உண்மையுமற்ற, பொய்யுமற்ற உலகிற்கு இருப்பாக இருப்பவள் அம்பிகை என்கிறது ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம்.

பொய்யானது, அறியும் வரை உண்மையைப் போன்று தோற்றமளிக்கிறது. அறிந்த பிறகு, அது தோன்றினாலும் அதற்கு மதிப்பில்லை.

உண்மையை உணர்ந்தவன், உலக நடைமுறை வாழ்வில் தேவையான அளவுதான் அவற்றிற்கு உண்மைத்தன்மை கொடுப்பான்.

மெய்ப்பொருளைப் பற்றிய அறிவு, மித்யையை ஆற்றல் இழக்கச் செய்துவிடும்.விளக்கு வெளிச்சம் போன்றது உலக அறிவு. உலகம் உண்மை என்று தோன்றுகிறது. ஆனால் மெய்யறிவோ ஸூர்யனைப் போன்றது. அதன் முன்னால், உலக அறிவு பொலிவிழந்துவிடும். உலகம் எத்தனை ஆற்றல் வாய்ந்ததாக, ப்ரஹ்மாண்டமாக இருப்பினும், ப்ரஹ்ம ஞானத்திற்கு முன்னால் அது நிற்காது.

ஏனென்றால், மித்யை என்பது அறிவால் அழிக்கப்படுவது.

நான் என்பது மட்டுமே ஸத்யம். நானும் நீயும் வேறல்ல என்று எண்ணுவது ஸத்யம். வேறு என்று எண்ணுவது மித்யா.

ஓர் உயிருக்கும் மற்றோர் உயிருக்கும் இடையே உள்ள வேற்றுமைகளனைத்தும் மித்யா.

நூல் ஸத்யம், ஆடை மித்யா.

தங்கம் ஸத்யம், ஆபரணங்கள் மித்யா.

இவ்வாறு ஒவ்வொரு பதார்த்தத்திலும் ஸத்யத்தையும் மித்யாவையும் பிரித்துச் சிந்திக்க வேண்டும்.

ஒரே பொருளில்தான் பொய்ப்பொருளும் மெய்ப்பொருளும் கலந்திருக்கின்றன. அதாவது, தங்கமும் நகையும் சேர்ந்தே இருக்கின்றன.

நம்முடைய மனம் எப்பொழுதும் மெய்ப்பொருளில் கவனம் வைக்க வேண்டும்.

மனம், புத்தி, உடல், பணம், பதவி, குடும்பம் போன்ற எவற்றிலும் அதிகக் கவனம் செலுத்தக்கூடாது. ஆத்மாவிலேயே கவனம் செலுத்த வேண்டும்.

கண் நகையைப் பார்த்தாலும், அறிவு அது தங்கம் என்பதை கவனிக்கிறது. அதுபோல, மனமானது உலகத்தைப் பார்த்தாலும், அறிவானது மெய்ப்பொருளைக் கவனிக்க வேண்டும்.

ஆத்மாவை ஸத்யமாகவும், அதற்கு வேறாக இருப்பவற்றை மித்யாவாகவும் அறிவதே தத்துவ விவேகமாகும்.

பொய்ப்பொருளையும் மெய்ப்பொருளையும் பிரித்தறிவதே தத்துவ விவேகம் எனப்படுகிறது.

கேள்வி: आत्मा कः ? **ஆத்மா க:?**

ஆத்மா என்றால் என்ன?

பதில்: **स्थूलसूक्ष्मकारणशरीराद् व्यतिरिक्तः पञ्चकोशातीतः सन् अवस्थात्रयसाक्षी सच्चिदानन्दस्वरूपः सन् यस्तिष्ठति स आत्मा।**

**ஸ்தூலஸூக்ஷ்மகாரணஶரீராத் வ்யதிரிக்த: பஞ்சகோஶாதீத: ஸந் அவஸ்த்தாத்ரயஸாக்ஷீ ஸச்சிதாநந்தஸ்வரூப: ஸந் யஸ்திஷ்டதி ஸ ஆத்மா।**

**ஸ்தூலஸூக்ஷ்மகாரணஶரீராத்** - ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களுக்கு, **வ்யதிரிக்த:** - வேறானதும், **பஞ்சகோஶாதீத: ஸந்** - ஐந்து கோசங்களுக்கு அப்பாற்பட்டதாக இருப்பதும், **அவஸ்த்தாத்ரயஸாக்ஷீ** - மூன்று அவஸ்தைகளுக்கு ஸாக்ஷியாகவும், **ஸச்சிதாநந்தஸ்வரூப: ஸந்** - ஸச்சிதானந்த வடிவமாகவும், **யஸ்திஷ்டதி** - உள்ளது எதுவோ, **ஸ ஆத்மா** - அதுவே ஆத்மாவாகும்.

*ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களுக்கு வேறானதும், ஐந்து கோசங்களுக்கு அப்பாற்பட்டதும், மூன்று அவஸ்தைகளுக்கு ஸாக்ஷியாகவும், ஸச்சிதானந்த வடிவமாகவும் உள்ளது எதுவோ அதுவே ஆத்மாவாகும்.*

## தெளிவுரை

ஆத்மா என்பது இங்கேயே இப்பொழுதே அறிந்துகொள்ளக் கூடிய ஒன்று. ஆத்மாவின் இலக்கணம் தெளிவாக உணர்த்தப்படுகிறது. ஆத்மா மூன்று சரீரங்களுக்கு வேறானது. ஐந்து கோசங்களுக்கு அப்பாற்பட்டது. மூன்று நிலைகளுக்கு ஸாக்ஷியாக இருப்பது. ஸச்சிதானந்த ஸ்வரூபமாக இருப்பது. இதில் கூறப்பட்ட அனைத்துச் சொற்களுமே வருகின்ற பகுதிகளில் விளக்கப்படுகின்றன.

கேள்வி : **स्थूल शरीरम् किम् ? ஸ்தூல ஶரீரம் கிம்?**

ஸ்தூல சரீரம் என்றால் என்ன?

பதில் : **पञ्चीकृतपञ्चमहाभूतैः कृतं सत्कर्मजन्यं सुखदुःखादिभोगायतनं शरीरं अस्ति जायते वर्धते विपरिणमते अपक्षीयते विनश्यतीति षड्विकारवदेतत्स्थूलशरीरम्।**

**பஞ்சீக்ருதபஞ்சமஹாபூதை: க்ருதம் ஸத்கர்மஜந்யம் ஸுகது:காதி போகாயதநம் ஶரீரம் அஸ்தி ஜாயதே வர்ததே விபரிணமதே அபக்ஷீயதே விநஶ்யதீதி ஷட்விகாரவதேதத் ஸ்தூலஶரீரம்।**

**பஞ்சீக்ருதபஞ்சமஹாபூதை: க்ருதம்** – பஞ்சீகரணம் செய்யப்பட்ட ஐவகை பெரும் பூதங்களால் ஆனதும், **ஸத்கர்மஜந்யம்** – நல்வினைப் பயனால் தோன்றியதும், **ஸுகது:காதி போகாயதநம்** – இன்ப துன்பங்களின் இருப்பிடமாகவும், **ஶரீரம் அஸ்தி ஜாயதே வர்ததே விபரிணமதே அபக்ஷீயதே விநஶ்யதீதி** – தாயின் வயிற்றில் இருத்தல், பிறத்தல், வளர்தல், மாறுதல், தேய்தல், மாய்தல் எனும், **ஷட்விகாரவதேதத் ஸ்தூலஶரீரம்** – அறுவகை மாற்றங்களுக்குட்பட்டதுமான இப்பருவுடல் ஸ்தூல சரீரம் எனப்படும்.

*பஞ்சீகரணம் செய்யப்பட்ட ஐவகை பெரும் பூதங்களால் ஆனதும், நல்வினைப் பயனால் தோன்றியதும், இன்ப துன்பங்களின் இருப்பிடமாகவும் தாயின் வயிற்றில் இருத்தல், பிறத்தல், வளர்தல், மாறுதல், தேய்தல், மாய்தல் எனும் அறுவகை மாற்றங்களுக்கு உட்பட்டதுமான இப்பருவுடல் ஸ்தூல சரீரம் எனப்படும்.*

## தெளிவுரை

ஸ்தூல சரீரம் என்றால் பருவுடல் (gross body, visible body) என்று பொருள். ஸ்தூலம் என்றால் இந்த இடத்தில் பருமனான உடல் என்று பொருளல்ல, எல்லோருடைய கண்ணுக்கும் தெரிகின்ற நம்முடைய உடல் என்று பொருள்.

பொதுவாக எல்லோரும் இந்த உடலைத்தான் நான் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

உடலைத் தான் என்று எண்ணும் எண்ணத்திற்கு தேஹாத்ம புத்தி என்று பெயர். அதாவது, தேஹத்தையே ஆத்மா என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

வீட்டில் நாம் வசிக்கிறோம். ஆனால் வீடு நாம் அல்ல. அதுபோல, உடலில் நாம் வசிக்கிறோம். உடல் நம்முடைய இருப்பிடம். உடல் நாமல்ல.

பருவுடல் நான் அல்ல என்பதைப் புரிந்துகொண்ட பிறகு, இதனை எப்படிக் கையாள வேண்டும் என்ற அறிவும் நமக்கு இருக்க வேண்டும்.

நம்முடைய வீட்டை நாம் எவ்வாறு தூய்மையாக, ஆரோக்யமான சூழல் மிக்கதாக பராமரிக்கிறோமோ, அப்படியே இந்த உடலையும் பேணிக் காக்க வேண்டும். ஆனால் இந்த உடல் மீது அளவுக்கு அதிகமான பற்றுதல் வைக்கக் கூடாது.

## பருவுடலின் பொதுக்காரணம்

இந்த உடல் பஞ்சீகரணம் செய்யப்பட்ட பஞ்சமஹாபூதங்களால் உருவானது. (பஞ்சீகரணம், வருகின்ற பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளது).

இந்த உடலுக்கு பொதுக்காரணம், ஐம்பூதக்கலவை எனப்படும் பஞ்சீகரணம் செய்யப்பட்ட ஐம்பூதங்கள்.

நம்முடைய உடல் உட்பட, ப்ரபஞ்சத்தில் உள்ள அனைத்துயிர்களின் உடல்களும் இவ்வாறுதான் உருவாக்கப்பட்டுள்ளன.

## பருவுடலின் சிறப்புக்காரணம்

இந்த உடலுக்குச் சிறப்புக் காரணம், நாம் முற்பிறவிகளில் செய்த நல்வினை. (ஸத்கர்ம ஜந்யம்।) நாம் பிறந்துள்ள குடும்பச்சூழல், இடம், பெற்றோர் ஆகிய அனைத்தும் நம்முடைய முற்பிறவியில் செய்த நல்வினை-தீவினைகளின் பயன்களாகும்.

## பருவுடலின் செயல்பாடு

இந்த உடல், இன்ப துன்பங்களை நுகர்வதற்குரிய இடமாக இருக்கிறது. உடலின் மூலமாகத்தான் வாழ்க்கையின் அனுபவங்களை நாம் உணர்கிறோம்.

## பருவுடலின் தன்மைகள்

தாயின் வயிற்றில் இருத்தல், பிறத்தல், வளர்தல், மாற்றங்களை அடைதல், தேய்தல், மறைதல் எனப்படும் ஆறு தன்மைகள் இந்த உடலுக்கு இருக்கின்றன. பருவுடலானது குழந்தைப்பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவம் போன்ற பருவங்களை உடையது. மாற்றங்களை உடைய இந்த உடல் அழியும்போது, அறிவாளி கலங்குவதில்லை என்று பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் கீதையில் உபதேசித்திருக்கிறார்.

உடல் திடீரென்று வளர்வதுமில்லை, திடீரென்றுத் தேய்வதுமில்லை. இதில் மாற்றங்கள் சிறிது சிறிதாக நிகழ்கின்றன.

கேள்வி: **सूक्ष्मशरीरं किम्?** **ஸூக்ஷ்ம ஶரீரம் கிம்?**

ஸூக்ஷ்ம சரீரம் என்றால் என்ன?

பதில்: **अपञ्चीकृतपञ्चमहाभूतैः कृतं सत्कर्मजन्यं सुखदुःखादिभोगसाधनं पञ्चज्ञानेन्द्रियाणि पञ्चकर्मेन्द्रियाणि पञ्चप्राणादयः मनश्चैकं बुद्धिश्चैका एवं सप्तदशकलाभिः सह यत्तिष्ठति तत्सूक्ष्मशरीरम्।**

**அபஞ்சீக்ருதபஞ்சமஹாபூதை: க்ருதம் ஸத்கர்மஜந்யம் ஸுகது:காதி போகஸாதநம் பஞ்சஜ்ஞாநேந்த்ரியாணி பஞ்சகர்மேந்த்ரியாணி பஞ்சப்ராணாதய: மநஶ்ஶைகம் புத்திஶ்ஶைகா ஏவம் ஸப்ததஶகலாபி: ஸஹ யத்திஷ்டதி தத்ஸூக்ஷ்மஶரீரம்।**

**அபஞ்சீக்ருதபஞ்சமஹாபூதை: க்ருதம்** - பஞ்சீகரணம் செய்யப்படாத ஐவகை பெரும்பூதங்களால் ஆனதும், **ஸத்கர்மஜந்யம்** - நல்வினைப்பயனால் தோன்றியதும், **ஸுகது:காதி போகஸாதநம்** - இன்ப துன்ப நுகர்ச்சிக்கு கருவியாயும், **பஞ்சஜ்ஞாநேந்த்ரியாணி பஞ்சகர்மேந்த்ரியாணி பஞ்சப்ராணாதய: மநஶ்ஶைகம் புத்திஶ்ஶைகா** - ஐந்து அறிவுக்கருவிகள், ஐந்து செயற்கருவிகள், ஐவகை ப்ராணன்கள், மனம் ஒன்றும், புத்தி ஒன்றும், **ஏவம் ஸப்ததஶகலாபி:** - இவ்வாறு பதினேழு கலைகளுடன், **ஸஹ யத்திஷ்டதி** - கூடியிருப்பது எதுவோ, **தத்ஸூக்ஷ்மஶரீரம்** - அது ஸூக்ஷ்ம சரீரம் (நுண்ணுடல்) எனப்படும்.

*பஞ்சீகரணம் செய்யப்படாத ஐவகை பெரும்பூதங்களால் ஆனதும், நல்வினைப்பயனால் தோன்றியதும், இன்ப துன்ப நுகர்ச்சிக்கு கருவியாயும் ஐந்து அறிவுக்கருவிகள், ஐந்து செயற்கருவிகள், ஐவகை ப்ராணன்கள், மனம் ஒன்றும், புத்தி ஒன்றும் இவ்வாறு பதினேழு கலைகளுடன் கூடியிருப்பது எதுவோ அது ஸூக்ஷ்ம சரீரம் (நுண்ணுடல்) எனப்படும்.*

## தெளிவுரை

ஸ்தூலத்திற்கு எதிர்ப்பதம் ஸூக்ஷ்மம். இது கண்ணுக்குத் தெரியாத உடல் (invisible body).

இந்த உடலும் மாறுதலுக்குட்பட்டதுதான். இதில் பஞ்சபூதங்கள் கலக்காமல் தனித்தனியே இருக்கின்றன.

### நுண்ணுடலின் பொதுக் காரணம்

இந்த உடலானது, பஞ்சீகரணம் செய்யப்படாத பஞ்சபூதங்களினால் உருவானது. (பஞ்சீகரணத்தைப் பற்றிய விளக்கம் வருகின்ற பகுதிகளில் கூறப்படும்).

பொதுக்காரணம் அனைத்துயிர்களுக்கும் பொதுவானது. சிறப்புக் காரணம், மனிதர்களுக்கு மட்டும் உரியது.

### நுண்ணுடலின் சிறப்புக் காரணம்

நல்வினைப்பயன் என்பதே சிறப்புக் காரணம். படித்தவன், படிக்காதவன், ஏழை, பணக்காரன் ஆகிய எல்லோரிடமும் ஏதோ ஓர் உயர்வு மனப்பான்மையோ, தாழ்வு மனப்பான்மையோ இருக்கிறது.

அது போன்ற மனப்பான்மைகள் தேவையில்லை என்கிறது சாஸ்த்ரம். அனைவருமே நல்வினைகளால்தான்

பிறந்துள்ளோம். புண்ணியமின்றி மனிதனாகப் பிறக்க முடியாது.

நம்முடைய உடலும் மனமும் புனிதமானவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

## நுண்ணுடலின் செயல்பாடு

உயிரானது இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்குக் காரணமாக, கருவியாக இருப்பது நுண்ணுடல். (பருவுடல் இருப்பிடமாக இருக்கிறது, நுண்ணுடல் கருவியாக செயல்படுகிறது).

பருவுடல் மைதானம் போன்றது. நுண்ணுடல் பந்து முதலான கருவிகளைப் போன்றது. உயிரானது, மைதானம் போன்ற பருவுடலில் இருந்தபடி, நுண்ணுடலின் வாயிலாக இன்ப துன்பங்களை அனுபவிக்கிறது.

இறைவன் உயிருக்கு தநு, கரண, புவன, போகங்களைக் கொடுத்திருப்பதாகக் கூறுவார்கள். தநு என்றால் பருவுடல், கரணம் என்றால் நுண்ணுடல், புவனம் என்பது உலகம், போகம் என்பது அனுபவங்கள் (புலன் நுகர்ச்சி).

## நுண்ணுடலின் தன்மை

ஐந்து அறிவுக்கருவிகள், ஐந்து செயற்கருவிகள், ஐந்து ப்ராணன்கள், மனம், புத்தி எனப்படும் பதினேழு அம்சங்களை உடையது. (இதனோடு சித்தம், அஹங்காரம் ஆகியவற்றையும் சேர்த்து பத்தொன்பது அம்சங்கள் என்றும் கூறுவதுண்டு.)

பத்தொன்பது அம்சங்கள் + பஞ்ச பூதங்கள் = இருபத்து நான்கு தத்துவங்கள்

என்று அத்வைத வேதாந்த ஸித்தாந்தத்தில் கூறப்படுகிறது.

நூலாசிரியர் இந்த அம்சங்களைப் பற்றி விரிவாக, தனித்தனியாக அடுத்துக் கூறுகிறார்.

**श्रोत्रं त्वक् चक्षुः रसना घ्राणम् इति पञ्चज्ञानेन्द्रियाणि।**

**ஶ்ரோத்ரம் த்வக் சக்ஷு: ரஸநா க்ராணம் இதி பஞ்ச ஜ்ஞாநேந்த்ரியாணி।**

காது, தோல், கண், நாக்கு, மூக்கு என ஐந்து அறிவுக் கருவிகள்.

## தெளிவுரை

கேட்கும் ஆற்றல், தொட்டுணரும் ஆற்றல், பார்க்கும் ஆற்றல், சுவைக்கும் ஆற்றல், முகரும் ஆற்றல் ஆகிய ஐந்தும் அறிவுக் கருவிகள் எனப்படும். இவை ஸூக்ஷ்மமானவை.

நம்முடைய கண் தெரிகிறதா இல்லையா என்பது நமக்கு மட்டுமே தெரியும்.

கண்களால் நிறத்தை அறிகிறோம்.

காதுகளால் ஒலியை அறிகிறோம்.

மூக்கால் மணத்தை அறிகிறோம்.

நாக்கால் சுவையை அறிகிறோம்.

தோலால் பொருளைத் தொட்டு அறிகிறோம்.

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவற்றை அறிவுக்கருவிகளின் வாயிலாக அறிகிறோம்.

நம்முடைய கண்ணுக்குத் தெரிகின்ற, மாம்ஸ பிண்டமான கண் ஸ்தூலமானது. ஆனால் கண்ணுக்குப் பின்னால் உள்ள பார்க்கும் சக்தி ஸூக்ஷ்மமானது.

இந்த்ரிய சக்தியானது வினைப்பயன்களைப் பொறுத்து, அவை கூடவோ குறையவோ செய்யும். முறை தவறிய உணவுப்பழக்கத்தினாலும் இது மாறுபடும்.

ஆயுர்வேதத்தில் நோய்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. உணவால் தோன்றும் நோய்கள், வினைகளால் தோன்றும்

நோய்கள். உணவால் ஏற்படும் நோய்களுக்கு மருந்து கொடுக்கப்படுகிறது. வினைகளால் ஏற்படும் நோய்களுக்கு பரிஹாரங்கள் சொல்லப்படுகின்றன.

### அறிவுக்கருவிகளுக்குரிய தேவதைகள்

**श्रोत्रस्य दिग्देवता। ஶ்ரோத்ரஸ்ய திக்தேவதா।**

காதிற்கு (அதிஷ்டான) தேவதை திசைகள்.

**त्वचो वायुः। த்வசோ வாயு:।**

தோலிற்கு வாயு.

**चक्षुषः सूर्यः। சக்ஷுஷ: ஸூர்ய:।**

கண்ணிற்கு ஸூர்யன்.

**रसनाया वरुणः। ரஸநாயா வருண:।**

நாக்கிற்கு வருணன்.

**घ्राणस्य अश्विणौ। க்ராணஸ்ய அஶ்விநௌ।**

மூக்கிற்கு அச்வினி தேவர்கள்.

**इति ज्ञानेन्द्रियदेवताः। இதி ஞாநேந்த்ரிய தேவதா:।**

இவ்வாறு அறிவுக்கருவிகளின் தேவதைகள் கூறப்பட்டன.

## தெளிவுரை

ஒவ்வொரு கருவிக்கும் அருள்புரிகின்ற தேவதைகள் இருக்கின்றன. இவையெல்லாம் உண்மையா என்று கேட்டால், சாஸ்த்ரம் பொய் கூறாது என்பதே அதற்குப் பதில். சாஸ்த்ரங்கள் கூறுவது பொய்யல்ல என்ற ஆழமான எண்ணத்திற்குத்தான் ச்ரத்தா என்று பெயர்.

நாம் நம்மிடமுள்ள வரையறைகளுடன் உலகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஐம்பொறிகளைக் கொண்டு, ஐம்புலன்களைத்தான் நுகர முடியும். அதற்கு அப்பாற்பட்டுள்ள விஷயங்களை நம்மால் க்ரஹிக்க முடியாது.

எல்லோருடைய கேட்கும் ஆற்றலையும் சேர்ந்து ஒரு தேவதையாகச் சொல்லப்படுகிறது. மொத்த ஆற்றலிலிருந்துதான் தனிப்பட்ட ஆற்றல் உருவாகிறது. ஸமுதாயத்தின் மொத்த ஆற்றலின் விளைவுதான் விஞ்ஞான கண்டுபிடிப்புகள்.

தேவதைகள் இருப்பதை ஏற்றுக்கொள்வதில் ஒரு தவறும் இல்லை. நாம் அவற்றை வழிபட்டால், நம்முடைய இந்த்ரியங்கள் தவறான வழியில் செல்லாமல், நன்கு செயல்புரியும்படி அவை பார்த்துக்கொள்ளும். புலனடக்கத்தை அருளும். நம்முடைய வழிபாட்டு முறைகளில் ந்யாஸம் முக்கிய இடம் பெறுகிறது. பூஜைக்கு முன்பு உடலின் உறுப்புக்களைத் தொடுதல் ந்யாஸம் எனப்படும்.

உடலில் தேவதைகளை எழுந்தருளச் செய்தல் ந்யாஸமாகும். அவை வெளிப்பட்டு, அவற்றிற்குரிய ஆற்றலை நன்கு அருள வேண்டும் என்ற ப்ரார்த்தனையுடன் ந்யாஸமானது செய்யப்படுகிறது.

அந்தந்த தேவதைகள் அந்தந்த இடங்களில் குடிகொண்டு, இந்த உடலை தெய்விக வழிபாட்டிற்குரியதாக ஆகட்டும். புனிதமுடையதாக இந்த உடல் ஆகட்டும் என்பதே அதன் உள்ளார்ந்த நோக்கம்.

‘என்னுடைய வாக்கில் அக்னிதேவதை குடிகொள்ளட்டும். வாக் ஹ்ருதயத்தில் இருக்கட்டும். ஹ்ருதயம் என்னிடம் இருக்கட்டும். நான் அமுதத்தில் திளைப்பேனாக. அமுதம் பரம்பொருளில் ஒடுங்கியிருக்கட்டும்.’ என்று ப்ரார்த்தனை செய்கிறது வேதம்.

*திசை தேவதை என் காதுகளுக்கு அருள்புரியட்டும்.*
*வாயு தேவதை என் தோலுக்கு அருள்புரியட்டும்.*
*ஸூர்ய தேவதை என் கண்ணுக்கு அருள்புரியட்டும்.*
*வருண தேவதை என் நாக்கிற்கு அருள்புரியட்டும்.*
*அச்வினீ தேவதைகள் என் மூக்கிற்கு அருள்புரியட்டும்*
*என்று ப்ரார்த்தனை செய்து, த்யாநம் செய்யலாம்.*

தேவர்கள் நம்முடைய புறக்கண்களுக்குத் தென்பட மாட்டார்கள். யோக சக்தியினால் அவர்களை அறிந்துகொள்ளலாம். அதற்கு யோகி ப்ரத்யக்ஷம் என்று பெயர்.

## அறிவுக்கருவிகளின் செயல்பாடுகள்

**श्रोत्रस्य विषयः शब्दग्रहणम्।**
**ஶ்ரோத்ரஸ்ய விஷய: ஶப்தக்ரஹணம்।**
காதிற்கு விஷயம் ஒலியை க்ரஹித்தல்.

**त्वचो विषयः स्पर्शग्रहणम्।**
**த்வசோ விஷய: ஸ்பர்ஶ க்ரஹணம்।**
தோலிற்கு விஷயம் தொடு உணர்ச்சி.

**चक्षुषो विषयः रूपग्रहणम्।**
**சக்ஷுஷோ விஷய: ரூபக்ரஹணம்।**
கண்ணிற்கு விஷயம் நிறத்தை க்ரஹித்தல்.

**रसनाया विषयः रसग्रहणम्।**
**ரஸநாயா விஷய: ரஸக்ரஹணம்।**
நாக்கிற்கு விஷயம் சுவையையறிதல்.

**घ्राणस्य विषयः गंधग्रहणम् इति।**
**க்ராணஸ்ய விஷய: கந்தக்ரஹணம் இதி।**
மூக்கிற்கு விஷயம் மணத்தை முகர்தல்.

## தெளிவுரை

உயிராகிய ஜீவாத்மாவை, நன்கு உலகத்தோடு பிணைத்து, தளைப்பது எதுவோ, அதற்கு விஷயம் என்று பெயர். (விஶேஷேண ஸிநோதி பத்நாதி இதி விஷய:।)

நல்ல கருத்துக்களைக் கேட்டு, தன்னைக் காத்துக்கொள்வதால், காதுக்கு ஶ்ரோத்ரம் என்று பெயர். (ஶ்ருத்வா த்ராயதே இதி ஶ்ரோத்ரம்।)

காதுக்கு அணிகலன் நிறைய கேட்டலே ஆகும். நலம் பயக்கும் கருத்துக்களை பெரியோர்களிடமிருந்து இடையறாது கேட்டலே ஒருவனுக்குப் பெருஞ்செல்வமாகும்.

நல்ல விஷயங்களைக் கேட்காதவன் இருந்தால் என்ன, இறந்தால் என்ன ? என்று கேட்கிறார் திருவள்ளுவர்.

தோலைக் கொண்டு, ஒரு பொருள் மென்மையாக இருக்கிறதா, கடினமாக இருக்கிறதா என்று தொட்டு உணர்ந்து தெரிந்துகொள்கிறோம். கண்ணிற்கு விஷயம் ரூபம் அல்லது வடிவம் என்று கூறப்பட்டிருந்தாலும், முக்கியமாக நிறத்தைத்தான் கண்களைக் கொண்டு பார்க்கிறோம். தடவிப் பார்த்துக்கூட, வடிவத்தைக் கூறிவிடலாம். ஆனால் நிறத்தைக் கண்களால்தான் அறிந்துகொள்ள முடியும்.

நாக்கினால், இனிப்பு, கசப்பு, உவர்ப்பு, காரம், புளிப்பு, துவர்ப்பு, ஆகிய அறுசுவைகளையும் அறிகிறோம். மூக்கைக் கொண்டு, வாஸனை எனப்படும் நாற்றத்தை அறிகிறோம்.

### ஐந்து செயற்கருவிகள்

**वाक्पाणिपादपायूपस्थानीति पञ्चकर्मेन्द्रियाणि।**

**வாக்பாணிபாதபாயூபஸ்தாநீதி பஞ்சகர்மேந்த்ரியாணி।**

வாய், கை, கால், எருவாய், கருவாய் என ஐந்து செயற்கருவிகள்.

## தெளிவுரை

செயல்புரிவதற்கென்று இந்த ஐந்து செயற்கருவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. கை, கால், பேச்சு, எருவாய் எனப்படும் மூத்ர த்வாரம், எருவாய் எனப்படும் மல த்வாரம் ஆகியவைவையே அவை.

### செயற்கருவிகளுக்குரிய தேவதைகள்

**वाचो देवता वह्निः। வாசோ தேவதா வஹ்நி:।**

வாய்க்கு அக்னிதேவன் தேவதை.

**हस्तयोरिन्द्रः। ஹஸ்தயோரிந்த்ர:।**

கைகளுக்கு இந்த்ரன்.

**पादयोर्विष्णुः। பாதயோர்விஷ்ணு:।**

கால்களுக்கு விஷ்ணு.

**पायोर्मृत्युः। பாயோர்ம்ருத்யு:।**

எருவாய்க்கு யமன்.

**उपस्थस्य प्रजापतिः। உபஸ்தஸ்ய ப்ரஜாபதி:।**

கருவாய்க்கு ப்ரஹ்மா.

**इति कर्मेन्द्रियदेवताः। இதி கர்மேந்த்ரியதேவதா:।**

இவ்வாறு செயற்கருவிகளின் தேவதைகள் கூறப்பட்டன.

## தெளிவுரை

ஒவ்வொரு செயற்கருவிக்கும் தனித்தனியே இவ்வாறு தேவதைகள் உள்ளனர். நம்முடைய பேச்சுக்கு அக்னி தேவதையாக இருக்கிறார். கைகளுக்கு இந்த்ரனும், கால்களுக்கு விஷ்ணுவும் தேவதைகள். எருவாய்க்கு யமன்,

கருவாய்க்கு ப்ரஜாபதி என தனித்தனியே தேவதைகள் அருள்புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

**செயற்கருவிகளின் செயல்பாடுகள்**

**वाचो विषयः भाषणम्। வாசோ விஷய: பாஷணம்।**

வாய்க்கு விஷயம் பேசுதல்.

**हस्तयोर्विषयः वस्तुग्रहणम्।**

**ஹஸ்தயோர்விஷய: வஸ்துக்ரஹணம்।**
கைகளுக்கு விஷயம் பொருளை எடுத்தல்.

**पादयोर्विषयः गमनम्। பாதயோர்விஷய: கமநம்।**

கால்களுக்கு விஷயம் நடத்தல்.

**पायोर्विषयः मलत्यागः। பாயோர்விஷய: மலத்யாக:।**

எருவாய்க்கு விஷயம் மலத்தை நீக்குதல்.

**उपस्थस्य विषयः आनन्द इति।**

**உபஸ்தஸ்ய விஷய: ஆநந்த இதி।**
கருவாய்க்கு விஷயம் இன்பம் நுகர்தல்.

## தெளிவுரை

வாயால் பேசுகிறோம். கைகளால் பொருட்களை எடுக்கிறோம், வைக்கிறோம். கால்களால் நடக்கிறோம். எருவாயினால் மலமூத்ரங்களை த்யாகம் செய்கிறோம். கருவாயினால் குழந்தையைத் தோற்றுவிக்கும் செயலானது நிகழ்கிறது.

ஞாநம் வஸ்து தந்த்ரம், கர்ம புருஷ தந்த்ரம்।

அறிவது நம் கட்டுப்பாட்டில் இல்லை, செயல்புரிவது நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது.

அறிவு என்பது நம்மைச் சார்ந்ததல்ல, பொருளைச் சார்ந்தது. ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்யலாம், செய்யாமல் இருக்கலாம், வேறுவிதமாகச் செய்யலாம். செயல்புரிவது நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது.

அறிவானது, அறியப்படுபொருளைச் சார்ந்து ஏற்படுகிறது. ஆனால், செயலானது செயல்புரிபவனுடைய விருப்பத்தைச் சார்ந்தது.

ஸூக்ஷ்ம சரீரத்தின் அம்சங்களுள் மனம், புத்தி பற்றிய விளக்கம் இங்கு கூறப்படவில்லை. பிறகு கூறப்படும்.

கேள்வி: **कारणशरीरं किम्?** **காரணஶரீரம் கிம்?**

காரண ஶரீரம் என்றால் என்ன?

பதில் : **अनिर्वाच्यानाद्यविद्यारूपं शरीरद्वयस्य कारणमात्रं सत्स्वरूपाज्ञानं निर्विकल्पकरूपं यदस्ति तत्कारणशरीरम्।**

**அநிர்வாச்யாநாத்யவித்யாரூபம் ஶரீரத்வயஸ்ய காரணமாத்ரம் ஸத்ஸ்வரூபாஜ்ஞாநம் நிர்விகல்பகரூபம் யதஸ்தி தத்காரணஶரீரம்।**

**அநிர்வாச்யா** - இத்தகையது எனக்கூற முடியாததும், **அநாதி** - தொடக்கமற்றதும், **அவித்யாரூபம்** - ஆராய்ந்தால் இருப்பற்றதும், **ஶரீரத்வயஸ்ய காரணமாத்ரம்** - ஸ்தூல, ஸூக்ஷ்ம சரீரங்களுக்கு காரணமாத்திரமாயும், **ஸத்ஸ்வரூபாஜ்ஞாநம்** - மெய்ப்பொருளை அறியாததும், **நிர்விகல்பகரூபம்** - வேற்றுமையற்றதுமானது, **யதஸ்தி தத்காரணஶரீரம்** - எதுவோ அது காரண சரீரம்.

*இத்தகையது எனக்கூற முடியாததும், தொடக்கமற்றதும், ஆராய்ந்தால் இருப்பற்றதும், ஸ்தூல, ஸூக்ஷ்ம சரீரங்களுக்கு*

*காரணமாத்திரமாயும், மெய்ப்பொருளை அறியாததும், வேற்றுமையற்றதுமானது எதுவோ அது காரண சரீரம்.*

## விளக்கவுரை

ஸ்தூல சரீரத்திற்கும், ஸூக்ஷ்ம சரீரத்திற்கும் காரணமாக இருப்பது காரண சரீரம். அதுவும் அழியக்கூடியது, எனவே அதையும் சரீரம் என்று சொல்கிறோம்.

ஸ்தூல சரீரம் கண்ணுக்குத் தெரிகிறது. ஸூக்ஷ்ம சரீரம் கண்ணுக்குத் தெரிவதில்லை, ஆனாலும் அதனை அனுபவத்தால் புரிந்துகொள்ள முடிகிறது.

காரண சரீரத்தைப் புரிந்துகொள்வது சற்று கடினம். இங்கு காரண சரீரத்திற்கு ஆறு இலக்கணங்கள் கூறப்பட்டுள்ளன.

### 1. அநிர்வாச்யம்

வாச்யம் என்றால் சொல்லால் கூறப்படுவது. அநிர்வாச்யம் என்றால் சொல்லால் விளக்கப்பட முடியாதது. இதனை விளக்கிச் சொல்ல முடியாது என்பதை விளக்கமாகப் புரிந்துகொள்ளலாம்.

அது உள்பொருளும் அல்ல, இல்பொருளும் அல்ல.

ஸமஷ்டி (ஒட்டுமொத்த) காரண சரீரத்தைத்தான் மாயை என்று கூறுகிறோம்.

இங்கு கூறப்படுவது வ்யஷ்டி (தனிப்பட்ட) காரண சரீரம்.

ஏன் சரியாக விளக்க முடியவில்லை?

கயிறு ஏன் பாம்பாகத் தெரிகிறது என்று கேட்டால், அந்தக் கேள்விக்குச் சரியாக பதில் கூற முடியாது. நாம் ஓரிடத்தில் கயிற்றைப் பார்த்திருக்கிறோம். மற்றொரு இடத்தில் பாம்பைப் பார்த்திருக்கிறோம். மனம் இரண்டையும் குழப்பிக்கொள்கிறது. அதனால் கயிறு பாம்பாகத் தெரிகிறது.

மனம் ஏன் அவ்வாறு குழப்பிக் கொள்கிறது? என்ற கேள்விக்குப் பதில் இல்லை.இல்லாததை இருப்பதுபோலவும், இருப்பதை இல்லாததுபோலவும் ஏன் மனம் நினைக்கிறது என்ற கேள்விக்குப் பதில் இல்லை.

தெரிந்துகொள்ள முடியாது என்று கூறிவிட்ட விஷயத்தில் அதற்குமேல் தெரிந்துகொள்ள முயற்சிப்பது வீண்தான்.

கடவுளைப் பற்றிக்கொள், உலகத்தை விடு என்று சொன்னாலும் மனம் கேட்பதில்லை.

ஏன் அதற்குமேல் விட்டுவிட வேண்டும் என்ற காரணத்தைச் சொல்லாவிட்டால் பகுத்தறிவும் மனமும் அமைதி பெறாது.

அது உள்பொருளும் அல்ல, இல்பொருளும் அல்ல. இத்தகையது என்று கூற முடியாத தன்மையை உடையது அது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

## 2. அநாதி

அநாதி என்றால் தொடக்கமற்றது, காரணமற்றது என்று பொருள். காரண சரீரத்திற்குக் காரணமில்லை. எதிலிருந்தும் அது தோன்றவில்லை. ஆதி என்றால் தொடக்கம். ஆதியற்றது அநாதி.

காரண சரீரத்தின் வடிவத்தை இத்தகையது என்று சொல்ல முடியாது. இதற்கு முடிவும் இல்லை, தொடக்கமும் இல்லை, இது நிலைத்திருப்பதுமில்லை.

சாஸ்த்ரங்களில் ஆறு விஷயங்கள் அநாதி என்று கூறப்படுகின்றன.

ஜீவன்(உயிர்), ஈச்வரன்(உயிருக்கு உயிர்), சுத்த சைதன்யம் (தூய உணர்வு), ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் இடையே உள்ள வேற்றுமை, அறியாமை, அறியாமைக்கும் தூய உணர்வுக்கும் இடையே உள்ள தொடர்பு. இவை ஆறுக்கும் காரணமில்லை.

### 3. அவித்யாரூபம்

ஆராய்ச்சி செய்தால் இல்லாமல் போய்விடும் என்று பொருள். ஆராய்ச்சி செய்யும் வரை மட்டுமே அது உண்மை. ஆராய்ந்து விசாரம் செய்துவிட்டால், அதற்கு இருப்பு இல்லை.

தன்னைப் பற்றிய அறியாமையே காரண சரீரம் எனப்படுகிறது. தன்னைப் பற்றிய அறிவு ஏற்பட்டவுடன், அது இல்லாமல் போய்விடுகிறது.

### 4. ஶரீர த்வயஸ்ய காரண மாத்ரம்

பருவுடல், நுண்ணுடல் ஆகிய இரண்டிற்கும் காரணமாக மட்டும் இருப்பது காரண சரீரம்.

### 5. ஸத்ஸ்வரூப அஜ்ஞாநம்

தன்னுடைய உண்மை இருப்பை அறியாமல் இருப்பது.

(ஸத் என்பது தூய இருப்பு, ஆத்மா, பரம்பொருளைக் குறிக்கும்).

காரண சரீரத்தைப் புரிந்துகொள்ள, உறக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். உறக்கத்தில் ஸ்தூல சரீர அனுபவமும் இல்லை, ஸூக்ஷ்ம சரீர அனுபவமும் இல்லை.

காரண சரீரம் இருக்கிறது என்ற அனுபவமும் இல்லை, ஆனால் காரண சரீரம் இருக்கிறது.

ஆத்மாவும் இருக்கிறது, காரண சரீரமும் இருக்கிறது. அந்த ஆத்மாவை அறியாமல் இருப்பதே காரண சரீரம்.

காரண சரீரம் ஆத்மாவை (தன்னை) அறியாதது.

### 6. நிர்விகல்பக ரூபம்

காரண சரீரம் எந்தவிதமான வேற்றுமைகளோ பிரிவுகளோ அற்றது. ஆலமரத்தின் விதை கடுகுபோன்று இருக்கிறது.

அதற்குள் எத்தனையோ பிரிவுகளும் வேற்றுமைகளும் உடைய மரம் மறைந்திருக்கிறது.

தோற்றத்திற்கு முன்னால் அதில் வேற்றுமை இல்லை. எந்த மரத்தை வேண்டுமானாலும் இதற்கு உதாரணமாகச் சொல்ல முடியும். நம்முடைய உடலும் தாயின் வயிற்றில் முதன்முதலில் தோன்றியபோது அப்படித்தான் இருந்தது.

நம்மால் அனுபவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த உலகமானது, படைப்பின் தோற்றத்திற்கு முன்பு, விதையின் உள்ளே முளையைப் போல வேற்றுமையில்லாமல் இருந்தது. மறுபடியும் மாயையினால் தோற்றுவிக்கப்பட்ட இடம்-பொருள் தொடர்பால் விசித்திரமானதாக வரையப்பட்டிருக்கிறது என்கிறது ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம்.

நிர்விகல்பம் என்றால் வேற்றுமைகள் வெளிப்படாத விதைநிலை என்று பொருள். அதில் வேற்றுமைகள் தோன்றா நிலையில் இருக்கின்றன. ஆனால் அனைத்து வேற்றுமைகளுக்கும் அதுவே காரணமாகிறது.

அறியாமையே காரண சரீரம் என்று அழைக்கப்படுகிறது.

கேள்வி: **अवस्थात्रयं किम्?** **அவஸ்த்தா த்ரயம் கிம்?**

அவஸ்த்தா த்ரயம் (மூன்று நிலைகள்) என்றால் என்ன?

பதில் : **जाग्रत्स्पनसुषुप्त्यवस्था।**

**ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்த்யவஸ்த்தா।**
விழிப்பு, கனவு, உறக்கம் என மூன்று நிலைகள்.

அடுத்து மூன்று நிலைகளைப் பற்றி ஆராய்ச்சியானது தொடங்குகிறது. ஆத்மா மூன்று நிலைகளுக்கு அப்பாற்பட்டது என்று கூறப்பட்டது. மூன்று நிலைகளைப் பற்றித் தெளிவாக அறிந்துகொண்டால்தான், அவற்றுக்கு வேறான ஆத்மாவைப் பற்றிப் புரிந்துகொள்ள முடியும்.

கேள்வி: **जाग्रदवस्था का? ஜாக்ரதவஸ்த்தா கா?**

விழிப்பு நிலையின் தன்மை யாது?

பதில் : **श्रोत्रादि ज्ञानेन्द्रियैः शब्दादिविषयैश्च ज्ञायते इति यत् सा जाग्रदवस्था। स्थूलशरीराभिमानि आत्मा विश्व इत्युच्यते।**

**ஶ்ரோத்ராதி ஞானேந்த்ரியை: ஶப்தாதிவிஷயைஶ்ச ஞாயதே இதி யத் ஸா ஜாக்ரதவஸ்த்தா। ஸ்தூலஶரீராபிமாநி ஆத்மா விஶ்வ இத்யுச்யதே।**

**ஶ்ரோத்ராதி ஞாநேந்த்ரியை:** - காது முதலான அறிவுக்கருவிகளால், **ஶப்தாதிவிஷயைஶ்ச ஞாயதே** - ஒலி முதலான விஷயங்களை அறியும் நிலை, **இதி யத் ஸா ஜாக்ரதவஸ்த்தா** - எதுவோ அது விழிப்பு நிலை. **ஸ்தூலஶரீராபிமாநி ஆத்மா** - ஸ்தூல சரீரத்தில் அபிமானமுள்ள ஆத்மாவிற்கு, **விஶ்வ இத்யுச்யதே** - விச்வன் என்று பெயர்.

*காது முதலான அறிவுக்கருவிகளால், ஒலி முதலான விஷயங்களை அறியும் நிலை எதுவோ அது விழிப்பு நிலை. ஸ்தூல சரீரத்தில் அபிமானமுள்ள ஆத்மாவிற்கு விச்வன் என்று பெயர்.*

## தெளிவுரை

ஐம்பொறிகளைக் கொண்டு, ஐம்புலன்களை நுகர்கின்ற நிலை விழிப்பு நிலை எனப்படும். ஜாக்ரதை என்றால் விழிப்போடு இருப்பது என்று பொருள். இந்த்ரிய விஷய அனுபவ நிலையே விழிப்பு நிலை.

கனவில் இந்த இந்த்ரியங்களையோ, இந்த்ரிய விஷயங்களையோ நாம் அனுபவிப்பதில்லை.

கனவில் தோன்றுவது, வேறு கற்பனை உலகம். அதிலுள்ள அனைத்தும் கனவிலேயே தோன்றுபவை. கனவு என்பது ஓர் அதிசயமான அனுபவம். கனவைக் கொண்டுதான் நாம் நனவைப் பற்றிப் புரிந்துகொள்கிறோம்.

கனவையும் நனவையும் உள்ளவாறு ஆராய்ச்சி செய்தாலே மெய்யறிவு தோன்றிவிடும். இது குறித்த விரிவான ஆராய்ச்சியானது மாண்டூக்ய உபநிஷத்தில் செய்யப்பட்டுள்ளது.

ஸ்தூல சரீரமாகிய பருவுடலை அனுபவிக்கின்ற நிலையே விழிப்பு நிலை. இந்த விழிப்பு நிலையோடு இணைந்திருக்கின்ற ஆத்மாவிற்கு விச்வன் என்று பெயர்.

விச்வன் என்பது நம் அனைவருக்கும் உரிய பொதுப்பெயராகும்.

ஸ்தூல சரீரத்தில் அபிமானம் வைக்கின்ற ஆத்மாவாகிய எனக்கு விச்வன் என்று பெயர். நான் ப்ரபஞ்சத்தையே, விச்வத்தையே அனுபவிக்கிறேன். ஆகவே, விச்வன் என்று பெயர்.

**விவிதம் ஶ்வயதே இதி விஶ்வ:।**

விதவிதமாக விளங்கிக்கொண்டிருப்பது விச்வம்.

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் முதல் நாமம், விஶ்வஸ்மை நம: என்பதாகும்.

ஸ்தூல சரீரத்தில் அபிமானம் இருக்கும்போது, ஸூக்ஷ்ம காரண சரீரங்களிலும் சேர்த்து அபிமானம் இருக்கிறது.

ஆனால் கனவிலோ ஆழ்ந்த உறக்கத்திலோ ஸ்தூல சரீர அபிமானம் இருப்பதில்லை.

கனவு நிலையில், ஸூக்ஷ்ம சரீரமும் காரண சரீரமும் இருக்கின்றன.

ஆழ்ந்த உறக்கத்தில் காரண சரீரம் மட்டுமே இருக்கிறது.

விழிப்பு நிலையில் மூன்று சரீர அனுபவங்களும் இருக்கின்றன. கனவில் இரண்டு சரீர அனுபவங்கள் இருக்கின்றன. ஆழ்ந்த உறக்கத்தில் ஒரு சரீர அனுபவம் மட்டுமே இருக்கிறது.

விழிப்பு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று நிலைகளிலும் காரண சரீரம் இருக்கிறது. சுத்த சைதன்யம் அல்லது தூய உணர்வானது, எதிலும் அபிமானம் வைப்பதில்லை. ப்ரதிபிம்ப சைதன்யம் எனப்படும் நிழல் உணர்வுதான் அபிமானம் வைக்கிறது. அதற்குத்தான் விச்வன் என்று பெயர். தூய உணர்வின்றி நிழல் உணர்வில்லை.

தூய உணர்வு + காரண உடல்+நுண்ணுடல் + பருவுடல்+நிழல் உணர்வு= விச்வன் பருவுடலை உண்மையென்று நம்பி அதன்மீது அகப்பற்று கொண்டிருக்கின்ற எனக்கு விச்வன் என்று பெயர்.

**स्वप्नावस्था केति चेत् जाग्रदवस्थायां यद्दृष्टं यच्छ्रुतं तज्जनितवासनया निद्रासमये यः प्रपञ्चः प्रतीयते सा स्वप्नावस्था। सूक्ष्मशरीराभिमानि आत्मा तैजस इत्युच्यते।**

**ஸ்வப்நாவஸ்த்தா கேதி சேத் ஜாக்ரதவஸ்த்தாயாம் யத்த்ருஷ்டம் யச்ஶ்ருதம் தஜ்ஜநிதவாஸநயா நித்ராஸமயே ய: ப்ரபஞ்ச: ப்ரதீயதே ஸா ஸ்வப்நாவஸ்த்தா। ஸூக்ஷ்மஶரீராபிமாநி ஆத்மா தைஜஸ இத்யுச்யதே।**

**ஸ்வப்நாவஸ்த்தா கேதி சேத்** - கனவு நிலையாதெனில், **ஜாக்ரதவஸ்த்தாயாம்** - விழிப்பு நிலையில், **யத்த்ருஷ்டம் யச்ஶ்ருதம்** - எது பார்க்கப்பட்டதோ எது கேட்கப்பட்டதோ,

**தஜ்ஜநிதவாஸநயா** – அதனால் ஏற்படும் வாஸனையால், **நித்ராஸமயே** – உறக்க நிலையில், **ய: ப்ரபஞ்ச: ப்ரதீயதே** – எந்த உலகமானது தோன்றுகிறதோ, **ஸா ஸ்வப்நாவஸ்த்தா** – அது கனவு நிலையாகும். **ஸூக்ஷ்மஶரீராபிமாநி ஆத்மா** – ஸூக்ஷ்ம சரீரத்தில் அபிமானமுள்ள ஆத்மாவிற்கு, **தைஜஸ இத்யுச்யதே** – தைஜஸன் என்று பெயர்.

*கனவு நிலையாதெனில், விழிப்பு நிலையில் எது பார்க்கப்பட்டதோ எது கேட்கப்பட்டதோ அதனால் ஏற்படும் வாஸனையால் உறக்க நிலையில் எந்த உலகமானது தோன்றுகிறதோ அது கனவு நிலையாகும். ஸூக்ஷ்ம சரீரத்தில் அபிமானமுள்ள ஆத்மாவிற்கு தைஜஸன் என்று பெயர்.*

## தெளிவுரை

விழிப்பு நிலையில், நாம் பார்த்தவை, கேட்டவை, முகர்ந்தவை, சுவைத்தவை, தொட்டு உணர்ந்தவை ஆகிய அனுபவங்களால் நம்முடைய உள்ளத்தில் பதிவுகள் ஏற்படுகின்றன. இந்தப் பதிவுகளுக்கு வாஸனை என்று பெயர்.

பல பிறவிகளில் ஏற்பட்ட அனுபவங்களின் வாஸனைகள் நம்முடைய உள்ளத்தில் பதிந்திருக்கின்றன.

ஒரு கனவு வெறும் 90 விநாடிகளே நீடித்திருப்பதாக அறிவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனால், கனவில் அந்தக் குறுகிய காலத்திற்குள் ப்ரஹ்மாண்டமான உலகங்கள் தோன்றி மறைகின்றன. உறங்கும் நேரத்தில் தோன்றுகின்ற ப்ரபஞ்சத்திற்கு கனவு நிலை என்று பெயர். கனவில், நம்முடைய பருவுடலின் மீது நமக்கு பற்று இல்லை. ஸ்தூல சரீர அபிமானம் என்ற இந்த பருவுடல் பற்று உள்ளத்தில் இருந்தால், கனவு ஏற்படாது.

கனவு நிலையில் ஸூக்ஷ்ம சரீரமாகிய நுண்ணுடலில் மட்டும் அபிமானம் இருக்கிறது. நுண்ணுடலில் மாத்திரம் பற்று வைத்திருக்கின்றவனுக்கு தைஜஸன் என்று பெயர்.

தைஜஸன் என்ற ஒளி பொருந்தியவன் என்று பொருள். அவன் கனவுலகில் தோன்றும் ப்ரபஞ்சத்திலும் காட்சிகளிலும் அபிமானம் கொள்கிறான்.

கேள்வி : **ततः सुषुप्त्यवस्था का ?**

**தத: ஸுஷுப்த்யவஸ்தா கா ?**
அப்படியானால், உறக்க நிலையின் தன்மை யாது ?

பதில் : **अहं किमपि न जानामि सुखेन मया निद्राऽनुभूयत इति सुषुप्त्यवस्था। कारणशरीराभिमानी आत्मा प्राज्ञ इत्युच्यते।**

**அஹம் கிமபி ந ஜானாமி ஸுகேந மயா நித்ராநுபூயத இதி ஸுஷுப்த்யவஸ்த்தா। காரணஶரீராபிமாநீ ஆத்மா ப்ராஜ்ஞ இத்யுச்யதே।**

**அஹம் கிமபி ந ஜாநாமி** - என்னால் ஒன்றும் அறியப்படவில்லை. **ஸுகேந மயா நித்ராநுபூயத** - ஆனந்தமாக என்னால் உறக்கம் அனுபவிக்கப்படுகிறது, **இதி ஸுஷுப்த்யவஸ்த்தா** - எனும் நிலை யாதோ அது உறக்கநிலை எனப்படும். **காரணஶரீராபிமாநீ ஆத்மா** - காரண சரீரத்தில் அபிமானமுள்ள ஆத்மாவிற்கு, **ப்ராஜ்ஞ இத்யுச்யதே** - ப்ராஜ்ஞன் என்று பெயர்.

*என்னால் ஒன்றும் அறியப்படவில்லை. ஆனந்தமாக என்னால் உறக்கம் அனுபவிக்கப்படுகிறது எனும் நிலை யாதோ அது உறக்கநிலை எனப்படும். காரண சரீரத்தில் அபிமானமுள்ள ஆத்மாவிற்கு ப்ராஜ்ஞன் என்று பெயர்.*

## தெளிவுரை

ஆழ்ந்த உறக்கம் நம் ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரி ஏற்படுகின்ற அனுபவம். அந்நிலையில் நமக்கு எதுவுமே தெரிவதில்லை. ஆனந்தமாக உறங்கினேன் என்று விழித்தபிறகு கூறுகிறோம்.

காரண சரீர அபிமானம் மட்டுமே இருக்கின்ற நிலை ஆழ்ந்த உறக்க நிலை. இந்நிலையில் ஸ்தூல சரீர, ஸூக்ஷ்ம சரீர அபிமானங்கள் எவையுமில்லை.

தனக்கு ஒன்றுமே தெரியாத, முழுமையான அறியாமையில் இருப்பவன் ப்ராஜ்ஞன். (ப்ரகர்ஷேண அஜ்ஞ:।)

விழிப்பிலும் கனவிலும் ஏதோ காட்சிகள் தெரிகின்றன. ஆனால் ஆழ்ந்த உறக்கத்தில் எதுவுமே தெரிவதில்லை. உலகமும் தெரிவதில்லை, தானும் தெரிவதில்லை.

எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்தில், முழுமையான அறியாமையில் இருக்கிறோம்.

நான் யார் என்று தெரியாவிட்டாலும், நான் இருக்கிறேன் என்ற எண்ணம் விழிப்பு நிலையிலும், கனவு நிலையிலும் இருக்கிறது. உறக்க நிலையில் நான் இருக்கிறேன் என்ற எண்ணமும் இல்லை.

பருவுடலோடு தொடர்புடையது விழிப்பு நிலை.

நுண்ணுடலோடு தொடர்புடையது கனவு நிலை.

காரண உடலோடு தொடர்புடையது ஆழ்ந்த உறக்க நிலை.

### பஞ்சகோஶ விவேகம்

கேள்வி: **पञ्चकोशाः के? பஞ்சகோஶா: க:?**

ஐந்து கோசங்கள் எவை?

பதில்: **अन्नमयः प्राणमयः मनोमयः विज्ञानमयः आनन्दमयश्चेति।**

**அந்நமய: ப்ராணமய: மநோமய: விஜ்ஞாநமய: ஆநந்தமயஶ்சேதி।**

அன்னமயம், ப்ராணமயம், மனோமயம், விஜ்ஞானமயம், ஆனந்தமயம் என்பவையாகும்.

## தெளிவுரை

தத்துவங்களை விளங்க வைப்பதற்காக, சாஸ்த்ரங்கள் சில உத்திகளை, முறைகளைக் கையாளுகின்றன. அவற்றுக்கு ப்ரக்ரியா (methodology) என்று பெயர்.

மூன்று சரீரங்களைப் பற்றிக் கூறுவது ஶரீர த்ரய ப்ரக்ரியா.

மூன்று நிலைகளைப் பற்றிக் கூறுவது அவஸ்த்தா த்ரய ப்ரக்ரியா.

ஐந்து கோசங்களைப் பற்றிக் கூறுவது பஞ்சகோச ப்ரக்ரியா.

மூன்று சரீரங்களே ஐந்து கோசங்களாகக் கூறப்படுகின்றன.

கோசம் என்றால் உறை, மறைப்பு என்று பொருள். ஆத்மாவை இந்த கோசங்கள் மறைப்பது போன்று இருக்கிறது. (கோஶவத் கோஶ: – மறைப்பதுபோல் இருக்கிறது).

உடலையே நான் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். உடலுக்கு வேறாக இருக்கின்ற தன்னை நினைப்பதில்லை.

மறைக்கப்பட்டதைப் போன்று இருக்கிறது, விசாரம் செய்தால் விளங்குகிறது.

| | | |
|---|---|---|
| **ஸ்தூல சரீரம்** | = | அந்நமய கோசம் |
| **ஸூக்ஷ்ம சரீரம்** | = | ப்ராணமய, மநோமய, விஜ்ஞாநமய கோசங்கள் |
| **காரண சரீரம்** | = | ஆநந்தமய கோசம் |

## பஞ்ச கோச விவேகத்தின் பயன்

உடல் என்னால் அறியப்படுகிறது. உடல் நானல்ல என்பது விளங்கும். உடலுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுப்போம். ஆனால் உடலையே பெரிய விஷயமாக எண்ணிக் கொண்டிருக்க மாட்டோம். அதைக் குறித்த கவலையில் ஆழ்ந்துவிட மாட்டோம்.

உடல் தேய்ந்து போவதும், சரியாக இயங்காமல் இருப்பதும் அதன் தர்மங்கள். உடலை சரியாகப் பராமரிக்க நன்கு முயற்சிப்போம். உணவு, மருந்து, உடற்பயிற்சி அனைத்தும் சரிவரக் கொடுப்போம். ஆனால் வினைப்பயனால் உடல் எவற்றையெல்லாம் அனுபவிக்க வேண்டுமோ, அவற்றை அனுபவித்துத்தான் ஆக வேண்டும் என்பதையும் ஏற்றுக்கொள்வோம்.

வினைப்பயனை அனுபவிப்பதற்காகவே வந்திருப்பது இந்த உடல். அதனை அனுபவிக்காமல் தப்பிக்க முடியாது.

ஆனால், உடல் மனக்கூட்டமைப்பை புறப்பொருளாகப் பார்க்கக் கற்றுக்கொள்வோம். அது மயமாகிவிட மாட்டோம்.

நம்முடைய உடல் மனக் கூட்டமைப்பை புறப்பொருளாகப் பார்க்கும் திறன், ஞானபலத்தால் ஏற்படும். ஞானபலம் ஏற்பட்டுவிட்டால், வாழ்வில் எதைக்குறித்தும் பெரிதாக அலட்டிக்கொள்ள மாட்டோம்.

அந்நமயம், ப்ராணமயம் என்று எல்லாவற்றிலும் மயம் என்ற சொல் வருகிறது. மயம் என்பதற்கு ஸ்வரூபம், விகாரம் (மயட் விகாரார்த்தே) என்று இருவிதங்களில் பொருள் கூறப்படுகிறது. சிவமயம், விஷ்ணுமயம் என்றெல்லாம் கூறுகின்ற இடத்தில், ஸ்வரூபம் என்று பொருள் கொள்ளப்படும்.

இங்கு விகாரம் என்ற பொருளே எடுத்துக்கொள்ளப்படுகிறது. அந்நமய கோசம் என்பது அன்னத்தின் விகாரம். உணவு

கூடினாலோ குறைந்தாலோ, மருந்து உட்கொண்டாலோ மருந்தை நிறுத்தினாலோ மாறுபடக்கூடிய அன்னமய கோசம்.

கேள்வி : **अन्नमयः कः? அன்னமய: க:?**

அன்னமய கோசம் என்றால் என்ன?

பதில் : **अन्नरसेनैव भूत्वा अन्नरसेनैव वृद्धिं प्राप्य अन्नरूपपृथिव्यां यद्विलीयते तदन्नमयः कोशः स्थूलशरीरम्।**

**அந்நரஸேநைவ பூத்வா அந்நரஸேநைவ வ்ருத்திம் ப்ராப்ய அந்நரூபப்ருதிவ்யாம் யத்விலீயதே ததந்நமய: கோஶ: ஸ்தூலஶரீரம்।**

**அந்நரஸேநைவ பூத்வா** - உணவினாலேயே தோன்றி, **அந்நரஸேநைவ வ்ருத்திம் ப்ராப்ய** - உணவினாலேயே வளர்ந்து, **அந்நரூபப்ருதிவ்யாம்** - உணவு வடிவான பூமியில், **யத்விலீயதே** - எது ஒடுங்குகிறதோ, **ததந்நமய: கோஶ:** - அது அன்னமயகோசமெனப்படும், **ஸ்தூலஶரீரம்** - பருவுடலாகும்.

*உணவினாலேயே தோன்றி உணவினாலேயே வளர்ந்து உணவு வடிவான பூமியில் எது ஒடுங்குகிறதோ அது அன்னமயகோசமெனப்படும் பருவுடலாகும்.*

## தெளிவுரை

தாய் தந்தையர் உட்கொண்ட உணவே இந்த ஸ்தூல சரீரமாகிய அன்னமயகோசத்திற்குக் காரணமாகிறது.

உடல் உணவால் வளர்கிறது.

(அன்னம் என்ற சொல்லுக்கு சாதம் என்று பொருளல்ல, உணவு என்று பொருள்).

நக்கி உண்ணக் கூடியவை, கடித்து உண்ணக் கூடியவை, உறிஞ்சி உண்ணக் கூடியவை, விழுங்கி உண்ணக் கூடியவை என அன்னத்தில் நான்குவிதங்கள் இருக்கின்றன.

அத்தி இதி அந்நம்। அருந்தப்படுவதால் அன்னம்.

எதை உண்கிறோமோ, எது நம்மை உண்கிறதோ, அது அன்னம். ஒழுங்காக அளவாகச் சாப்பிடும்போது நாம் உணவை உண்கிறோம். ஒழுங்கின்றி கண்டபடி சாப்பிட்டால், உணவு நம்மை உண்கிறது.

எவனொருவன் அன்னத்தை தானம் செய்யாமல் தான் மட்டும் உண்கிறானோ அவனை நான் உண்டுவிடுவேன் என்று வேதத்தில் அன்னமே கூறுவதாக மந்த்ரங்கள் உள்ளன.

வேதத்தில் அந்நஸூக்தம் அன்னத்தின் புகழைப் பாடுகிறது. அன்னத்தின் சிறப்பைக் கூறி, அன்னத்தை இறைவனாக வழிபடும் முறைகளை அது கூறுகிறது. எவனொருவன் வாழ்நாள் முழுவதும் உணவைப் போற்றி வழிபடுகிறானோ, அவனுக்கு வாழ்நாள் முழுவதும் முறையாக உண்கின்ற சக்தி இருக்கும் என்று கூறுகிறது. உணவை ஒழுங்காக, முறையாக உண்டால், மருந்தே தேவைப்படாது.

அன்னதானத்தைப் பற்றியும், அன்னத்தின் பெருமையைப் பற்றியும் வேதத்தில் பலவிடங்களில் கூறப்பட்டுள்ளன.

சாந்தோக்ய உபநிஷத்தில், தந்தை மகனைப் பதினைந்து நாட்கள் பட்டினி போடுகிறார். பிறகு கடவுள் எது? என்று கேட்கிறார். அவன் அந்நம் ப்ரஹ்ம। உணவே கடவுள் என்று கூறுகிறான். இது அன்னத்தின் மதிப்பை உணர்த்துகிறது.

உணவு உட்கொள்வது ஓர் அக்நிஹோத்ர சடங்காகவே பாவிக்கப்படுகிறது. உண்கின்ற இடம், இலை, பாத்ரங்கள் முதலியவற்றை நீரினால் பரிஷேசநம் செய்து, உள்ளுக்குள்ளிருக்கும் ஜாடராக்னிக்கு ஆஹூதி கொடுத்து,

முறையாக உணவை உட்கொள்ள வேண்டும். உண்டு முடிப்பதும் ஒரு சடங்கு. உணவு உண்ட பிறகு, கிழக்கை நோக்கி அமர்ந்து ப்ராணாயாமம் செய்ய வேண்டும்.

உணவு உட்கொண்ட பிறகு, வயிற்றைத் தொட்டுக்கொண்டு சொல்ல வேண்டிய மந்த்ரங்கள் இருக்கின்றன. உணவிற்கும் மனதிற்கும் மிகுந்த தொடர்பிருப்பதாக சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. உட்கொள்ளும் உணவு மனதிற்கு, நீர் ப்ராணனுக்கு என்று சொல்லப்பட்டுள்ளதுஉணவு சரியாக இருந்தால் மனம் சரியாக இருக்கும். மனம் சரியாக இருந்தால், அறிவு சரியாக இருக்கும். அறிவு சரியாக இருந்தால், இன்பம் நிலைத்திருக்கும். ஸ்தூல சரீரம் உணவினால் தோன்றி, உணவினால் வளர்ந்து, பிறகு பிற உயிர்களுக்கு உணவாகவே மாறிவிடுகிறது. அனைத்தையும் எரித்து கிடைக்கும் சாம்பலை உரமாகப் பயன்படுத்துகிறோம். அனைத்தும் சுழற்சியே ஆகும். பூமியே அந்நம் என்கிறது வேதம். பூமியில் அந்நசக்தி இருக்கிறது. அதனால்தான் விதை போட்டவுடன் விளைகிறது. ஸ்தூல சரீரமானது, பூமிரூபமாகிய அன்னத்திலிருந்துதான் தோன்றுகிறது. பிறகு பூமிரூபமாகிய அன்னத்தில் ஒடுங்குகிறது.

உணவினால் தோன்றி, உணவினால் வளர்ந்து, பிறகு உணவாக மாறுவது அன்னமய கோசம். மாறிக்கொண்டிருக்கின்ற அன்னமய கோசத்தை நான் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். அன்னமய கோசம் நான் அல்ல.

கேள்வி: **प्राणमय: क: ?** **ப்ராணமய: க:?**

ப்ராணமயகோசம் என்றால் என்ன?

பதில்: **प्राणाद्या: पञ्चवायव: वागादीन्द्रियपञ्चकं प्राणमय: कोश:।**

**ப்ராணாத்யா: பஞ்சவாயவ:**
**வாகாதீந்த்ரிய பஞ்சகம் ப்ராணமய: கோஶ:।**

**ப்ராணாத்யா: பஞ்சவாயவ:** - ப்ராணன் முதலான ஐந்து வாயுக்களும், **வாகாதீந்த்ரிய பஞ்சகம்** - வாய் முதலான ஐந்து செயற்கருவிகளும், **ப்ராணமய: கோஶ:** - சேர்ந்தது ப்ராணமய கோசம் எனப்படும்.

*ப்ராணன் முதலான ஐந்து வாயுக்களும் வாய் முதலான ஐந்து செயற்கருவிகளும் சேர்ந்தது ப்ராணமய கோசம் எனப்படும்.*

## தெளிவுரை

பசி, தாகம் முதலியவை ப்ராணனின் தர்மங்கள்.

பருவுடலாகிய அன்னமய கோசத்துடன் இணைத்துக்கொண்டு, வயிற்றைப் பசிக்கிறது என்று கூறுகிறோம்.

உடலுக்குள் சஞ்சரிக்கின்ற காற்றுக்கு ப்ராணன் என்று பெயர். (ஶரீர அந்த: சஞ்சாரீ வாயு: ப்ராண:।) உபநிஷத்தில் பலவிடங்களில் ப்ராண உபாஸனையானது கூறப்பட்டுள்ளது.

உடம்பில் மேல்நோக்கிச் செல்லும் காற்றுக்கு ப்ராணன் என்று பெயர் (ப்ராக் கமநவாந் வாயு: ப்ராண:।)

ஆஸனவாய் வழியாகக் கீழ்நோக்கிச் செல்லும் காற்றுக்கு அபாநன் என்று பெயர். (அதோ கமநவாந் வாயு: அபாந:।)

உடல் முழுவதும் வ்யாபிக்கின்ற காற்றுக்கு வ்யாநன் என்று பெயர். (வ்யாபகவாந் வாயு: வ்யாந:।)

மரணத்திற்குக் காரணமான வாயு உதாநன் (உத்கமநவாந் வாயு: உதாந:।)

உணவை ஜீரணம் செய்கின்ற காற்றுக்கு ஸமாநன் என்று பெயர். (ஸமாநவாந் வாயு: ஸமாந:।)

பேசும் ஆற்றல், கைகளால் பொருட்களை கையாளும் ஆற்றல், கால்களால் நடக்கும் ஆற்றல், மலத்தை வெளியேற்றும் ஆற்றல், குழந்தையை தோற்றுவிக்கும் ஆற்றல் ஆகிய ஐந்து செயற்கருவிகளின் ஆற்றல்களும் பஞ்ச ப்ராணன்களோடு இணைந்தவை.

செயற்கருவிகள் ஐந்தும், ஐந்து ப்ராணன்களும் இணைந்தே ப்ராணமயகோசம் எனப்படும்.

கேள்வி : **मनोमय: क:? மநோமய: க:?**

மனோமய கோசம் என்றால் என்ன?

பதில் : **मनश्च ज्ञानेन्द्रियपञ्चकं मिलित्वा यो भवति स मनोमय: कोश:।**

**மநஶ்ச ஜ்ஞாநேந்த்ரியபஞ்சகம் மிலித்வா யோ பவதி ஸ மநோமய: கோஶ:।**

**மநஶ்ச** - மனதும், **ஜ்ஞாநேந்த்ரியபஞ்சகம்** - ஐந்து அறிவுக்கருவிகளும், **மிலித்வா யோ பவதி** - சேர்ந்தது எதுவோ, **ஸ மநோமய: கோஶ:** - அது மனோமய கோசமெனப்படும்.

*மனதும், ஐந்து அறிவுக்கருவிகளும் சேர்ந்ததெதுவோ அது மனோமய கோசமெனப்படும்.*

## தெளிவுரை

கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஐந்து கருவிகளும் மனதோடு இணைந்து இயங்குகின்றன.

இன்பம், துன்பம் முதலியவை மனதில் தோன்றும் உணர்ச்சிகள். நான் இன்பமாக இருக்கிறேன், நான் துன்பமாக இருக்கிறேன் என்று மனதின் உணர்ச்சிகளோடு நம்மை இணைத்துக்கொள்கிறோம்.

புலன் நுகர்ச்சி மனதோடு இணைந்தே நிகழ்கிறது. மனம் ஈடுபடவில்லையென்றால், விஷயங்களை உள்வாங்கிக் கொள்ள முடியாது.

எண்ணங்களின் தொகுப்பே மனம் என்று கூறுகிறார்கள். அது சரியல்ல. எண்ணங்கள் எங்கு தோன்றி, இருந்து, ஒடுங்குகின்றனவோ அதுவே மனம்.

துணி ஆதாரமாக இருக்கிறது. அதில் சாயம் ஏற்றப்படுகிறது. அதுபோல மனதில் எண்ணங்கள் தோன்றி மறைகின்றன.

ஒரு குறிப்பிட்ட எண்ணத்தையே மனம் என்றும் சொல்வதுண்டு.

அறிவுக்கருவிகளும் நானல்ல, மனமும் நான் அல்ல என்பதை சாஸ்த்ரங்கள் மிகத் தெளிவாக உணர்த்துகின்றன.

தத்துவங்களைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடும்பொழுது, மனம் என்றால் என்னவென்பது தெளிவாகக் கூறப்படும்.

வேதம் கற்பவனை மனதில் கொண்டு, அவனுடைய உள்ளத்தில் வேத மந்த்ரங்களே மேலோங்கி இருக்கும் என்பதால், மநோமய புருஷனைப் பின்வருமாறு உருவகப்படுத்துகிறது தைத்திரீய உபநிஷத்.

யஜுர்வேத எண்ணங்களே தலை, ரிக் வேத எண்ணங்கள் வலது கை, ஸாம வேத எண்ணங்கள் இடது கை, அதர்வண வேத எண்ணங்கள் கால்கள் என்று கூறப்பட்டுள்ளது.

கேள்வி: **विज्ञानमयः कः ? விஜ்ஞாநமய: க:?**

விஜ்ஞாநமய கோசம் என்றால் என்ன?

கேள்வி: **बुद्धिज्ञानेन्द्रियपञ्चकं मिलित्वा यो भवति स विज्ञानमयः कोशः।**

**புத்திஜ்ஞாநேந்த்ரியபஞ்சகம் மிலித்வா யோ பவதி ஸ விஜ்ஞாநமய: கோஶ:।**

**புத்திஜ்ஞாநேந்த்ரியபஞ்சகம்** – புத்தியும், ஐந்து அறிவுக்கருவிகளும், **மிலித்வா யோ பவதி** – இணைந்ததெதுவோ, **ஸ விஜ்ஞாநமய: கோஶ:** – அது விஜ்ஞாநமய கோசமெனப்படும்.

*புத்தியும், ஐந்து அறிவுக்கருவிகளும் இணைந்ததெதுவோ அது விஜ்ஞாநமய கோசமெனப்படும்.*

## தெளிவுரை

மனம், புத்தி என்பவையெல்லாம் அந்தக்கரணத்தின் செயல்பாடுகளை வைத்துக் கொடுக்கப்படும் பல்வேறு பெயர்கள்.

தீர்மானம் செய்கின்ற எண்ணங்களுக்கு புத்தி என்று பெயர். ஓம் ஹ்ரீம் புவநேஸ்வர்யை நம: என்ற மந்த்ரத்தை ஜபிக்கப் போகிறேன் என்று தீர்மானம் செய்வது புத்தி. ஜபம் செய்வது, அதனை நிறைவேற்றுவது மனம்.

புத்தியும் ஐந்து அறிவுக்கருவிகளும் இணைந்து விஜ்ஞாநமய கோசம் எனப்படுகிறது.

விஜ்ஞானமய புருஷனுக்கு ச்ரத்தையே தலை, ரிதம் வலது கை, ஸத்யம் இடதுகை, மஹத் தத்துவம் கால்கள் என்று விஜ்ஞாநமய புருஷனை உருவகப்படுத்துகிறது தைத்திரீய உபநிஷத்.

உலகியல் செயல்களையும் வைதிக செயல்களையும் செய்வது விஜ்ஞானமயன்தான் என்று வேதம் சொல்கிறது.

அந்நமய கோசம் கார்யமாக (விளைவாக) இருக்கிறது. விஜ்ஞாநமய கோசம் கர்த்தாவாக இருக்கிறது.

கேள்வி: **आनन्दमयः कः ? ஆநந்தமய: க:?**

ஆநந்தமய கோசம் என்றால் என்ன ?

பதில்: **एवमेव कारणशरीरभूताविद्यास्थमलिनसत्त्वं प्रियादिवृत्तिसहितं सत् आनन्दमयः कोशः।**

**ஏவமேவ காரணஶரீரபூதாவித்யாஸ்த்த மலிநஸத்த்வம் ப்ரியாதிவ்ருத்திஸஹிதம் ஸத் ஆநந்தமய: கோஶ:।**

**ஏவமேவ** - இவ்வாறே, **காரணஶரீரபூதாவித்யாஸ்த்த மலிநஸத்த்வம்** - காரண சரீரமாக இருப்பதும், அறியாமையினால் களங்கப்பட்ட ஸத்வம், **ப்ரியாதிவ்ருத்திஸஹிதம் ஸத்** - ப்ரியம் முதலான வ்ருத்திகளுடன் கூடியிருப்பதெதுவோ, **ஆநந்தமய: கோஶ:** - அது ஆனந்தமய கோசமெனப்படும்.

*இவ்வாறே காரண சரீரமாக இருப்பதும், அறியாமையினால் களங்கப்பட்ட ஸத்வம், ப்ரியம் முதலான வ்ருத்திகளுடன் கூடியிருப்பதெதுவோ அது ஆனந்தமய கோசமெனப்படும்.*

## தெளிவுரை

விழிப்பு நிலையில் உலகத்தைப் பற்றிய அறிவு, அறியாமை இரண்டுமே நம்மிடம் இருக்கின்றன. ஆழ்ந்த உறக்கத்தில் உலகைப் பற்றிய அறிவு இல்லை, அறியாமை இருப்பதும்

தெரியவில்லை. ஒன்றுமே தெரியாத நிலையில் நான் இருந்தேன் என்பது மட்டும் தெரிகிறது. அதுதான் அவித்யாஸ்த்தம் – அறியாமையில் இருந்தது.

தமோகுணத்துடன் கூடிய ஸத்வம் மலின ஸத்வம் எனப்படும். ஸத்வ குணம் இன்பத்தைக் கொடுக்கும். ஆனால் இன்பம் தெரியாமல், அறியாமையோடு இணைந்திருக்கிறது.

விழிப்பு நிலையில் அறிவோடு இன்பத்தை அனுபவிக்கிறோம். இந்த ஒலி, பதார்த்தம், நிறம், தன்மை, மணம் எனக்கு இன்பத்தைக் கொடுக்கிறது என்று சொல்ல முடியும். ஆனால் உறக்கத்தில் இன்பத்தை அனுபவிப்பது தெரிவதில்லை.

உறக்கத்தில் அனுபவிக்கின்ற இன்பம் அறியாமையோடு கூடிய இன்பம். உண்மையில் புறத்தில் நாம் அனுபவிக்கின்ற இன்பங்களும் அறியாமையோடு இணைந்தவைதான். அறிவோடு அவற்றை அனுபவிப்பதைப் போன்ற ஒரு தோற்றம் இருக்கிறது. இன்பத்தை ஆராய்ச்சி செய்தாலே அதன் உண்மைநிலை தெரிந்துவிடும்.

சாஸ்த்ரங்களில் இன்பத்தை மூன்றாகப் பிரித்திருக்கிறார்கள். ஒரு பொருளைப் பார்ப்பதால் ஏற்படுகின்ற இன்பத்திற்கு ப்ரியம் என்று பெயர். (இஷ்ட தர்ஶந ஜந்ய ஸுகம் ப்ரியம்।)

விரும்பிய பொருளை அடைவதால் ஏற்படுகின்ற இன்பத்திற்கு மோதம் என்று பெயர். (ப்ராப்ய ஜந்ய ஸுகம் மோதம்।)

விரும்பி அடைந்த பொருளை அனுபவிப்பதால் ஏற்படுகின்ற இன்பத்திற்கு ப்ரமோதம் என்று பெயர். (அநுபவ ஜந்ய ஸுகம் ப்ரமோதம்।)

ஆனந்தமயகோசம் என்பது ஆனந்தவிகாரத்தைக் குறிக்கிறது.

நம்முடைய ஸ்வரூபமாகிய ப்ரஹ்மானந்தத்தில் ப்ரிய, மோத, ப்ரமோத வ்ருத்தி வேற்றுமைகள் இல்லை. நம்மிடம் நாம் செலுத்தும் அன்பு நிபந்தனைகளற்றது. பிறர் மீது நாம் செலுத்தும் அன்பு தேவைப்பட்டால் செலுத்தலாம், இல்லையென்றால் செலுத்தாமல் இருக்கலாம். ஆனால் நம்

மீது நாம் செலுத்தும் அன்பில் நமக்குத் தேர்ந்தெடுக்கும் ஆற்றல் இல்லை. நம்மை நாம் நேசித்தே ஆக வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

## ஆனந்தமய கோசமும் ஆனந்தமயமான ஆத்மாவும்

அறியாமையாகிய காரண சரீரம்தான் ஆனந்தமயகோசம். ஆனந்தமய கோசம் என்பது ஆனந்தத்தின் விகாரம். அதில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. அவை தோன்றி மறையக்கூடிய இன்பங்கள்.பார்ப்பதால் ஏற்படும் இன்பம், அடைவதால் ஏற்படும் இன்பம், அனுபவிப்பதால் ஏற்படும் இன்பம் - இவை அனைத்தும் உண்மையான பேரின்பத்தை மறைத்துக்கொண்டிருக்கின்றன.

நம்மைப் பற்றிய உண்மையை அறியாமலேயே ஆனந்தத்தைத் தேடிக் கொண்டிருக்கிறோம். கல்கண்டு இனிப்பைத் தேடுவதுபோல், ஆனந்தமாக இருந்துகொண்டு, ஆனந்தத்தைத் தேடிக் கொண்டிருக்கிறோம்.

வாழ்வில் நிறைவை அடைவதற்காக முயற்சி செய்ய வேண்டியதில்லை. நாமே நிறைவு என்பதை உணர்ந்து புரிந்துகொள்வதற்குத்தான் நிறைய முயற்சி தேவைப்படுகிறது.

ஆழ்ந்த உறக்கத்தில், ஆனந்தமய கோசத்துடன் நாம் அபிமானம் வைத்திருக்கிறோம். விழிப்பு நிலையிலும் துன்பங்கள் நீங்கும்போதும், ஆசைப்பட்டதை அனுபவிக்கும்போதும் மனதில் ஒரு வித இன்பம் தோன்றுகிறது.

அந்த இன்பமும், பேரின்ப வடிவமான ஆத்மாவை மறைக்க செய்கிறது. ஆனால் ஆத்மாவோ ஆனந்த ஸ்வரூபமாக இருக்கிறது. எல்லையற்ற பேரின்பமே ஆத்மாவின் இயல்பு. அதில் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. அது தோன்றி மறையக்கூடியதல்ல.

சுடும்தன்மை என்பது நெருப்பின் இயல்பு. சுடும்தன்மையை அதிலிருந்து பிரிக்க முடியாது. அதுபோல, ஆனந்தம் என்பது ஆத்மாவின் இயல்பு. அதனை ஆத்மாவிலிருந்து பிரிக்க முடியாது.

ஆனந்தமே ஆத்மா. ஆனந்தம் புறத்தில் இருக்கிறது என்றோ அகத்தில் இருக்கிறது என்றோ சாஸ்த்ரம் கூறவில்லை. ஆனந்தமே ஆத்மா என்று சொல்கிறது.

உள்ளே, வெளியே என்பவையெல்லாம் சார்புநிலையில் கூறப்படுபவை. உடல், ப்ராணன், மனம், புத்தி, இன்பம் ஆகிய ஐந்தும் நம்மைப் பற்றிய உண்மையைத் தெரிய ஒட்டாமல் மறைப்பதுபோல் இருக்கிறது. அவற்றோடு நம்மை இணைத்துக்கொண்டிருக்கிறோம்.

**एतत्कोशपञ्चकम्। ஏதத்கோஶபஞ்சகம்।**

இவைகளே பஞ்சகோசங்கள்.

ஐந்து கோசங்களும் ஆத்மா அல்லது நான் அல்ல. ஆத்மா இதற்கு வேறானது என்று புரிந்துகொள்வதே பஞ்சகோச விவேகமாகும். பஞ்சகோசங்கள் ஆத்மா அல்ல. அவற்றுக்கு ஆதாரமான உணர்வே ஆத்மா.

பஞ்சதசீயில் உள்ள நாடக தீப ப்ரகரணம் மிக அழகாக உவமை மூலம் இந்த உண்மையை உணர்த்துகிறது.

நாடகம் தொடங்குமுன்னரும், முடிந்த பின்னரும் மேடையில் வெளிச்சம் இருக்கிறது. விளக்கின் வெளிச்சமானது, எல்லோருடைய இருப்பையும் விளக்குகிறது, இன்மையையும் விளங்குகிறது.

பஞ்ச கோசங்களும் நடிகர்களுக்கு ஒப்பானவை. உடல், ப்ராணன், மனம், புத்தி, இன்பம், உலகம் ஆகிய அனைத்தையும் அறிகின்ற நான் இவைகளுக்கு வேறானவன். இவைகளை ஒளிர்விப்பவன். இவை நான் அல்ல.

இவ்வாறு உடல், மனம், புத்தியைப் புறப்பொருளாகவும், பொய்ப்பொருளாகவும் பார்க்கக் கற்றுக்கொண்டுவிட்டால் நமக்கு இன்பமாவது, துன்பமாவது? இதுதான் ஆன்மிகத்தின் பரம தாத்பர்யம், எல்லை. தன்னுடைய உடல், மனம், புத்தியையும், உலகிலுள்ள அனைவருடைய உடல், மனம், புத்தியையும் புறப்பொருளாகவும் பொய்ப்பொருளாகவும் பார்க்கக் கற்றுக்கொண்டுவிட்டால், அவற்றிலுள்ள மாற்றங்கள், குறைபாடுகள் எவையும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது.

எதனோடும் ஒட்டாது இருக்கும் இந்த மெய்யறிவைத்தான் அஸ்பர்ஶ யோகம் என்கிறார் கௌடபாதாசார்யர்.

**मदीयं शरीरं मदीयाः प्राणाः मदीयं मनश्च मदीया बुद्धिर्मदीयं अज्ञानमिति स्वेनैव ज्ञायते तद्यथा मदीयत्वेन ज्ञातं कटककुण्डलगृहादिकं स्वस्माद्भिन्नं तथा पञ्चकोशादिकं मदीयत्वेन ज्ञातमात्मा न भवति।**

**மதீயம் ஶரீரம் மதீயா: ப்ராணா: மதீயம் மநஶ்ச மதீயா புத்திர்மதீயம் அஜ்ஞாநமிதி ஸ்வேநைவ ஜ்ஞாயதே தத்யதா மதீயத்வேந ஜ்ஞாதம் கடககுண்டலக்ருஹாதிகம் ஸ்வஸ்மாத்பிந்நம் ததா பஞ்சகோஶாதிகம் மதீயத்வேந ஜ்ஞாதமாத்மா ந பவதி।**

**மதீயம் ஶரீரம்** - எனது உடல், **மதீயா: ப்ராணா:** - எனது ப்ராணன்கள், **மதீயம் மநஶ்ச** - எனது மனம், **மதீயா புத்திர்மதீயம் அஜ்ஞாநமிதி** - எனது புத்தி, எனது அறியாமை, **ஸ்வேநைவ ஜ்ஞாயதே** - என்று என்னாலேயே அறியப்படுகிறது. **தத்யதா மதீயத்வேந ஜ்ஞாதம்** - எவ்வாறு என்னால் அறியப்படுகிற, **கடககுண்டலக்ருஹாதிகம்** - வளையல், குண்டலம், வீடு முதலானவை, **ஸ்வஸ்மாத்பிந்நம்** - எனக்கு வேறானவையோ,

**ததா பஞ்சகோஶாதிகம்** - அவ்வாறே ஐந்து கோசம் முதலானவை, **மதீயத்வேந ஜ்ஞாதமாத்மா ந பவதி** - எனக்கு வேறானவை, என்னால் அறியப்படுபவைகளாதலால் அவை ஆத்மா அல்ல.

*எனது உடல், எனது ப்ராணன், எனது மனம், எனது புத்தி, எனது அறியாமை என்று என்னாலேயே அறியப்படுகிறது. எவ்வாறு என்னால் அறியப்படுகிற வளையல், குண்டலம், வீடு முதலானவை எனக்கு வேறானவையோ, அவ்வாறே ஐந்து கோசம் முதலானவை எனக்கு வேறானவை. என்னால் அறியப்படுபவைகளாதலால் அவை ஆத்மா அல்ல.*

## தெளிவுரை

ஆத்மா என்பது நான். எனக்கு வேறானவை அநாத்மா. என்னுடைய பேனா என்று கூறுகிறோம். பேனா நான் அல்ல. என்னுடைய உடல் என்று கூறுகிறோம். எனவே, உடல் நான் அல்ல என்று புரிந்துகொள்கிறோம். என்னுடையது என்று சொல்லும்போதே, உடையது வேறு, உடையவன் வேறு என்பது தெளிவாகிறது. உடல், மனம், புத்தி ஆகிய அனைத்தையும் நான்தான் அறிகிறேன். வளையல், குண்டலம் போன்றவை எனக்கு வேறானவை என்று தெரிந்துகொள்வதற்குப் பெரிய முயற்சி தேவைப்படுவதில்லை. ஆனால், நான் வேறு, உடல் வேறு என்று புரிந்துகொள்வதற்கு மிகுந்த முயற்சி தேவைப்படுகிறது. ஏனெனில் நாம் உடல்மயமாகிவிட்டோம்.

உடல் வேறு, நான் வேறு என்று பிரித்துப் புரிந்துகொள்ளாததுதான் அனைத்துவித உயர்வு மனப்பான்மைக்கும் தாழ்வு மனப்பான்மைக்கும் காரணமாகிறது. உடல் மீது நாம் கொண்டுள்ள அதீத பற்றுத்தான் அனைத்துவித மனநோய்களுக்கும் அடித்தளமாக அமைகின்றன.

உடலையே தான் என்று எண்ணுவது தேஹாத்ம புத்தி. நாம் இந்த உலகில் நிம்மதியாக, முழுமையான மன அமைதியோடு வாழ வேண்டுமென்றால், இந்த உடல்-மனக்கூட்டமைப்பிற்குள் இருந்துகொண்டே இதை என்னுடையதல்ல என்று நீக்கத் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆழ்ந்த உறக்கத்தில் நம்மையும் அறியாமல் உடல்பற்று நீங்கிவிடுகிறது. விழிப்பு நிலையில் ஆத்ம விசாரம் செய்து, விழிப்புணர்வோடு உடல்பற்றை நீக்கிக் கொள்கிறோம்.

உடல், மனக்கூட்டமைப்பு வேறு, நான் வேறு. அவற்றில் உரிமை கொண்டாட எதுவும் இல்லை. நடைமுறை வாழ்வில் அவற்றைக் கையாளக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அதற்குமேல் அதற்கு உண்மைத்தன்மை கொடுக்கக்கூடாது. அதில் பற்று வைக்கக்கூடாது. யான், எனது என்ற செருக்கை அறுப்பதே குறிக்கோள். யான் என்பது நம்முடைய உடல் மீது நாம் கொண்டுள்ள பற்றைக் குறிக்கிறது. எனது என்பது நம்முடைய உடைமைப் பொருட்கள்மீது நாம் கொண்டுள்ள பற்றைக் குறிக்கிறது.

என்னுடையது என்று பலவற்றை சொந்தம் கொண்டாடுகிறோம். இதனை பணிவாகவும் செய்கிறோம், கர்வத்தோடும் செய்கிறோம். உண்மையில் நம்முடையது எதுவுமில்லை. அவ்வாறு அபிமானத்தை, பற்றை விட்டவன், வானோர்க்கும் உயர்ந்த உலகமாகிய இம்மண்ணுலகிலேயே தெய்வத்திற்கு நிகராகக் கருதிப் போற்றப்படுவான். பெற்ற மெய்யறிவை புறத்தில் பிறருக்குக் காட்டி விளங்க வைக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு பிறர் தன்னைப் புரிந்துகொள்ளவில்லையே என்று வருத்தப்படுபவன் ஞானி அல்ல, ஸம்ஸாரியே.

வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலைகளையும் நாம் எவ்வாறு எதிர்கொள்கிறோம் என்பதை வைத்துத்தான் இதனைப் பிறர் புரிந்துகொள்ள முடியும்.

முன்புகூறப்பட்ட தகுதி யாருக்கு இருக்கிறதோ அவர்களுக்குத்தான் இந்த ஆத்ம ஞானத்தை விளங்க வைக்க முடியும்.

## பெற்ற ஞானத்தின் பயன்

இனி தன்னுடைய மன அமைதிக்காக, நிறைவுக்காக எதுவும் செய்ய வேண்டியதில்லை என்ற நிறைவே ஞானத்தின் பயன்.

அவனே க்ருதக்ருத்யன், செய்யும் செயலைச் செய்து முடித்தவன் என்று சாஸ்த்ரங்களில் போற்றப்படுகிறான். அவனது அனைத்துக் குறிக்கோள்களும் நிறைவுபெற்றுவிடுகின்றன.

அதற்குப் பிறகும், ஞானி உலகில் செயல்புரிவதெல்லாம் அறம்சார்ந்த விளையாட்டாக இருக்கும்.

உலகிலுள்ள இன்ப துன்ப அனுபவங்கள் ஞானியை பாதிப்பதில்லை. சிவபெருமான் நாகபூஷணராக இருக்கிறார். நாகம் என்பது துன்பம் நிறைந்த உலகைக் குறிக்கிறது. துன்பம் நிறைந்த, விஷத்தைக் கக்குகின்ற உலகத்தை ஞானி ஆபரணமாக அணிந்துகொள்கிறார்.

மூன்று உடல்கள், மூன்று நிலைகள், ஐந்து கோசங்கள் ஆகியவை ஆத்மா அல்ல என்று தெளிவுபடுத்திவிட்டார் நூலாசிரியர்.

அப்படியென்றால், உண்மையில் நான் யார் என்ற கேள்விக்கு அடுத்து விடை கூறுகிறார்.

கேள்வி: **आत्मा तर्हि कः ? ஆத்மா தர்ஹி க:?**

அப்படியானால் ஆத்மா எது?

பதில் : **सच्चिदानन्दस्वरूपः। ஸச்சிதாநந்தஸ்வரூப:।**

ஸச்சிதாநந்த வடிவம்.

கேள்வி: **सत् किम्? ஸத் கிம்?**
ஸத் என்றால் என்ன?

பதில் : **कालत्रयेऽपि तिष्ठतीति सत्।**

**காலத்ரயேபி திஷ்டதீதி ஸத்।**
முக்காலத்திலும் இருப்பது எதுவோ அது ஸத். (இருப்பு)

கேள்வி: **चित् किम्? சித் கிம்?**
சித் என்றால் என்ன?

பதில் : **ज्ञानस्वरूपः। ஜ்ஞாந ஸ்வரூப:।**
அறிவு வடிவம். (உணர்வு)

கேள்வி: **आनन्दः कः? ஆநந்த: க:?**
ஆனந்தம் என்றால் என்ன?

பதில் : **सुखस्वरूपः। ஸுகஸ்வரூப:।**
இன்ப வடிவம்.

**एवं सच्चिदानन्दस्वरूपं स्वात्मानं विजानीयात्।**

**ஏவம் ஸச்சிதாநந்தஸ்வரூபம் ஸ்வாத்மாநம் விஜாநீயாத்।**

இவ்வாறு சச்சிதானந்த ஸ்வரூபமாகத் தன்னை அறிந்துகொள்ள வேண்டும்.

## தெளிவுரை

அனைத்தையும் நீக்கிவிட்டால் வேறு என்னதான் மிஞ்சி இருக்கிறது? என்று கேட்கத் தோன்றும்.

தூய இருப்பு - தூய உணர்வு - தூய இன்பம் - இதுவே ஆத்மாவின் இயல்பு.

இந்த மூன்றும் ஒரே பொருளைத்தான் குறிக்கின்றன. தண்ணீர் திரவமாக இருக்கிறது, நிறமற்ற தன்மையுடன் இருக்கிறது, குளிர்ச்சியாக இருக்கிறது.

திரவம், நிறமின்மை, குளிர்ச்சி ஆகிய சொற்கள் மூன்று, ஆனால் அவை குறிக்கும் பொருள் ஒன்று.

அதுபோல, ஸத் சித் ஆனந்தமாகிய தூய இருப்பு உணர்வு இன்பத்தால் குறிக்கப்படும் ஆத்மா ஒன்றே.

நான் இருக்கிறேன். (ஸத் - இருப்பு)

நான் இருக்கிறேன் என்பதை உணர்கிறேன் (சித் - உணர்வு)

எதனையும் சார்ந்திராத பேரின்ப வடிவம் நான் (ஆநந்தம் - இன்பம்)

உடல், மனம், புத்திக்கு நிலையான இருப்பு இல்லை. அவை தம்முடைய இருப்புக்கு ஆத்மாவாகிய என்னைச் சார்ந்திருக்கின்றன. இருப்பே உணர்வு, உணர்வே இருப்பு. நான் இருக்கிறேன், இருக்கிறேன் என்பதை உணர்கிறேன். இருப்பையும் உணர்வையும் பிரிக்க முடியாது.

## ஸத் (இருப்பு)

மூன்று காலத்திலும் இருப்பது எதுவோ அதுவே ஸத்தாகும். இருப்பவை அனைத்தும் இருப்பைச் சார்ந்திருக்கின்றன. தூய இருப்பு எதையும் சாராதது.

நகையானது தன்னுடைய இருப்புக்குத் தங்கத்தைச் சார்ந்திருக்கிறது. ஆனால் தங்கம் தன்னுடைய இருப்புக்கு வேறு எதையும் சாராமல் இருக்கிறது. தங்கம் மாறுவதில்லை, நகைதான் மாறுகிறது. அதாவது, பெயர் வடிவங்கள் மாறுகின்றன, பொருள் மாறுவதில்லை.

எதையும் சாராத தன்மைக்கு ஸ்வதந்த்ரம் என்று பெயர். தன்னுடைய இருப்புக்குப் பிறவற்றைச் சார்ந்திருக்கின்ற தன்மைக்கு பரதந்த்ரம் என்று பெயர்.

உடல், மனக் கூட்டமைப்பு மூன்று காலங்களிலும் இருப்பதில்லை. ஆழ்ந்த உறக்கத்தில் ஒடுங்கிப்போகின்றன. எனவே அவை ஸத் அல்ல.

நான் எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறேன். தாயின் வயிற்றில் இருந்தேன், குழந்தையாக இருந்தேன், இளைஞனாக இருக்கிறேன், முதியவனாக இருப்பேன். இவையனைத்திலும் உடல் மனக்கூட்டமைப்பின் தன்மை மாறிக்கொண்டே இருக்கிறது. ஆனால் நான் மாறவில்லை, இருப்பு மாறவில்லை.

மூன்று நிலைகளும் கூட ஒரு காலத்தில் இருந்து, மற்றொரு காலத்தில் இல்லாமல் போகின்றன. கனவுக்கும் நனவுக்கும் தொடர்பே இருப்பதில்லை.

விழிப்பு முக்காலத்திலும் இருப்பதில்லை, எனவே அது ஸத்யமல்ல. கனவு முக்காலத்திலும் இருப்பதில்லை, எனவே அது ஸத்யமல்ல.

ஆழ்ந்த உறக்கம் முக்காலத்திலும் இருப்பதில்லை, எனவே அது ஸத்யமல்ல.

உடல் ஒரு காலத்தில் இருந்து, மற்றொரு காலத்தில் இல்லாமல் போகிறது எனவே ஸத்யமல்ல.

ப்ராணன் உடலை விட்டு நீங்கி ஸூக்ஷ்மமாக இருக்கிறது. பிறகு காரணத்தில் ஒடுங்கிவிடுகிறது. எனவே அது ஸத்யமல்ல.

மனம் மாறிக்கொண்டே இருக்கிறது, எனவே அது ஸத்யமல்ல. புத்தியும் அவ்வாறே.

உலகில் நாம் அனுபவிக்கும் இன்பங்களின் தன்மையைக் குறித்துச் சொல்லவே தேவையில்லை. அது நிலையற்றவை.

ஆக, எது ஸத்யம் என்று ஆராய்ந்தால், மூன்று உடல்களும், மூன்று அவஸ்தைகளும், ஐந்து கோசங்களும் ஸத்யமல்ல

என்பதை அறிந்துகொள்ளும் அறிவுதான் ஸத்யம், அறிவை அறியும் அறிவாகிய அறிபவனே ஸத்யம் என்பது விளங்கும்.

ஸத் என்பது பகவத்கீதையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

உடலுக்கு எவ்வாறு இளமைப்பருவம், வாலிபப்பருவம், முதுமைப் பருவம் ஆகியவை மாறி அமைகின்றனவோ, அப்படி உயிரானது ஓர் உடல் அழிந்தவுடன் மற்றோர் உடலை எடுத்துக்கொள்கிறது. அறிவாளி அதனைக் குறித்து மயக்கமுறுவதில்லை என்கிறார் பகவான் ஸ்ரீக்ருஷ்ணர்.

ஸத் சித் ஆனந்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், அதன் எதிர்ப்பதங்களை சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஸத் - அஸத் (அந்ருதம்), சித் - ஜடம், ஆநந்தம் - துக்கம்

மூன்று உடல்கள், மூன்று அவஸ்த்தைகள், ஐந்து கோசங்களாகிய அனைத்தும் அந்ருத ஜட துக்க ஸ்வரூபமானவை. அநாத்மாவாகிய இவற்றுக்கு ஸாக்ஷியாக இருப்பதே ஸத்-சித்-ஆநந்தம்.

ஸாக்ஷி என்றால் நேரடியாகப் பார்ப்பது என்று பொருள் (ஸாக்ஷாத் ஈக்ஷதே இதி ஸாக்ஷி:।)

தூய இருப்பு-உணர்வு-இன்பமே ஸாக்ஷியாக இருக்கிறது.

அந்ருதம் என்பது உண்மையல்ல. (அறிவால் நீக்கப்படுவதால் - ந ஸத் பாத்யமாநத்வாத்।)

அந்ருதம் என்பது பொய்யுமல்ல, (அது விளங்கிக் கொண்டிருப்பதால் - அஸத் ந ப்ரதீயமாநத்வாத்।)

தங்கம்தான் நகையாகக் காட்சியளிக்கிறது. தங்கம் ஸத். நகை அந்ருதம். நகையை அறிவால் நீக்கிவிட முடியும். இருப்பது தங்கம்தான். தங்கமே நகையாகக் காட்சியளிக்கிறது. தங்கத்திற்கு வேறாக நகைக்கு இருப்பு இல்லை என்பது நமக்குத் தெளிவாக விளங்குகிறது.

அதுபோல, உடல் மனக்கூட்டமைப்பாகிய அநாத்மா அந்ருத ஜட துக்க ஸ்வரூபம். அது உண்மையல்ல. ஆத்மாவிற்கு அந்நியமாக அவற்றுக்கு இருப்பு இல்லை.

அவை விளங்குகின்றன, எனவே அவை அஸத் அல்ல. அவற்றை அறிவால் நீக்கிவிட முடியும், எனவே அவை ஸத்தும் அல்ல. உண்மையுமில்லாத பொய்யுமில்லாத தன்மையுடையவற்றை மித்யா என்று கூறுகிறோம்.

விசாரம் செய்து அறிவால் நீக்கப்படுபவை உண்மையுமல்ல, பொய்யுமல்ல. எனவே அவை மதிக்கப்பட வேண்டியவையுமல்ல. அவற்றை ஒரு பொருட்டாகக் கருத வேண்டிய அவசியமில்லை. அவை குறித்து இன்பமோ துன்பமோ கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்த உண்மை புரிந்துவிட்டால், இந்த ஞானமானது ஆழமான மனதிற்குச் சென்றுவிட்டால், எந்த உணர்ச்சியையும் நம்மால் அநாயாஸமாகக் கையாள முடியும். வாழ்க்கையில் எதைக் குறித்தும் அச்சப்பட மாட்டோம். உலகில் பலருக்கும் தான் இறந்துவிடுவேன் என்ற பயம் இருக்கிறது. பயங்களுள் தலையாயது மரண பயம்தான். ஆனால் நாம் இறக்கவே மாட்டோம். முக்காலத்திலும் இருக்கும் ஸத்ஸ்வரூபம் நாம் என்பது வேதாந்தம் கூறும் உண்மை.

இல்லாததற்கு இருப்பு இல்லை. இருப்பது இல்லாமல் போவதில்லை. இல்லாமலிருந்து பிறகு தோன்றுவதில்லை, இருந்து பிறகு, இல்லாமல் போவதில்லை என்று கூறுகிறது கீதை.

ஆத்மா அல்லது நானாகிய தூய இருப்புக்கு இறப்பே கிடையாது. அது யாண்டும் உள்ளது. முக்காலத்திலும் உள்ளது.

ஆனால் நம்முடைய உடல் நிச்சயமாக ஒரு நாள் அழிந்தே தீரும். தோன்றியவை அனைத்தும் அழியத்தான் செய்யும்.

தன்னுடைய உடலும், தன்னைச் சுற்றியிருப்பவர்களுடைய உடலும் ஒரு நாள் அழிந்துவிடும் என்ற உண்மையை

உள்வாங்கிக்கொள்வதால் பலருடைய பிரச்சினைகள் தீர்ந்துவிடும்.

வாழ்க்கை நித்யமானது என்று எண்ணுவதுதான் பல துன்பங்களுக்குக் காரணமாகிவிடுகிறது.

ஆக, நான் ஸத். நான் உள்பொருள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

## சித் (உணர்வு) - அறிவு

சித் என்பது அறிவு வடிவம். அறிவானது இரண்டு விதங்களில் உள்ளது. எண்ண வடிவிலான அறிவு, எண்ணங்களை ஒளிர்விக்கும் அறிவு. நம்மிடம் அறிவும் இருக்கிறது, அறியாமையும் இருக்கிறது. நமக்குத் தமிழ்மொழி தெரியும், ஜப்பானிய மொழி தெரியாது.

தெரியும், தெரியாது என்பதைத் தெரிந்துகொள்ளும் அறிவுதான் எண்ணங்களை ஒளிர்விக்கும் அறிவு, அறிவை அறியும் அறிவு.

எண்ண வடிவிலான அறிவிற்கு வ்ருத்தி ஜ்ஞாநம் என்று பெயர். இந்த அறிவையும் அறியாமையையும் அறிகின்ற அறிவுக்கு ஸ்வரூப ஜ்ஞாநம் என்று பெயர். அதுவே ஆத்மா. அந்த அறிவுதான் ப்ரஜ்ஞாநம் - தூய அறிவு எனப்படும்.

சித்தாகிய நெருப்பில் தோன்றியவள், சித்ஶக்தியாக இருப்பவள், உணர்வு வடிவினள் என்று ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் அம்பிகையைப் போற்றுகிறது.

நம் மனதிலுள்ள எண்ண வடிவிலான அறிவு ஜடமானது. எண்ண வடிவிலான வ்ருத்தி ஞானத்தை ஒளிர்விப்பது ஸ்வரூப ஞானம்.

நம் மனதில் எண்ணற்ற எண்ணங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட ஓர் எண்ணம்தான் மேலோங்குகிறது. எண்ணங்கள் தோன்றுவதில் ஒரு நியதி

இருக்கிறது. எண்ணங்கள் ஜடமானவை. உணர்வாகிய ஸ்வரூப ஞானமானது, ஒவ்வொரு எண்ணமாக வ்யாபிக்கிறது.

இருட்டு அறை ஒன்றிற்குள் நுழைந்து, விளக்கின் வெளிச்சத்தில் ஒவ்வொரு பொருளாகப் பார்க்கிறோம். அதுபோல, ஒவ்வொரு எண்ணத்தையும் உணர்வானது ஒளிர்விக்கிறது. உணர்வானது ஒளிர்விப்பதால், எண்ணங்கள் வந்து போய்க் கொண்டிருக்கின்றன. எண்ணத்தில் உணர்வு ப்ரதிபலிக்கிறது. நம் மனதிற்குள் இதுதான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

நாடக தீபம் போன்று எத்தனை வ்ருத்திகள் வந்தாலும் போனாலும் உணர்வு தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது.

அந்த உணர்வே நான். உணர்வுதான் இருக்கிறது. உணர்வே இருப்பு. இருப்பே உணர்வு. உணர்வும் இருப்பும் வேறல்ல. ஆத்மா ஸச்சிதானந்தம், எங்கும் நிறைந்தது என்று கூறுகிறது சாஸ்த்ரம்.

## ஜடப்பொருட்களுக்கு அறிவு இருக்கிறதா?

ஒரு ஜடப்பொருளில் தூய உணர்வும் இருக்கிறது, தூய இருப்பும் இருக்கிறது. இருப்பு இருப்பது புரிகிறது, அதில் உணர்வு இருப்பது விளங்கவில்லையே என்ற கேள்வி தோன்றுகிறது.

தூய உணர்வு இருக்கிறது, ஆனால் அதனை ப்ரதிபலிக்கும் ஊடகம் இல்லை. எனவே அது வெளிப்படாமல் இருக்கிறது. நம்மிடம் மனம் என்ற ஊடகம் இருப்பதால், அது வெளிப்படுகிறது.

## ஆத்மா அறிவே வடிவானது

நான் எண்ணங்களை ஒளிர்விக்கிறேன். ஒளிக்கு ஒளியாக இருக்கிறேன். தூய உணர்வாகிய நான் அறியாமையாகிய இருளுக்கும், அறிவாகிய ஒளிக்கும் ஒளியாக இருக்கிறேன்.

ஒருவனுக்கு அறிவே இல்லை என்று சொல்லும்போதும், அவன் அறிவு வடிவமாக இருப்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

மெய்யறிவிற்கும் உலகியல் வித்தைக்கும் தொடர்பில்லை என்பது இதிலிருந்து விளங்குகிறது. கல்வியறிவற்ற, எளிமையான ஒருவருக்குக்கூட இந்த உண்மை விளங்கிவிடும். புண்ணியமும் பகுத்தறிவும் இருந்தால் போதும். மோக்ஷத்தைத் தரக்கூடிய ஞானத்தை எவரும் எளிதாகப் பெற முடியும். அஹங்காரத்தை அடியோடு அழிக்கின்ற ஞானம் இது. நான் தூய உணர்வு என்பதை உணர்வதால் ஏற்படும் மகிழ்ச்சிக்கு ஈடு இணை இல்லை.

## ஆத்மா ஆனந்த ஸ்வரூபம்

நான் தூய இன்ப வடிவம் என்பது கேட்பதற்கு வேண்டுமானால், இன்பமாக இருக்கும். ஆனால் வாழ்க்கை அனுபவம் துன்பம் நிறைந்ததாகத்தானே இருக்கிறது? என்று கேட்கத் தோன்றும்.

நம்முடைய வாழ்க்கையின் குறிக்கோளே நம்முடைய உண்மை இயல்பாகிய ஆனந்தத்தை உணர்வதுதான்.

நாய் எலும்புத் துண்டைக் கடிக்கிறது. எலும்புத்துண்டு நாயின் மேலண்ணத்தில் குத்தி ரத்தம் வருகிறது. ஆனால் எலும்புத்துண்டிலிருந்து ரத்தம் வருவதாக நாய் எண்ணிக்கொள்கிறது. மேலும் தொடர்ந்து எலும்புத்துண்டைக் கடிக்கிறது.நாய் எலும்புத்துண்டைக் கடிப்பதுபோல, ஒட்டகம் முட்செடியைச் சாப்பிடுவதைப்போல, நாமும் பணம், பதவி, புகழ் போன்றவற்றிலிருந்து இன்பம் வருவதாக நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

நமக்கு விருப்பமானவை நமக்குக் கிடைக்கும்போது, நம்முடைய மனம் தற்காலிகமாக அமைதிபெறுகிறது. அந்த அமைதியில் நம்முடைய ஸ்வரூப ஆனந்தம் ப்ரதிபலிக்கிறது.

நம்மிடத்திலுள்ள ஆனந்தத்தைத்தான் நான் மனிதர்கள், பொருட்கள், சூழ்நிலைகள் போன்றவற்றிலிருந்து தோன்றுவதாக எண்ணிக் கொள்கிறோம்.

துன்பம் என்பது ஒரு மாயத்தோற்றம். இன்பமே நம்முடைய உண்மையான இயல்பு. துன்பத்தையும் இன்பமாகக் காண்பதற்கு மெய்யறிவு வேண்டும்.

துன்பம் என்பது உலக வாழ்வின் இயல்பு. இன்பம் என்பது என்னுடைய இயல்பு. மெய்யறிவாளன் (தன்னை தூய இருப்புணர்வு இன்பமாக உணர்ந்தவன்) உலகில் இன்பத்தைத் தேடுவதில்லை.

துன்பம் என்பது உலக வாழ்வின் இயல்பு என்று ஏற்றுக்கொள்பவனை துன்பம் துன்புறுத்துவதில்லை. அத்தகையவன், பெயர்க்க முடியாத இயற்கையாகிய தன்னுடைய உண்மை இயல்பாகிய ஆனந்தத்தை உணர்ந்து, அதில் நிலைத்திருக்கிறான்.

உடல், மனம், புத்தி ஒரு காலத்தில் இருந்து, மற்றொரு காலத்தில் இல்லாமல் போவதால் அந்ருதம். என்னால் அறியப்படுவதால் ஜடம். அவற்றைச் சார்ந்திருந்தால், துன்பமே ஏற்படும். அவற்றை சாராமல் இருத்தலே இன்பம்.

இவ்வாறு ஸச்சிதானந்த ஸ்வரூபமாக ஆத்மாவை உணர்ந்துகொள்ள வேண்டும்.

## ஸச்சிதானந்தம் – ஸோமாஸ்கந்த தத்துவம்

அனைத்து சிவாலயங்களிலும் பெரிய தேரில் ஸோமாஸ்கந்த மூர்த்தியை வைத்து வழிபடுவது வழக்கம்.

தேர் என்பது உலகம் அல்லது நம்முடைய உடலைக் குறிக்கும் (அண்டம் அல்லது பிண்டம்).

ஒரே பீடத்தில், ஒரே பிரபாவளியின் கீழ் மூன்று தெய்வங்கள் அதில் வீற்றிருக்கின்றன.

சிவன் ஸத் ஸ்வரூபம்.

அம்பிகை சித் ஸ்வரூபம்.

இரண்டு கைகளிலும் பூச்செண்டுடன் நிற்கும் முருகன் ஆனந்த ஸ்வரூபம்.

ஸ உமா ஸ்கந்த:

ஸ – சிவபெருமான், உமா – அம்பிகை, ஸ்கந்த: – முருகன்

ஸச்சிதானந்த தத்துவத்தைத் தேரில் வைத்து இழுக்கிறோம். உண்மையில் நம்மைத்தான் தேரில் வைத்து வழிபடுகிறோம்.

அனைத்துப் பெயர் வடிவங்களும் அந்ருத ஜட துக்க வடிவமானவை. அவை நிழலுக்கு ஒப்பானவை. அவற்றைப் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை.

நான் ஸச்சிதானந்த ஸ்வரூபம் என்ற ஞானமிருப்பவன் ப்ராஹ்மணனாக இருந்தால் என்ன? சண்டாளனாக இருந்தால் என்ன? என்கிறார் ஆதிசங்கரர். தன்னைப் பற்றிய உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் எந்த ஜாதியில் தோன்றியவருக்கு வேண்டுமானாலும் வரலாம்.

ஆதி சங்கரர் ப்ரஹ்மஸூத்ரத்தில் அபஶூத்ர அதிகரணம் என்ற தலைப்பில் ஞானத்தைப் பெறுவதற்கு ஜாதி, இனம், மொழி இவைகள் தடையில்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

வேதம் படிப்பதற்கும், வேதத்தில் சொல்லப்பட்ட கர்மங்களைச் செய்வதற்கும்தான் பொறுப்பான ஒரு ஸமூஹத்தை உருவாக்கியிருக்கிறார்களே தவிர, குறிப்பிட்ட ஒரு ஸமூஹத்திற்குத் தான் ஞானம் பெற தகுதி, மற்றவர்களுக்குத் தகுதி இல்லை என்று சாஸ்த்ரத்தில் எங்கும் சொல்லப்படவில்லை.

தூய இருப்பு தூய உணர்வு தூய இன்பமே தன்னுடைய ஸ்வரூபம் என்று அறிந்துகொள்ள வேண்டும்.

இருப்பே உணர்வு. உணர்வே இருப்பு. இன்பமே உணர்வு. உணர்வே இன்பம். இருப்பே இன்பம். இன்பமே இருப்பு.

சொற்கள் மூன்று எனினும், பொருள் ஒன்று என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நான் தூய இருப்பாகவும் உணர்வாகவும் இன்பமாகவும் இருக்கிறேன்.

தற்காலிகமான மனம், புத்தியை உடைய உடல் நான் அல்ல. அவை நான் அணிந்திருக்கும் ஆடை. அவற்றுக்கு உண்மைத்தன்மை கொடுக்கக்கூடாது.

இந்த ஞானமானது எவ்வளவு தூரம் நம்முடைய ஆழ்மனதில் பதிகிறதோ, அவ்வளவு தூரம் நாம் நிஷ்டர்களாகிறோம். பிறகு, இது அசைக்க முடியாத ஞானமாகிவிடுகிறது.

குழி தோண்டி, அதில் கம்பை நட்ட பிறகு, அது அசையாமல் இருக்கிறதா என்று அசைத்துப்பார்த்துத் தெரிந்துகொள்வர். அதுபோல், நாமும் இந்த ஞானத்தை ஆழமான மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். வாழ்க்கை அனுபவங்கள் நம்மை அசைத்துப் பார்க்கும்பொழுது, கலங்காமல் உறுதியாக நிற்பதற்கு ஞான நிஷ்டை உதவும்.

அதிகாரி விசாரமும் ஆத்ம விசாரமும் நிறைவுபெற்றன.



# சிருஷ்டி விசார:

## படைப்பைப் பற்றிய ஆராய்ச்சி

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

## ஜகத் விசாரம் அல்லது ஈச்வர விசாரம்

ஆத்மாவாகிய நான், உடல், மனம், புத்திக்கு வேறானவன் என்று தெரிந்துகொள்வது மட்டும் போதாது. அப்பொழுதும் வேற்றுமை இருந்துகொண்டுதான் இருக்கும்.

உடல் வேறு, உலகம் வேறு, மக்கள் வேறு என்ற வேற்றுமை ஆத்ம ஞானத்தினால் மட்டும் அழியாது. வேற்றுமை அடியோடு நீங்க வேண்டுமென்றால், பொய்மை அடியோடு நீங்க வேண்டும். உடல், மனம், புத்தியின் பொய்மை தெளிவாக விளங்க வேண்டும். அனைத்து உயிர்களும் சச்சிதானந்தமாகிய தனக்கு வேறாக இல்லை என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். உயிர் வேறு, உலகம் வேறு, ஆத்மா வேறு என்ற வேற்றுமையை நீக்குவதற்கு சாஸ்த்ரம் ஒரு வழிமுறையை உபதேசித்திருக்கிறது. அதுவே ஈச்வர விசாரம். உயிருக்கு உயிரான ஈச்வரனை அறிமுகப்படுத்தி, அவரிடமிருந்துதான் இந்த உலகம் தோன்றியிருக்கிறது என்று கூறி, அவருடைய ஸ்வரூபத்தைக் கூறி, அவருக்கு வேறாக உலகம் இல்லை என்பதை உறுதியாக நிலைநாட்டுகிறது. அதனோடு நின்றுவிடாமல், அந்த ஈச்வரனும் நானும் ஒன்று என்று கூறி, ஒருமையை உபதேசித்து நிறைவுசெய்கிறது. த்வைதத்தை (இருமையை) அடியோடு நீக்குகிறது. இருமையை அழிப்பதில்லை, பாதிக்கிறது. அறிவால் அதனைப் பொய் என்று நீக்குவதே பாதித்தல். இருமையை ஸ்தூலமாக நீக்க முடியாது. நீக்க வேண்டிய அவசியமில்லை. ஸ்தூலமாக நீக்கிவிட்டால், ஞானத்தை அனுபவிப்பதற்கு இடமிருக்காது.

அறிவால் வேற்றுமையாகிய இருமை நீக்கப்படுகிறது. இந்த உண்மை புரிந்த பிறகு, எவ்வித வேற்றுமையும் நம்மைப் பாதிப்பதில்லை. உயர்வு மனப்பான்மை, தாழ்வு மனப்பான்மை முதலிய எவ்வித வேற்றுமையும் தோன்றுவதற்கு வழியே

இல்லை. இதுவே சாஸ்த்ரத்தின் பயன். இதற்காக சாஸ்த்ரம் அடுத்து, ஈச்வர விசாரம் அல்லது ஜகத் விசாரத்தைச் செய்யத் தொடங்குகிறது.

ஈச்வர விசாரம் (இறைவனைப் பற்றிய ஆராய்ச்சி) அல்லது ஜகத் விசாரம் (உலகைப் பற்றிய ஆராய்ச்சி)

வேதாந்தப்படி உலகைப் பற்றிய ஆராய்ச்சியும், இறைவனைப் பற்றிய ஆராய்ச்சியும் ஒன்றே.

இறைவனும் உலகமும் வேறு வேறல்ல. எப்படி தங்கமானது நகையாகத் தோற்றமளிக்கிறதோ, அதுபோல இறைவனே உலகமாகக் காட்சியளிக்கிறார் என்பது வேதாந்தத்தின் அடிப்படைக் கருத்து.

**अथ चतुर्विंशतितत्त्वोत्पत्तिप्रकारं वक्ष्यामः।**

**அத சதுர்விம்ஶதி தத்த்வோத்பத்தி ப்ரகாரம் வக்ஷ்யாம:।**

இனி, இருபத்து நான்கு தத்வங்களின் தோற்றமுறையைக் கூறுவோம்.

அத என்றால் பிறகு. ஓம் என்ற சொல்லைப் போன்று, அத என்பது சாஸ்த்ரத்தில் கையாளப்படும் ஒரு மங்கலச் சொல்லாகும்.

ஓம் அத ஓம் அத ஓம் அத என்றுதான் வேதாந்த பாடமே தொடங்குகிறது. யோக ஸூத்ரம், பூர்வ மீமாம்ஸா ஸூத்ரங்கள் அனைத்தும் அத என்றுதான் தொடங்குகின்றன.

அத என்பது தெய்விகம் பொருந்திய, புனிதமான சொல்.

உலகில் உள்ள பதார்த்தங்களை, சாஸ்த்ர நூல்கள் பல தத்துவங்களாகப் பிரித்துக் கூறுகின்றன.

24 தத்துவங்கள், 36 தத்துவங்கள், 96 தத்துவங்கள் - என ஒவ்வொரு ஸித்தாந்தத்திலும் வகுத்துக் கூறப்படுகின்றன.

அத்வைத வேதாந்த ஸித்தாந்தத்தில் 24 தத்துவங்கள் கூறப்படுகின்றன.

5 பூதங்கள், 5 அறிவுக்கருவிகள், 5 செயற்கருவிகள், 5 ப்ராணன்கள், மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் - இவையே 24 தத்துவங்கள். தத்த்வம் என்ற சொல்லுக்கு வஸ்து, உள்பொருள் என்று அர்த்தம்.

இனி 24 தத்துவங்கள் தோன்றிய முறையைக் கூறப்போகிறோம் என்று ப்ரதிஜ்ஞை செய்கிறார் நூலாசிரியர்.

**ब्रह्माश्रया सत्त्वरजस्तमोगुणात्मिका माया अस्ति।**

**ப்ரஹ்மாஶ்ரயா ஸத்த்வரஜஸ்தமோகுணாத்மிகா மாயா அஸ்தி।**

ப்ரஹ்மத்தைச் சார்ந்து, ஸத்வ, ரஜஸ், தமோ குணவடிவமான மாயை உள்ளது.

## தெளிவுரை

ப்ரஹ்ம என்ற சொல்லுக்குப் பெரிய பொருள் என்று அர்த்தம். (ப்ருஹ் என்ற வேர்ச்சொல்லிலிருந்து பிறந்தது).

ப்ரஹ்ம என்பது உபநிஷத்துக்களில் பரம்பொருளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பெயராகும்.

ஸம்ஸ்க்ருத மொழியில் சொற்களைக் குறித்தே பால் வேற்றுமை அமைகிறது. ப்ரஹ்ம என்ற சொல் ஆண்பால் சொல்லுமல்ல, பெண்பால் சொல்லுமல்ல, ஒன்றன்பால் சொல்.

சாஸ்த்ரங்களில் ப்ரஹ்மமானது பரப்ரஹ்மம், அபரப்ரஹ்மம் என்று இரண்டு வகையாகக் கூறப்படுகிறது.

மாயையோடு தொடர்புடைய ப்ரஹ்மத்திற்கு அபரப்ரஹ்மம் என்று பெயர். மாயையோடு தொடர்பில்லாத ப்ரஹ்மத்திற்கு பரப்ரஹ்மம் என்று பெயர்.

## பரப்ரஹ்ம ஸ்வரூபம்

### 1. நிர்விகாரம்

எவ்வித மாற்றங்களும் அற்றது. ஒருபொழுதும் தன்னை அழித்துக் கொள்ளாதது, அழிக்க முடியாதது.

தங்கமே நகையாகக் காட்சியளிக்கிறது. ஒரு நகையிலிருந்து மற்றொரு நகையாக அது உருவெடுக்கும்போதும், தங்கம் எவ்வித மாற்றத்தையும் அடைவதில்லை. அதுபோல, பரம்பொருள் பிரபஞ்சத்திற்கு மாற்றமற்ற காரணமாக இருக்கிறது. மாற்றமற்ற காரணமாக இருப்பது விவர்த்த காரணம் எனப்படும்.

### 2. நிர்க்குணம்

பரப்ரஹ்மம் குணங்களற்றது. ஸத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம் அனைத்தும் மாயையின் அம்சங்கள். ப்ரஹ்மனிடத்தில் ஒரு குணமும் இல்லை.

### 3. அநாதி

ஆதி அற்றது, தனக்குக் காரணம் இல்லாதது.

### 4. அலக்ஷணம்

இது அல்ல, இது அல்ல என்று கூறி, பிறவற்றை நீக்கித்தான் விளக்க முடியுமே தவிர, இதுதான் பரப்ரஹ்மம் என்று சுட்டிக்காட்ட இயலாது. ஸங்கீதத்திற்கு ஆதாரம் ச்ருதி. ஆனால் அந்த ச்ருதியை சொற்களால் விளக்கிக் கூற முடியாது. ச்ருதியைப் போன்று ஸூக்ஷ்மமானது ப்ரஹ்மம்.

## அபரப்ரஹ்ம ஸ்வரூபம்

மாயையோடு கூடிய ப்ரஹ்மத்தைத்தான் ஈச்வரன், கடவுள், இறைவன், தெய்வம் என்றெல்லாம் கூறுகிறோம்.

ப்ரஹ்மம் என்பது கடவுள். மாயை என்பது கடவுளிடம் இருக்கக்கூடிய ஒரு சக்தி என்பது சைவம், சாக்தம் போன்ற மதங்களின் கருத்து.

கடவுள் தன்னுடைய மாயாசக்தியினால் உலகத்தையும் உயிர்களையும் படைக்கிறார் என்பதும் மதங்களின் கருத்து.

கடவுள் எப்பொழுதும் இருக்கிறார், மாயையும் எப்பொழுதும் இருக்கிறது. உயிர்களும் எப்பொழுதும் இருக்கின்றன.

பதியாகிய இறைவன், பசுவாகிய உயிர், பாசமாகிய உலக வாழ்க்கை ஆகிய மூன்றும் அநாதி - அவை எப்பொழுது தோன்றின என்று கூற முடியாது என்கிறது சைவ ஸித்தாந்தம்.

இவ்வாறு இறைவன், உயிர், உலகம் ஆகிய மூன்றும் உண்மை என்று கூறி, முப்பொருள் உண்மையைத்தான் பெரும்பாலான மதங்கள் கூறுகின்றன. ஆதிசங்கரர் அத்வைத வேதாந்த ஸித்தாந்தத்தில், ஒருபொருள் உண்மையைக் கூறுகிறார். ப்ரஹ்மன் இருக்கிறது, ப்ரஹ்மத்தைச் சார்ந்து மாயை என்ற ஒன்று இருக்கிறது.

இருப்பது ஒருபொருள்தான் என்றால், மாயையின் தன்மை என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

**மாயை**

மாயை என்பது உள்பொருளுமல்ல, இல்பொருளுமல்ல. மாயை உண்மையுமல்ல, பொய்யுமல்ல. எது இல்லையோ, அதுவே மாயை. (யா மா ஸா மாயா।)

இருப்பதுபோல் தோன்றினாலும், உண்மையில் இல்லாதது மாயை (optical illusion-காட்சிப்பிழை).

கயிற்றைப் பாம்பாகப் பார்க்கிறோம். நல்ல வெளிச்சத்தில் கயிறுதான் தெரிகிறது. நல்ல இருட்டில் ஒன்றுமே தெரிவதில்லை. அரைகுறை வெளிச்சத்தில்தான் கயிற்றைப் பாம்பாகப் பார்க்கிறோம்.

ஒரு பொருளை மற்றொரு பொருளாகப் பார்க்கிறோம்.

ஏன் அவ்வாறு பார்க்கிறோம்?

எங்கோ கயிற்றைப் பார்த்திருக்கிறோம். வேறு ஏதோ ஓரிடத்தில் பாம்பைப் பார்த்திருக்கிறோம். இரண்டையும் குழப்பிக்கொண்டுவிட்டோம்.

ஏன் அவ்வாறு குழப்பிக்கொண்டோம்?

இந்தக் கேள்விக்குப் பதில் இல்லை. அதுதான் மாயை. மாயை என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்ள முடியாது என்று புரிந்துகொள்வதே அறிவுடைமை.

வாழ்க்கையில் நம்முடைய அனுபவங்கள் அனைத்தும் மாயையே ஆகும்.

என்றும் புரிந்துகொள்ள முடியாத, விடுவிக்க முடியாத புதிர் மாயை. மாயைக்கு உதாரணம் நம்முடைய கனவுதான்.

மாயை என்பது அவ்யக்தம் என்ற பெயரை உடையது, பரமேச்வரனுடைய சக்தியாக இருப்பது, காரணமற்றது, ஆராய்ச்சி செய்தால் இல்லாமல் போவது (அவித்யா), முக்குணங்களை உடையது, நாமரூபங்களுக்கு அப்பாற்பட்டது (பரா). அறிவாளி, அதன் காரியத்தை வைத்து மாயையை அநுமானம் செய்துகொள்கிறான்.

மாயாசக்தியினிடமிருந்துதான் உலகமே தோன்றுகிறது. மாற்றமில்லாத பரம்பொருளின் மீது மாயையானது, பல்வேறு ஜாலவித்தைகளைக் காட்டிக் கொண்டிருக்கிறது.

ஒரு தங்கக்கட்டிக்குள் பலவிதமான ஆபரணங்கள் மறைந்திருக்கின்றன. அதுபோல பலவித நாமரூபங்கள் பரம்பொருளுக்குள் மறைந்திருக்கின்றன. அவ்யக்த நாமரூப பீஜமாக இருக்கிறது மாயை.

## ப்ரஹ்மத்தின் தன்மைகளும் மாயையின் தன்மைகளும்

ப்ரஹ்மம், மாயை இரண்டுமே அநாதி – காரணமற்றவை.

ப்ரஹ்மம் ஸத்யம் (உண்மை), மாயை மித்யா (தோற்றம்).

ப்ரஹ்மம் குணங்களற்றது, மாயை முக்குணமயமானது.

ப்ரஹ்மம் உணர்வாக இருப்பது, மாயை ஜடம்.

ப்ரஹ்மம் மாற்றங்களற்றது, மாயை ஓயாமல் மாறிக்கொண்டிருப்பது.

ப்ரஹ்மம் உலகிற்கு விவர்த்த உபாதாந காரணம் (மாறாத பொருட்காரணம்). மாயை, பரிணாமி உபாதாந காரணம் (மாற்றங்களை உருவாக்குகின்ற பொருட்காரணம்).

ப்ரஹ்மம் அறிவால் அழிக்க முடியாதது. மாயை அறிவால் அழிக்கக்கூடியது.

## விவர்த்த உபாதாந காரணம்-பரிணாமி உபாதாந காரணம்

நகைக்குத் தங்கம் விவர்த்த உபாதாந காரணம்.

அலைக்குத் தண்ணீர் விவர்த்த உபாதாந காரணம்.

குடத்திற்கு மண் விவர்த்த உபாதாந காரணம்.

அதுபோல உலகிற்கு ப்ரஹ்மம் விவர்த்த உபாதாந காரணம். தன்னை மாற்றிக்கொள்ளாமல், காரணமாக இருப்பது விவர்த்த உபாதாந காரணம்.

பால் தயிராவது பரிணாமி உபாதாந காரணம். தன்னை மாற்றிக்கொண்டு காரணமாக இருப்பது. மாயை, உலகிற்கு பரிணாமி உபாதாந காரணமாக இருக்கிறது.

## ப்ரபஞ்சத்தின் இயக்கத்திற்குக் காரணம்

அசேதனமாக இருப்பினும், மாயைக்கு ஒரு சிறப்பான ஆற்றல் இருக்கிறது. சேதனமான ப்ரஹ்மத்தின் சேதனத்தன்மையை இரவல் வாங்கிக்கொள்ளும் ஆற்றலே அது.

ப்ரஹ்மம் மாற்றங்களற்ற காரணம். அது தனியாக ப்ரபஞ்சத்தின் தோற்றத்திற்குக் காரணமாக இருக்க முடியாது.

மாயை ஜடம். அது தனித்து இயங்க முடியாது.

மின்விசிறியும் தனித்து இயங்க முடியாது. மின்சாரமும் தனித்து இயங்க முடியாது. இரண்டும் இணைந்தால்தான் இயக்கம் என்பது நிகழும். அது போல ப்ரஹ்மமும் தனித்து இயங்க முடியாது. மாயையும் தனித்து இயங்க முடியாது.

கரிய நிறமும், குளிர்ந்த தன்மையும் உடைய இரும்புக் குண்டு ஒன்றை, நெருப்பில் இட்டால், அது சிவந்த நிறமும், சுடும் தன்மையும் உடையதாகக் காட்சியளிக்கிறது.

மாயை இரும்புக் குண்டைப் போன்றது, அது அசேதனம். அப்படிப்பட்ட மாயை ப்ரஹ்மத்தின் (அருளால்) தொடர்பால் உணர்வுள்ளதாகக் காட்சியளிக்கிறது. உண்மையில் அதற்கு உணர்வில்லை. மாயையினால்தான் ப்ரபஞ்சமனைத்தும் தோன்றுகின்றன. ஆனால் மாயையால் தனித்து இயங்க முடியாது. தாயானவள், தந்தையின் தொடர்பின்றி, தனியாகக் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாது.

தந்தையும், தாயின் உதவியின்றி, தனியே குழந்தையை உற்பத்திசெய்துவிட முடியாது.

குழந்தையை உண்டுபண்ணி வளர்க்கும் ஆற்றல் தாயிடம் இருக்கிறது. பீஜ தானம் செய்யும் ஆற்றல் தந்தையிடம் இருக்கிறது. (தாய், தந்தை, குழந்தை மூவருமே மாயைதான், அன்னவிகாரம்தான்.)

ப்ரஹ்மம் நிர்விகாரம், எவ்வித மாற்றங்களும் இல்லாதது. மாயையுடன் கூடிய ப்ரஹ்மம்தான் ஜகத்திற்குக் காரணமாக இருக்கிறது. மாயை நீங்கிவிட்டால், உலகமே இல்லை.

உண்மையில் ப்ரஹ்மம்தான் மாயையினால் உலகமாகக் காட்சியளிக்கிறது. தூய உணர்வாகிய ப்ரஹ்மன்தான்

உலகங்களாகவும் உடல்களாகவும் உள்ளங்களாகவும் மாயையினால் காட்சியளிக்கிறது. மாயையில் ப்ரதிபிம்பிக்கின்ற சைதன்யமே நிமித்த காரணம் (அறிவுக்காரணம்).

கேவல ப்ரஹ்மன் படைப்புக்குக் காரணம் அல்ல. கேவல மாயையும் படைப்புக்குக் காரணம் அல்ல. மாயையும் ப்ரஹ்மனும் இணைந்துதான் படைப்புக் காரணம்.

தூய உணர்வாகிய பரம்பொருள் (நிர்க்குண ப்ரஹ்மம்) விவர்த்த உபாதாந காரணம். அது படைப்புக் காரணமல்ல.

இந்தப் படைப்புக்கு, மாயையில் ப்ரதிபிம்பிக்கிற சைதன்யம் நிமித்த காரணம். மாயை, பரிணாமி உபாதாந காரணம்.

படைப்பைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் எல்லோருக்கும் இருக்கிறது. சப்த ப்ரமாணமாகிய சாஸ்த்ரம், அறியாமையும் ஐயமும் உள்ள இடத்தில்தான் செயல்படுகிறது.

சாஸ்த்ரங்கள் படைப்பைப் பற்றி ஆராய்வதன் நோக்கமே, அதனை நீக்குவதுதான். நம்முடைய உடல், மனம், புத்தி ஆகியவற்றை ஆராய்ந்து, அவை உண்மையல்ல என்ற அறிவால் நீக்குவதே சாஸ்த்ரங்களின் நோக்கம்.

நம்முடைய தனிப்பட்ட அறிவைக் கொண்டு பார்த்தால், ஸ்ருஷ்டியில் எதுவும் விளங்காது. அனைத்தும் பரம்பொருளாகப் பார்த்தால்தான், இதன் உண்மைத்தன்மை விளங்கும்.

எப்பொருளையும் மெய்ப்பொருளாகக் காணும் அறிவே, படைப்பைக் குறித்த அனைத்து கேள்விகளையும் அழிக்கக்கூடிய ஆற்றல் படைத்தது.

ஸ்ருஷ்டி அல்லது படைப்பைப் பற்றி விளக்குவதற்கு, சாஸ்த்ரங்கள் பல்வேறு வழிமுறைகளைக் கையாளுகின்றன. அதில் ஒன்று அத்யாரோப அபவாதம் என்ற முக்கியமான முறை.

## அத்யாரோப அபவாத முறை

கையைக் காட்டுகிறேன்.

என்ன தெரிகிறது என்று கேட்டால், கை தெரிகிறது என்று கூறுகிறீர்கள்.

கை மட்டும்தான் தெரிகிறதா? என்று கேட்கிறேன்.

கையும் தெரிகிறது, வெளிச்சமும் தெரிகிறது என்று பதில் கூறுகிறீர்கள்.

கையை எடுத்த பிறகு, வெளிச்சம் தெரிவதில்லை. வெளிச்சத்தைப் பார்க்கவில்லை, வெளிச்சம் இருப்பதைப் புரிந்துகொள்கிறோம்.

வெளிச்சம் இருக்கிறது, ஆனால் வெளிச்சத்தை ப்ரதிபலிக்கும் ஊடகங்கள் இல்லை. சுவர் உட்பட அனைத்தும் ஊடகங்களே.

பொருளைத்தான் நாம் பார்க்கிறோம், ஒளியைப் பார்ப்பதில்லை. பொருளில் படுகின்ற ஒளியைத்தான் நாம் கண்ணால் பார்க்கிறோம். பொருளில் படாத ஒளியை நம்மால் கண்ணால் பார்க்க முடியாது.

ஆகாசத்தில் படுகின்ற ப்ரகாசத்தைத்தான் நாம் பார்க்க முடியும். ஆகாசம், ப்ரகாசம் ஆகிய இரண்டுமே இந்த்ரிய ப்ரத்யக்ஷம் அல்ல (புலன்களுக்குப் புலப்படுவதல்ல), ஸாக்ஷி ப்ரத்யக்ஷம் (உணர்ந்துகொள்ளப்படுபவை).

கையைக் காண்பித்து வெளிச்சமானது உணர்த்தப்படுகிறது.

கையை நீக்கி, வெளிச்சமானது (புலன்களின் துணையின்றி) புரிய வைக்கப்படுகிறது.

சாஸ்த்ரமானது, ப்ரபஞ்சத்தைக் காட்டி, ப்ரபஞ்சத்தில் ப்ரஹ்மத்தை உணர்த்துகிறது.

ப்ரபஞ்சத்தை நீக்கி, ப்ரஹ்மத்தைப் புரிந்துகொள்ளுமாறு செய்கிறது.

கையைக் காட்டுவது அத்யாரோபம்.

வெளிச்சத்தை உணர்த்துவது உபதேசம்.

கையை எடுத்துவிடுவது அபவாதம்.

வெளிச்சம் இருக்கிறது என்று புரிந்துகொள்வது ஞானம்.

ப்ரபஞ்சத்தைக் காட்டுவது அத்யாரோபம்.

பரம்பொருளை உணர்த்துவது உபதேசம்.

ப்ரபஞ்சத்தை நீக்குவது அபவாதம்.

பரம்பொருள் மட்டுமே இருக்கிறது என்று புரிந்துகொள்வது ஞானம்.

ப்ரபஞ்சத்தை நாம் பார்க்கிறோம். பார்ப்பவன் இல்லையென்றால், பார்க்கப்படுகின்ற ப்ரபஞ்சம் பார்க்கப்பட முடியாது.

பார்ப்பவனே உண்மை. பார்க்கப்படுவது உண்மையல்ல. பார்ப்பவனைச் சார்ந்தே பார்க்கப்படுபவை பார்க்கப்படுகின்றன.

பார்க்கப்படுபவைகளை நீக்கிவிட்டு, பார்ப்பவன் என்ற தன்மையையும் நீக்கிவிட்டால், இருப்பது பரம்பொருள் மட்டுமே.

படைப்பைக் காட்டி, படைப்பில் உள்ள உலகத்தைக் காட்டி, உலகத்திற்குக் காரணமான ஆண்டவனை உணர்த்தி, பிறகு உலகத்தை நீக்கி, ஆண்டவனுக்கு அந்நியமாக ஒன்றுமில்லை என்று உணர்த்துவதே சாஸ்த்ரத்தின் நோக்கம்.

அனைத்தும் பரம்பொருளே என்பதை உணர்ந்துகொள்வதால், வேற்றுமை உணர்ச்சிகளுக்கு மதிப்பே இல்லாமல் போய்விடும். பெயருக்குத்தான் வேற்றுமையைக் கையாள்வோம். வேற்றுமையில் ஆழ்ந்துசென்றுவிட மாட்டோம்.

வேற்றுமையில் ஆழ்ந்து செல்வதுதான் அனைத்துவித அநர்த்தங்களுக்கும் காரணம். தன்னை உயர்ந்தவன் என்று கருதிக்கொள்பவனும், தன்னைத் தாழ்ந்தவன் என்று கருதிக்கொள்பவனும் வேற்றுமையில் ஆழ்ந்து போகிறான்.

தன்னைப் படித்தவன் என்று கருதுவதும், தன்னைக் கல்லாதவன் என்று கருதுவதும் வேற்றுமையின் வெளிப்பாடுகளே.

வேற்றுமையில் ஆழ்ந்து போவதால்தான் பதவியில் இருக்கிறேன் என்று கருதுவதும், பதவிக்காக ஏங்குவதும் நிகழ்கின்றன.

மாயையோடு கூடிய பரம்பொருளிடமிருந்து எப்படி படைப்பு வந்தது என்பது பற்றி சாஸ்த்ரம் கூறத் தொடங்குகிறது.

**ततः आकाश संभूतः। ததः ஆகாஶ: ஸம்பூத:।**

அதனிடமிருந்து ஆகாசம் தோன்றியது. (ஆகாசம் = இடைவெளி)

**आकाशात् वायुः। ஆகாஶாத் வாயு:।**

ஆகாசத்திலிருந்து வாயு தோன்றியது. (வாயு = காற்று).

**वायोस्तेजः। வாயோஸ்தேஜ:।**

வாயுவிலிருந்து நெருப்பு தோன்றியது.

**तेजस आपः। தேஜஸ ஆப:।**

நெருப்பிலிருந்து நீர் தோன்றியது.

**अद्भ्यः पृथिवी। அத்ப்ய: ப்ருதிவீ।**

நீரிலிருந்து நிலம் தோன்றியது.

## தெளிவுரை

முதலில் படைப்பின் ஸூக்ஷ்ம அம்சங்கள் கூறப்படுகின்றன. நுண்படைப்பு விளக்கப்படுகிறது.

முதலில் ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகிய ஸூக்ஷ்மமான பஞ்ச பூதங்கள் தோன்றின. இவை தன்மாத்திரைகள் எனப்படும்.

பெரிய மரம் ஒன்றைத் தனக்குள் மறைத்து வைத்திருக்கும் விதையைப் போன்றவை இந்த நுண்மையான பூதங்கள்.

பஞ்சபூதங்களுக்கு குணங்கள் இருக்கின்றன. ஆகாசத்திற்கு ஒரு குணமும், காற்றுக்கு இரண்டு குணங்களும், நெருப்புக்கு மூன்று குணங்களும், நீருக்கு நான்கு குணங்களும், நிலத்திற்கு ஐந்து குணங்களும் உள்ளன.

ஆகாசம் தொடங்கி ஒவ்வொரு பூதமும் அதற்கடுத்த பூதங்களுக்குக் காரணமாக இருக்கின்றன. காரணத்தின் குணங்கள் காரியத்தில் இருக்கின்றன.

ஆகாசம் என்ற பூதமே முதலில் தோன்றியது. ஆகாசம் என்றால் வானம் என்று பொருளல்ல, வெளி (space) என்று பொருள்.

ஆகாசத்திற்கு ஒலி என்ற ஒரு குணம் மட்டும் இருக்கிறது. ஆகாசத்தின் குணமான ஒலியிலிருந்துதான் வேத மந்த்ரங்கள் தோன்றின.

ஆகாசத்தின் குணமான ஒலி, காற்றிலும் இருக்கிறது. அதனோடு கூட, காற்றில் ஸ்பர்ஶம் என்ற தொடு உணர்ச்சியும் ஒரு குணமாக இருக்கிறது.

அடுத்து, அக்னி தத்துவமாகிய நெருப்பில், ஶப்தம் (ஓசை), ஸ்பர்ஶம் (ஊறு) ஆகிவற்றோடு ரூபம் (ஒளி) என்ற குணமும் சேர்ந்திருக்கிறது.

நீர் என்ற பூதத்தில் ஶப்த, ஸ்பர்ஶ, ரூபம் ஆகிய மூன்றோடு, ரஸம் (சுவை) என்ற குணமும் இணைந்திருக்கிறது.

நிலமாகிய பூதத்தில் ஶப்த, ஸ்பர்ஶ, ரூப, ரஸம் ஆகியவற்றுடன் கந்தம் (நாற்றம்) என்ற குணமும் சேர்ந்திருக்கிறது.

இவை மிக நுட்பமாக உணரப்படுபவை. குணங்கள் நம்மை பந்தப்படுத்துகின்றன.

ஐம்பூதங்களின் தன்மாத்திரைகளை நன்கு உணர்கின்றவனுக்கு உலகம் வசப்படும் என்பது ஆன்றோர் வாக்கு.

**एतेषां पञ्चतत्त्वानां मध्ये आकाशस्य**
**सात्त्विकांशात् श्रोत्रेन्द्रियं सम्भूतम्।**

**ஏதேஷாம் பஞ்சதத்த்வாநாம் மத்யே ஆகாஶஸ்ய**
**ஸாத்விகாம்ஶாத் ஶ்ரோத்ரேந்த்ரியம் ஸம்பூதம்।**

இவ்வைந்து தத்துவங்களுள் ஆகாசத்தின் ஸாத்விக அம்சத்திலிருந்து கேட்கும் கருவியாகிய செவி தோன்றியது.

**वायोः सात्त्विकांशात् त्वगिन्द्रियं सम्भूतम्।**

**வாயோ: ஸாத்விகாம்ஶாத் த்வகிந்த்ரியம் ஸம்பூதம்।**

வாயுவினுடைய ஸாத்விக அம்சத்திலிருந்து தொட்டு உணரும் கருவியாகிய தோல் தோன்றியது.

**अग्नेः सात्त्विकांशात् चक्षुरिन्द्रियं सम्भूतम्।**

**அக்நே: ஸாத்த்விகாம்ஶாத் சக்ஷுரிந்த்ரியம் ஸம்பூதம்।**

நெருப்பினுடைய ஸாத்விக அம்சத்திலிருந்து பார்க்கும் கருவியாகிய கண் தோன்றியது.

**जलस्य सात्त्विकांशात् रसनेन्द्रियं सम्भूतम्।**

**ஜலஸ்ய ஸாத்விகாம்ஶாத் ரஸநேந்த்ரியம் ஸம்பூதம்।**

நீரினுடைய ஸாத்விக அம்சத்திலிருந்து சுவைக்கும் கருவியாகிய நாக்கு தோன்றியது.

**पृथिव्याः सात्त्विकांशात् घ्राणेन्द्रियं सम्भूतम्।**

**ப்ருதிவ்யா: ஸாத்விகாம்ஶாத் க்ராணேந்த்ரியம் ஸம்பூதம்।**

பூமியினுடைய ஸாத்விக அம்சத்திலிருந்து முகரும் கருவியாகிய மூக்கு தோன்றியது.

## தெளிவுரை

முதலில் ஸூக்ஷ்ம ஐம்பூதங்கள் எவ்வாறு தோன்றின என்பது கூறப்பட்டது. குணங்களற்ற பரம்பொருள், முக்குணங்களோடு கூடிய மாயையுடன் இணைந்து படைப்புக்குக் காரணமாகிறது.

முதலில் ஆகாசம் தோன்றியது. ஆகாசத்திலிருந்து காற்று, காற்றிலிருந்து நெருப்பு, நெருப்பிலிருந்து நீர், நீரிலிருந்து நிலம் ஆகியவை தோன்றின. இவையனைத்தும் ஸூக்ஷ்ம பூதங்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அடுத்து, இந்த ஐந்து பூதங்களுக்கும் மாயையின் குணங்களான ஸத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம் ஆகிய மூன்றும் இருக்கின்றன. ஸூக்ஷ்ம ஐம்பூதங்களின் ஸாத்விக அம்சத்திலிருந்து அறிவுக்கருவிகள் தோன்றின.

ஐம்பூதங்களின் ஸாத்விக அம்சங்களிலிருந்து ஞாநேந்த்ரியங்கள் எனப்படும் அறிவுக்கருவிகள் தோன்றின. (இந்த்ரியம் என்பது கோளகம் அல்ல, புற உறுப்பல்ல, அறியும் ஆற்றல்).

ஆகாசத்திலிருந்து கேட்கும் ஆற்றல், காற்றிலிருந்து தொட்டுணரும் ஆற்றல், நெருப்பிலிருந்து பார்க்கும் ஆற்றல், நீரிலிருந்து சுவைக்கும் ஆற்றல், நிலத்திலிருந்து முகரும் ஆற்றல் ஆகியவை தோன்றின.

இவ்வாறு ஸூக்ஷ்ம பூதங்கள் எனப்படும் தன்மாத்திரைகளிலிருந்து ஸூக்ஷ்ம இந்த்ரியங்கள் தோன்றின.

இவ்வாறு பஞ்சபூதங்களின் தனித்தனியான (வ்யஷ்டி) ஸாத்விக அம்சத்திலிருந்து ஐந்து அறிவுக்கருவிகள் தோன்றின.

**एतेषां पञ्चतत्त्वानां समष्टिसात्विकांशात्**
**मनोबुद्ध्यहंकार - चित्तान्तःकरणानि संभूतानि।**

**ஏதேஷாம் பஞ்சதத்த்வாநாம் ஸமஷ்டிஸாத்விகாம்ஶாத்**
**மநோபுத்த்யஹங்கார-சித்தாந்த:கரணாநி ஸம்பூதாநி।**

இந்த ஐந்து தத்துவங்களின் ஸமஷ்டி ஸாத்விக அம்சத்திலிருந்து மனம், புத்தி, அஹங்காரம், சித்தம் எனப்படும் அந்தக்கரணங்கள் (உட்கருவிகள்) தோன்றின.

## தெளிவுரை

பஞ்சபூதங்களின் ஒட்டுமொத்த (ஸமஷ்டி) ஸாத்விக அம்சத்திலிருந்து மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகிய நான்கும் தோன்றின.

பஞ்சபூதங்களும் ஐந்து தத்துவங்கள் என்று கூறும்போது, இந்தத் தத்துவங்களைப் புரிந்துகொள்வது மட்டும் நம்முடைய நோக்கமல்ல. இந்தத் தத்துவங்கள் உண்மையல்ல, பரம்பொருளே உண்மை என்று உணர்ந்துகொள்வதே நம்முடைய நோக்கமாகும்.

அந்தக்கரணத்திற்கு, அதன் செயல்பாட்டிற்குத் தக்கவாறு, மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்தக்கரணம் என்பது உள்ளம் என்றும் சில நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாஸ்த்ரங்களில் ஒவ்வொரு நூலும் ஸ்ருஷ்டியை ஒவ்வொரு விதமாக விளக்குகின்றன. படைப்பைப் பற்றி உள்ள முரண்பாடுகள் ப்ரஹ்ம ஸூத்ரத்தில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

நமக்குப் படைப்பில் தாத்பர்யம் இல்லை. இது எப்படித் தோன்றியது என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டியதில்லை. மெய்ப்பொருள் எது என்பதில்தான் நம்முடைய கவனமெல்லாம் இருக்கிறது. மெய்ப்பொருளைப் பற்றி அனைத்து உபநிஷத்துக்களும் ஒரே கருத்தைக் கூறுகின்றன. மெய்ப்பொருளைப் பற்றிக் கூறும் விஷயத்தில் சாஸ்த்ரங்களிடையே முரண்பாடு இல்லை என்பதை நினைவில் கொள்ள முடியாது.

சாஸ்த்ரத்திற்கு மெய்ப்பொருளை விளக்குவதில்தான் தாத்பர்யம். படைப்பைப் பற்றிய விஷயத்தில் தாத்பர்யம் இல்லை.

**संकल्पविकल्पात्मकं मनः।**

**ஸங்கல்ப விகல்பாத்மகம் மந:।**
ஸங்கல்ப-விகல்ப வடிவுடையது மனம்.

**निश्चयात्मिका बुद्धिः। நிஶ்சயாத்மிகா புத்தி:।**

உறுதிப்படுத்தும் தன்மையுடையது புத்தி.

**अहंकर्ता अहंकारः। அஹம் கர்த்தா அஹங்கார:।**

நான் செயல்புரிபவன் எனப்படுவது அஹங்காரம்.

**चिन्तनकर्तृ चित्तम्। சிந்தநகர்த்ரு சித்தம்।**

சிந்திக்கும் ஆற்றலை உடையது சித்தம்.

## தெளிவுரை

எண்ணங்களின் தன்மையை வைத்து மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்று பிரித்துள்ளனர்.

இதுவா? அதுவா? என்று சிந்திப்பது மனம். உறுதி செய்வது புத்தி.

ஒரு குறிப்பிட்ட மந்த்ரத்தை இப்போது ஜபிக்கலாமா, வேண்டாமா என்று எண்ணுவது மனம். ஆம், இப்பொழுது ஜபிக்கப் போகிறேன் என்று தீர்மானம் செய்வது புத்தி.

உறுதியில்லாத, அலைபாய்கின்ற எண்ணங்களே மனம் எனப்படும்.

பதஞ்ஜலி மஹரிஷி, யோக ஸூத்ரத்தில் எண்ணங்களைப் பிரித்து நன்றாக ஆராய்ச்சி செய்துள்ளார்.

மனம் விலங்கிற்கு ஒப்பானது என்று கூறுவதுண்டு. 'விலங்கு மனத்தால் விமலா உனக்குக் கலந்து அன்பாகி' என்று பாடுகிறார் மாணிக்கவாசகர்.

மனிதர்களின் பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் மனமே காரணமாகிறது.

புலனின்பப் பொருட்களைப் பற்றிக்கொண்டிருக்கின்ற மனம் பந்தத்திற்குக் காரணம், புலனின்ப நாட்டமற்ற மனம் மோக்ஷத்திற்குக் காரணம்.

அறியாமையால் பற்றை உடைய மனம், பந்தப்பட்ட மனம். அறிவால் பற்றை நீக்கிய மனம் முக்தியடைந்த மனம்.

தூய மனம், தூய்மையற்ற மனம் என மனம் இருவகைப்படும். ஆசைகளுடன் கூடிய மனம் தூய்மையற்ற மனம். ஆசைகளற்ற மனம் தூய்மையான மனம்.

உலகப்பற்றில் ஆழ்ந்துள்ள மனம், 'ஒன்றுவிட்டு ஒன்று பற்றிப் பாசக்கடற்குள் வீழக்கூடிய' மனம் என்பார் தாயுமானவர்.

ஒரு காரியத்தைச் செய்யலாமா, வேண்டாமா என்று அலைபாய்கின்ற எண்ணத்திற்கு மனம் என்று பெயர். செய்யலாம் அல்லது செய்ய வேண்டாம் என்று உறுதிசெய்கின்ற எண்ணத்திற்கு புத்தி என்று பெயர்.

சித்தம் என்பது நினைவாற்றல். பல வருடங்களுக்கு முன்பு பார்த்த ஒரு மனிதரை சில கணங்களில் நினைவுக்குக் கொண்டு வந்து அடையாளப்படுத்த நம்மால் முடிகிறது. தகவல்கள் அனைத்தையும் திரட்டி, ஒழுங்குபடுத்தி வைத்துள்ள கருவிக்குச் சித்தம் என்று பெயர்.

அஹங்காரம் என்பது கர்வம் அல்லது செருக்கு அல்ல. அஹங்காரம் என்றால் தனித்தன்மை (not ego, but individuality). தனித்தன்மையானது ஆணவம் எனப்படும். அதுவே அஹங்காரம்.

**मनसो देवता चन्द्रमा:। மநஸோ தேவதா சந்த்ரமா:।**

மனதிற்குத் தேவதை சந்த்ரன்.

**बुद्धेर्ब्रह्मा। புத்தேர் ப்ரஹ்மா।**

புத்திக்கு தேவதை ப்ரஹ்மா (நான்முகக் கடவுள்).

**अहंकारस्य रुद्र:। அஹங்காரஸ்ய ருத்ர:।**

அஹங்காரத்திற்குத் தேவதை ருத்ரன்.

**चित्तस्य वासुदेव:। சித்தஸ்ய வாஸுதேவ:।**

சித்தத்திற்கு தேவதை வாஸுதேவன்.

## தெளிவுரை

மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகிய நான்கிற்கும் உரிய தேவதைகள் இருக்கின்றன.

நம் அனைவருடைய மனங்களின் ஸமஷ்டி (ஒட்டுமொத்த) ஆற்றலே தேவதையாகக் கூறப்படுகிறது. யார் இதனைப் புரிந்துகொண்டு போற்றி வழிபடுகிறானோ, அவனுக்கு அந்தத் தெய்வத்தின் அருள் கிடைக்கிறது.

அரசாங்கத்தில் பல்வேறு துறைகள் இருக்கின்றன. ஒவ்வொரு குறிப்பிட்ட துறைக்கும் ஓர் அமைச்சர் இருக்கிறார். அதுபோல, இந்தத் தெய்வங்கள் தனித்தனியே இயங்கி, நம்முடைய கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாதவையாக இருந்துகொண்டு, நமக்கு அருள்புரிகின்றன.

மனதிற்கு தேவதை சந்த்ரன். ஸமஷ்டி புருஷனின் மனதிலிருந்துதான் சந்த்ரன் தோன்றியது என்று வேதம் கூறுகிறது.

'என்னுடைய மனதில் சந்த்ரனின் பூரணமான அருள் நிலைகொள்ளட்டும். மனம் ஹ்ருதயத்தில் இருக்கட்டும். ஹ்ருதயம் என்னிடத்தில் இருக்கட்டும். நான் அம்ருதத்தில் இருப்பேனாக. அம்ருதம் பரம்பொருளில் இருக்கட்டும்' என்று ப்ரார்த்தனை செய்கிறது வேதம்.

தேவதைகள் ஸூக்ஷ்மமானவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாதவர்கள்.

யோகிகளுக்கும், ஆன்மிக வாழ்க்கைநெறியில் ஆழ்ந்து செல்பவர்களுக்குமே அவர்கள் விளங்குவார்கள்.

மனதிற்கு சந்த்ரன், புத்திக்கு ப்ரஹ்மதேவர், அஹங்காரத்திற்கு ருத்ரன், சித்தத்திற்கு வாஸுதேவன் ஆகிய தெய்வங்கள் தேவதைகளாக இருக்கிறார்கள். இவை ரூபங்களைக் கடந்த அரூப, ஸூக்ஷ்ம தத்துவம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

**एतेषां पञ्चतत्त्वानां मध्ये आकाशस्य**
**राजसांशात्वागिन्द्रियं संभूतम्।**

**ஏதேஷாம் பஞ்சதத்த்வாநாம் மத்யே ஆகாஶஸ்ய ராஜஸாம்ஶாத் வாகிந்த்ரியம் ஸம்பூதம்।**

இந்த ஐந்து தத்துவங்களுள் ஆகாசத்தின் ராஜஸ அம்சத்திலிருந்து பேசும் கருவியான வாய் தோன்றியது.

**वायोः राजसांशात् पाणीन्द्रियं सम्भूतम्।**

**வாயோ: ராஜஸாம்ஶாத் பாணீந்த்ரியம் ஸம்பூதம்।**

வாயுவின் ராஜஸ அம்சத்திலிருந்து கைகள் தோன்றின.

**वह्नेः राजसांशात् पादेन्द्रियं सम्भूतम्।**

**வஹ்நே: ராஜஸாம்ஶாத் பாதேந்த்ரியம் ஸம்பூதம்।**

நெருப்பின் ராஜஸ அம்சத்திலிருந்து கால்கள் தோன்றின.

**जलस्य राजसांशात् गुदेन्द्रियं सम्भूतम्।**

**ஜலஸ்ய ராஜஸாம்ஶாத் குதேந்த்ரியம் ஸம்பூதம்।**

நீரினுடைய ராஜஸ அம்சத்திலிருந்து எருவாய் தோன்றியது.

**पृथिव्या राजसांशात् उपस्थेन्द्रियं सम्भूतम्।**

**ப்ருதிவ்யா: ராஜஸாம்ஶாத் உபஸ்தேந்த்ரியம் ஸம்பூதம்।**

பூமியினுடைய ராஜஸ அம்சத்திலிருந்து கருவாய் தோன்றியது.

## தெளிவுரை

முன்பு ஸூக்ஷ்ம ஐம்பூதங்களின் ஸாத்விக அம்சங்களிலிருந்து ஐந்து அறிவுக்கருவிகள் தோன்றின என்று கூறப்பட்டது. அடுத்து, ஸூக்ஷ்ம ஐம்பூதங்களின் ராஜஸ அம்சங்களிலிருந்து ஐந்து செயற்கருவிகளும், ஐந்து ப்ராணன்களும் தோன்றின என்பது கூறப்படுகிறது.

அறிவுக்கருவிகள் நம் கட்டுப்பாட்டில் இயங்குவதில்லை. கண் முன்னால் தோன்றும் காட்சி நம்முடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. எனவே அவை வஸ்து தந்த்ரம் எனப்படும். அறிவுக் கருவிகள் பொருளைச் சார்ந்து இயங்குகின்றன.

ஆனால் செயற்கருவிகள் புருஷ தந்த்ரம், நம்முடைய கட்டுப்பாட்டில் இருப்பவை. நாம் ஒரு பொருளை எடுப்பதா வேண்டாமா என்று முடிவு செய்யலாம்.

அறிவுக்கருவிகளால் பெறப்படும் அறிவு பொருளைச் சார்ந்திருக்கிறது. செயற்கருவிகளால் ஆற்றப்படும் செயலானது, தனிப்பட்ட மனிதனைச் சார்ந்திருக்கின்றன.

ஆகாசம் என்ற பூதத்தின் ஸாத்விக அம்சத்திலிருந்து கேட்கும் ஆற்றல் தோன்றியது. ஆகாசத்தின் ராஜஸ அம்சத்திலிருந்து ஒலி வெளிப்படுகிறது, அதாவது வாக் எனப்படும் பேசக்கூடிய ஆற்றலாகிய செயற்கருவி தோன்றுகிறது.

வாயு என்ற பூதத்தின் ஸாத்விக அம்சத்திலிருந்து தொட்டுணரும் ஆற்றலாகிய இந்த்ரியம் (அறிவுக்கருவி) தோன்றியது. வாயுவின் ராஜஸ அம்சத்திலிருந்து கைகளால் பொருட்களை எடுக்கின்ற ஆற்றல் தோன்றுகிறது.

நெருப்பின் ஸாத்விக அம்சத்திலிருந்து கண் எனப்படும் அறிவுக்கருவியும், ராஜஸ அம்சத்திலிருந்து நடக்கும் ஆற்றலாகிய கால் எனப்படும் செயற்கருவியும் தோன்றுகின்றன. நீரின் ஸாத்விக அம்சத்திலிருந்து நாக்கு என்ற அறிவுக்கருவி உருவானது. நீரின் ராஜஸ அம்சத்திலிருந்து, உடலிலிருந்து கழிவுகளை வெளியேற்றும் ஆற்றலாகிய செயற்கருவி உருவானது.

நிலத்தின் ஸாத்விக அம்சத்திலிருந்து முகரும் ஆற்றலாகிய அறிவுக்கருவி தோன்றியது. நிலத்தின் ராஜஸ அம்சத்திலிருந்து குழந்தையை உற்பத்தி செய்யும் ஆற்றலாகிய செயற்கருவி உண்டானது.

வாக் (பேச்சாற்றல்), பாணி(கைகளால் எடுக்கும் ஆற்றல்), பாதம் (கால்களால் நடக்கும் ஆற்றல்), பாயு (கழிவுகளை வெளியேற்றும் ஆற்றல்), உபஸ்த்தம் (குழந்தையை உற்பத்தி செய்யும் ஆற்றல்) - இந்த ஐந்து செயற்கருவிகளும் ஸூக்ஷ்ம ஐம்பூதங்களின் தனித்தனியான ராஜஸ அம்சங்களிலிருந்து தோன்றின.

**एतेषां समष्टिराजसांशात् पञ्चप्राणाः सम्भूताः।**

**ஏதேஷாம் ஸமஷ்டிராஜஸாம்ஶாத்**
**பஞ்சப்ராணா: ஸம்பூதா:।**

ஸூக்ஷ்ம ஐம்பூதங்களின் ஒட்டுமொத்த (ஸமஷ்டி) ராஜஸ அம்சத்திலிருந்து ஐந்து ப்ராணன்கள் தோன்றின.

## தெளிவுரை

ப்ராணன், அபானன், வ்யானன், உதானன், ஸமானன் ஆகிய ஐந்து ப்ராணன்களின் தன்மைகளையும் செயல்பாடுகளையும் முன்பே பார்த்தோம்.

ப்ராணனை நெறிப்படுத்துவது என்பது மிக முக்கியமான ஸாதனையாகும். ப்ராணனை ஒழுங்குபடுத்துவதன் வாயிலாக மனம் அடங்கும். அனைத்து சடங்குகளுக்கு முன்னரும் ப்ராணாயாமம் விதிக்கப்பட்டிருப்பது இதன் பொருட்டே ஆகும்.

மனம் என்ற பறவையைப் பிடிக்க உதவும் வலை என்று ப்ராணாயாமத்தைப் பற்றிக் கூறுகிறார் ஸ்ரீரமண மஹரிஷி.

ப்ராணனை ஒழுங்குபடுத்துவது என்பது வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் இருப்பவர்களுக்கும் முக்கியமானதே ஆகும்.

## முக்குணங்களைப் பற்றிய குறிப்பு

பஞ்சபூதங்களில் ஸத்வ குணத்திலிருந்து அறிவுக்கருவிகள் தோன்றின, ரஜோ குணத்திலிருந்து செயற்கருவிகள் தோன்றின என்று கூறப்பட்டது.

ஸத்வ குணம் என்பது தூய ஸத்வ குணம் அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஸ்ருஷ்டி என்று வந்துவிட்டாலே, அதில் குண வைஷம்யம், குணங்களில் ஏற்றத்தாழ்வு இருக்கும்.

ஸ்ருஷ்டிக்கு முன்புதான் அனைத்து குணங்களும் ஸமநிலையில் இருக்கும். ஸ்ருஷ்டியின்போது, அதில் சஞ்சலம் ஏற்படுகிறது. அந்த சஞ்சலத்திலிருந்து குணத்தில் ஏற்றத்தாழ்வுகள் தோன்றியிருக்கின்றன.

கபில மஹரிஷியின் ஸாங்க்ய மதத்தில் குணங்களைப் பற்றி சிறப்பாக ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. ஸாங்க்ய மதத்தை ஒட்டி எழுந்ததுதான் பதஞ்ஜலி மஹரிஷியின் யோக ஸூத்ரம். (கபிலரின் ஸாங்க்ய மதம் ஈச்வரனை ஏற்றுக்கொள்வதில்லை. பதஞ்ஜலி ஈச்வரனை ஏற்றுக்கொள்கிறார்)

ஶ்ரீமத்பகவத்கீதையின் 14 வது அத்தியாயமான குணத்ரய விபாக யோகத்தில், குணங்களின் தன்மைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. குணங்களின் செயல்கள், குணங்களால் ஏற்படும் விளைவுகள், குணங்களின் பயன்கள், குணங்களிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள் ஆகிய கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன.

மூன்று குணங்களும் எப்பொழுதும் கலந்தேதான் இருக்கின்றன. சில சமயம் ஸத்த்வ குணம் மேலோங்கியிருக்கும். சில நேரங்களில் ரஜோ குணம் மேலோங்கும். வேறு சில சமயங்களில் தமோ குணம் மேலோங்கியிருக்கும்.

எனவே, ஸ்ருஷ்டியில் ஒரு குறிப்பிட்ட குணத்தின் அம்சத்திலிருந்து தோன்றியது என்று கூறும்போது, அது தூய

குணத்திலிருந்து தோன்றியதல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இதுவரை நாம் பார்த்தது நுண்ணுலக ஸ்ருஷ்டி. இனிதான் நாம் பார்க்கின்ற ஸ்தூல ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டியை நூலாசிரியர் கூறப்போகிறார்.

ஆகாசம் முதலான பஞ்ச பூதங்களின் தாமஸ அம்சத்திலிருந்துதான் பருவுலகம் தோன்றியுள்ளது. நாம் காண்கின்ற உலகம், உடல், உடலுக்குள் உள்ள கருவிகள் அனைத்தும் பஞ்சபூதத்தின் தமோகுணத்தின் கலவைகள்.

அவைகளின் தோற்றத்தைக் காண்போம்.

**एतेषां पञ्चतत्त्वानां तामसांशात् पञ्चीकृतपञ्चतत्वानि भवन्ति।**

**ஏதேஷாம் பஞ்சதத்த்வாநாம் தாமஸாம்ஶாத்**
**பஞ்சீக்ருதபஞ்சதத்வாநி பவந்தி।**

இந்த ஐந்து தத்துவங்களின் தாமஸ அம்சத்திலிருந்து பஞ்சீகரணம் செய்யப்பட்ட ஐந்து தத்துவங்கள் தோன்றுகின்றன.

## தெளிவுரை

இதற்கு முன்னர் நாம் பார்த்த பஞ்சபூதங்கள், பஞ்சீகரணம் செய்யப்படாதவை, நுண்மையானவை.

ஸூக்ஷ்ம சரீரமானது, பஞ்சீகரணம் செய்யப்படாத பஞ்சபூதங்களிலிருந்து தோன்றியது. (அபஞ்சீக்ருத பஞ்சமஹாபூதை: க்ருதம்।) ஸ்தூல சரீரமானது, பஞ்சீகரணம் செய்யப்பட்ட பஞ்சபூதங்களிலிருந்து தோன்றியது (பஞ்சீக்ருத பஞ்சமஹாபூதை: க்ருதம்।)

**पञ्चीकरणं कथं इति चेत्। एतेषां पञ्चमहाभूतानां तामसांशस्वरूपं एकमेकं भूतं द्विधा विभज्य एकमेकमर्धं**

**पृथक् तूष्णीं व्यवस्थाप्य अपरमपरमर्धं चतुर्धा विभज्य स्वार्धमन्येषु अर्धेषु स्वभागचतुष्टयसंयोजनंकार्यम्। तदा पञ्चीकरणं भवति।**

**பஞ்சீகரணம் கதம் இதி சேத்। ஏதேஷாம் பஞ்சமஹாபூதாநாம் தாமஸாம்ஶஸ்வரூபம் ஏகமேகம் பூதம் த்விதா விபஜ்ய ஏகமேகமர்தம் ப்ருதக் தூஷ்ணீம் வ்யவஸ்தாப்ய அபரமபரமர்தம் சதுர்தா விபஜ்ய ஸ்வார்த மந்யேஷு அர்தேஷு ஸ்வபாக சதுஷ்டய ஸம்யோஜநம் கார்யம்। ததா பஞ்சீகரணம் பவதி।**

**பஞ்சீகரணம் கதம் இதி சேத்** - பஞ்சீகரணம் எப்படியென்றால், **ஏதேஷாம் பஞ்சமஹாபூதாநாம்** - இந்த ஐந்து மஹா பூதங்களின், **தாமஸாம்ஶஸ்வரூபம்** - தாமஸ அம்ச வடிவத்தில், **ஏகமேகம் பூதம்** - ஒவ்வொரு பூதத்தையும், **த்விதா விபஜ்ய** - இரண்டாகப் பகிர்ந்து, **ஏகமேகமர்தம்** - ஒரு பாதியை, **ப்ருதக் தூஷ்ணீம் வ்யவஸ்தாப்ய** - தனியாக வைத்து, **அபரமபரமர்தம்** - மீதியுள்ள பாதியை, **சதுர்தா விபஜ்ய** - நான்காகப் பிரித்து, **ஸ்வார்த மந்யேஷு அர்தேஷு** - பிற பூதங்களின் பாதியுடன், **ஸ்வபாக சதுஷ்டய** - தன்னுடைய நான்கில் ஒரு பங்கை, **ஸம்யோஜநம் கார்யம்** - சேர்க்க வேண்டும். **ததா பஞ்சீகரணம் பவதி** - இவ்வாறு பஞ்சீகரணம் ஏற்படுகிறது.

*பஞ்சீகரணம் எப்படியென்றால் இந்த ஐந்து மஹா பூதங்களின், தாமஸ அம்ச வடிவத்தில், ஒவ்வொரு பூதத்தையும் இரண்டாகப் பகிர்ந்து, ஒரு பாதியை தனியாக வைத்து, மீதியுள்ள பாதியை நான்காகப் பிரித்து, பிற பூதங்களின் பாதியுடன், தன்னுடைய நான்கில் ஒரு பங்கைச் சேர்க்க வேண்டும்.*

*இவ்வாறு பஞ்சீகரணம் ஏற்படுகிறது.*

## தெளிவுரை

யாத்திரை செல்லும்போது, ஐந்து பேர் ஐந்துவிதமான உணவு வகைகளை தயார் செய்து செல்கிறார்கள். அதனைப் பிரித்து உண்ணும்போது, ஒரு உணவின் சரி பாதியும், மீதி நான்கு உணவுகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒன்றில் எட்டு பங்கும் (அரைக்கால் பங்கும்) எடுத்தால் உணவை சரிஸமமாகப் பிரிக்க முடியும்.

பஞ்சபூதங்களின் தாமஸ அம்சத்திலிருந்து தோன்றிய பரு ஆகாசத்தில், பாதிதான்ஆகாசம் இருக்கிறது. மீதி நான்கு பூதங்களும் அரைக்கால் பகுதி இருக்கின்றன. பஞ்ச பூதங்களின் கலவையே ப்ரபஞ்சமாக விரிந்துள்ளது.

பஞ்ச பூதங்கள் விசேஷமாக விளங்குவதுதான் ப்ரபஞ்சம் (ப்ரகர்ஷேண பஞ்சபூதாநி உபலப்யந்தே இதி ப்ரபஞ்ச:।)

பஞ்ச பூதங்களால் ஆனது ப்ரபஞ்சம். பஞ்ச ஞானேந்த்ரியங்கள் எனப்படும் அறிவுக்கருவிகளுக்குப் புலப்படுவது ப்ரபஞ்சம்.

**एतेभ्यः पचीकृतपञ्चमहाभूतेभ्यः स्थूलशरीरं भवति।**

**ஏதேப்ய: பஞ்சீக்ருதபஞ்சமஹாபூதேப்ய:**
**ஸ்தூலஶரீரம் பவதி।**

இவ்வாறு பஞ்சீகரணம் செய்யப்பட்ட பஞ்ச மஹாபூதங்களிலிருந்து ஸ்தூல சரீரம் உண்டாகிறது.

## தெளிவுரை

நம்முடைய நுண்ணுடல் ஸூக்ஷ்ம பூதங்களிலிருந்து தோன்றியது. ஆனால் நம்முடைய பருவுடலானது, பஞ்சகீரணம் செய்யப்பட்ட பஞ்ச மஹாபூதங்களிலிருந்து உண்டானது.

**एवं पिण्डब्रह्माण्डयोरैक्यं सम्भूतम्।**

**ஏவம் பிண்டப்ரஹ்மாண்டயோரைக்யம் ஸம்பூதம்।**

இவ்வாறு பிண்டமும், ப்ரஹ்மாண்டமும் ஒன்று என்பது உணர்ந்துகொள்ளப்பட்டது.

## தெளிவுரை

பிண்டத்திலிருப்பதும், ப்ரஹ்மாண்டத்திலிருப்பதும் பஞ்சபூதங்களின் பல்வேறு தோற்றங்கள். பஞ்ச மஹாபூதங்கள் மாயையின் கார்யம். நம்முடைய ஸ்தூல சரீரம், ஸூக்ஷ்ம சரீரம், அனுபவிக்கின்ற ப்ரபஞ்சம் ஆகிய அனைத்துமே பஞ்சபூதங்களாலானவை.

உண்மையில் ஜடமும் ஜடமும்தான் செயலில் ஈடுபடுகின்றன (Matter and matter interacts, it doesn't matter).

பஞ்சபூத ஸ்தலங்களில் பஞ்ச பூதங்களின் வடிவில் பரம்பொருளை வணங்குறோம். உண்மையில், இந்த ப்ரபஞ்சமே பிண்ட ப்ரஹ்மாண்டங்களின் ஐம்பூத விகாரமே ஆகும்.

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:



# ஜீவ ஈச்வர ஐக்கிய விசார:

**உயிரும் இறைவனும் ஒன்று என்பதைப் பற்றி ஆராய்ந்து அறிவைப் பெறுதல்**

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:

## ஜீவ ப்ரஹ்ம ஐக்ய விசாரம்

ஆத்மாவும் ப்ரஹ்மனும் ஒன்று என்பதை உணர்த்தக்கூடிய விசாரம் அடுத்துத் தொடங்குகிறது. வ்யஷ்டி த்ருஷ்டியில் (தனிப்பட்ட கோணத்தில்) ஆத்மாவின் இலக்கணம் கூறப்பட்டது. ஸமஷ்டி த்ருஷ்டியில் (ஒட்டுமொத்த கோணத்தில்) ப்ரஹ்மனின் இலக்கணம் கூறப்பட்டது. ஒட்டுமொத்த கோணத்தில், மாயை என்று சொல்லப்படுவது, தனிப்பட்ட கோணத்தில் அஜ்ஞாநம் (அறியாமை) அல்லது காரண சரீரம் எனப்பட்டது.

| | | |
|---|---|---|
| ஸமஷ்டி காரண சரீரம் | - | மாயை |
| வ்யஷ்டி காரண சரீரம் | - | அறியாமை |

வ்யஷ்டி ஸமஷ்டி ஆகிய இரண்டு கோணங்களில், அனைத்தையும் புரிந்துகொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| ஆத்மா (வ்யஷ்டி) | - | ப்ரஹ்மன் (ஸமஷ்டி) |
| காரண சரீரம் (வ்யஷ்டி) | - | மாயை (ஸமஷ்டி) |
| ஸூக்ஷ்ம சரீரம் (வ்யஷ்டி) | - | ஸூக்ஷ்ம ப்ரபஞ்சம் (ஸமஷ்டி) |
| ஸ்தூல சரீரம் (வ்யஷ்டி) | - | ஸ்தூல ப்ரபஞ்சம் (ஸமஷ்டி) |

இவற்றில் ஆத்மாவையும் ப்ரஹ்மனையும் ஒன்று என்று புரிந்துகொண்டு, மற்றவற்றை விட்டுவிட வேண்டும். அதாவது, மாயையின் காரியங்கள் அனைத்தும் உண்மையல்ல என்று தெளிந்து, புரியாத புதிராகிய இவ்வாழ்க்கைக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை நீக்கிவிட வேண்டும்.

**स्थूलशरीराभिमानि जीवनामकं ब्रह्मप्रतिबिम्बं भवति।**
**स एव जीवः प्रकृत्या स्वस्मात् ईश्वरं भिन्नत्वेन जानाति।**

**ஸ்தூலஶரீராபிமாநி ஜீவநாமகம் ப்ரஹ்ம ப்ரதிபிம்பம் பவதி। ஸ ஏவ ஜீவ: ப்ரக்ருத்யா ஸ்வஸ்மாத் ஈஶ்வரம் பிந்நத்வேந ஜாநாதி।**

**ஜீவநாமகம்** - ஜீவன் எனும் பெயருடைய, **ஸ்தூலஶரீராபிமாநி** - பருவுடலில் பற்று வைத்திருப்பவன், **ப்ரஹ்ம ப்ரதிபிம்பம் பவதி** - பரம்பொருளின் நிழலாவான். **ஸ ஜீவ: ஏவ** - அந்த ஜீவனே, **ப்ரக்ருத்யா** - அறியாமையால், **ஈஶ்வரம்** - இறைவனை, **ஸ்வஸ்மாத் பிந்நத்வேந** - தனக்கு வேறானவராக, **ஜாநாதி** - அறிகிறான்.

*ஜீவன் எனும் பெயருடைய, பருவுடலில் பற்று வைத்திருப்பவன், பரம்பொருளின் நிழலாவான்.*

*அந்த ஜீவனே அறியாமையால் இறைவனைத் தனக்கு வேறானவராக அறிகிறான்.*

## தெளிவுரை

ஸ்தூல சரீரத்தில் பற்று வைத்திருக்கிறோம்.

ஸ்தூல சரீரத்திற்கென்று அமைந்துள்ள ஆச்ரமம், ஜாதி, மொழி அனைத்தும் அபிமானங்களே ஆகும்.

மனிதன் தவிர, பிற விலங்குகளுக்கும் கூட இந்த சரீர அபிமானம் இருக்கிறது.

விலங்குகள் தங்களிடமுள்ள பற்றை ஆராய்ச்சி செய்வதில்லை. மனிதன் ஆராய்ச்சி செய்கிறான்.

நமக்குப் பருவுடலின் மீது பற்று இருக்கிறது. இந்த ஜீவன் உண்மையில் பரம்பொருளுடைய ப்ரதிபிம்பமே ஆகும்.

தூய உணர்வானது மனதில் ப்ரதிபலிக்கும்போது, அதற்கு ஜீவன் என்று பெயர். உடல், மனம், மனதில் ப்ரதிபலிக்கின்ற உணர்வு அனைத்தும் வெறும் தோற்றங்களே ஆகும்.

பிம்பம் என்பது உண்மை. அதன் ப்ரதிபிம்பம் கண்ணாடியில் தெரிகிறது. அனைத்து ஜீவர்களும் தூய உணர்வின் நிழல்களே.

நம் உடலில் ஒவ்வொரு உறுப்பிலும் நமக்கு அபிமானம் உள்ளது. ஒருவன் கால் என்ற உறுப்பில் அபிமானம் வைக்கிறான். கால் போனாலும், அவன் இருக்கிறான். எந்த உறுப்பு அழிந்தாலும் அவன் இருக்கிறான். உறங்கும்போதும் இருக்கிறான், ஆனால், அறியாமையால் அபிமானம் இல்லாமல் இருக்கிறான்.

ஜீவன் அல்லது உயிர் உண்மையில் பரம்பொருளின் நிழலே ஆகும்.

ஸ்ரீராமர், ஆஞ்ஜநேயரைப் பார்த்து, 'என்னை நீ எப்படிப் பார்க்கிறாய்?' என்று இருவருக்குமிடையே உள்ள தொடர்பைக் குறித்துக் கேட்டார். 'என்னை உடலாக எண்ணும்போது, நான் உங்கள் அடிமை. என்னை உயிர் என்று எண்ணும்போது, நான் உங்களில் ஓர் அம்சம். தூய உணர்வின் கோணத்தில் பார்க்கும்போது, நீங்களே நான், நானே நீங்கள்' என்று அழகாக பதிலளித்தார் சொல்லின் செல்வர்.

ஆத்மபுத்தியில் இருவரும் ஒன்றே. ஜீவ புத்தியிலும், ஸூக்ஷ்ம சரீர புத்தியிலும் வேறு வேறுதான். வேறு வேறு என்று சொல்வது முக்கியமா? ஒன்று என்று சொல்வது முக்கியமா? ஒன்று என்று கூறுவதே முக்கியம்.

ஒருவரைப் பாராட்டும்போதும், ஒருவரை நிந்திக்கும்போதும் உடல் மனக்கூட்டமைப்பைத்தான் கவனிக்கிறோம். பாராட்டுவதற்கும் நிந்திப்பதற்கும் அபிமானமே காரணம்.

தன்னை உயிராக எண்ணிக்கொண்டு, தன்னிடம் இயல்பாக உள்ள அறியாமையால், ஈச்வரனை தனக்கு வேறாக அறிகிறான்.

**अविद्योपाधिः सन् आत्मा जीव इत्युच्यते।**

**அவித்யோபாதி: ஸந் ஆத்மா ஜீவ இத்யுச்யதே।**

அறியாமையாகிய உபாதியோடு கூடிய ஆத்மா ஜீவன் எனப்படுகிறான்.

## தெளிவுரை

இவ்வாறு அறியாமையோடு கூடிய ஆத்மாவிற்குத்தான் ஜீவன் என்று பெயர். உண்மையில் ஜீவன் பரம்பொருளே ஆவான்.

உண்மையில் தண்ணீர்தான் அலையாகவும் கடலாகவும், காட்சியளிக்கிறது. அதுபோல பரம்பொருளே ஜீவனாகவும் ஈச்வரனாகவும் காட்சியளிக்கிறது.

அவித்யா என்பது காரண சரீரம். இத்தகையது என்று கூற முடியாததும், தொடக்கமற்றதும், பொய்யானதும், ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களுக்குக் காரண மாத்திரமாகவும், உண்மையை அறியாததும், வேற்றுமை அற்றதுமாக இருப்பது காரண சரீரம். காரண சரீரம்தான் ஆநந்தமயகோசம் என்றும் கூறப்பட்டது.

அறியாமையோடு சேர்ந்திருக்கின்ற ஆத்மாவிற்கு ஜீவன் என்று பெயர்.

**मायोपाधिः सन् आत्मा ईश्वर इत्युच्यते।**

**மாயோபாதி: ஸந் ஆத்மா ஈஸ்வர: இத்யுச்யதே।**

மாயை என்ற உபாதியோடு கூடிய ஆத்மா ஈச்வரன் எனப்படுகிறான். மாயையோடு சேர்ந்திருக்கின்ற ஆத்மாவிற்கு ஈச்வரன் என்று பெயர்.

### தெளிவுரை

ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் உள்ள உபாதிகள் வேறு வேறு.

எப்பொருள் மற்றொரு பொருளுக்கு அருகில் சென்று, அப்பொருளின் இயல்பை மறைத்து, தன்னுடைய இயல்பையே அதனுடைய இயல்பாகக் காட்டுகிறதோ, அதற்கு உபாதி என்று பெயர்.

காவியேற்றப்பட்ட ஆடை ஒன்றில், உண்மையில் வெள்ளையாக இருக்கும் நூலின் நிறத்தை, காவி நிறம் மறைக்கிறது.

தூய உணர்வு அல்லது ஆத்மா வெள்ளைத்துணிக்கு ஒப்பானது. உடல், மனக்கூட்டமைப்பு, காவி நிறத்திற்கு ஒப்பான உபாதி.

துறவி, இல்லறத்தான், ஆண், பெண் என்பவையெல்லாம் மனிதனின் உபாதிகள். (உபாதி என்ற சொல்லுக்கு நோய் என்று பொருள் அல்ல, ஊடகம் என்று பொருள்).

உயிருக்கு மனிதத்தன்மை உபாதி. பரம்பொருளுக்கு (உயிராக இருக்கும்) ஜீவத்தன்மை உபாதி.

இந்த ஞானம் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டால், எத்தனை வேற்றுமைகள் வந்து போனாலும் அவற்றால் பாதிக்கப்படாமல் இருப்போம். வேற்றுமைகள் அனைத்தும் மாயத்தோற்றங்களே. வேற்றுமைகளுக்கு, நடைமுறை வாழ்வில் தேவையான அளவு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அளவுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுப்பதால் துன்பமே விளையும்.

**एवं उपाधिभेदात्जीवेश्वरभेददृष्टिः यावत्पर्यन्तं तिष्ठति**

**तावत्पर्यन्तं जन्ममरणादिरूपसंसारो न निवर्तते।**

**ஏவம் உபாதி பேதாத் ஜீவேஶ்வர பேதத்ருஷ்டி:**
**யாவத்பர்யந்தம் திஷ்டதி தாவத்பர்யந்தம்**
**ஜந்மமரணாதிரூப ஸம்ஸாரோ ந நிவர்ததே।**

**ஏவம்** - இவ்வாறு, **உபாதி பேதாத்** - உபாதி வேற்றுமையினால், **ஜீவேஶ்வர பேதத்ருஷ்டி:** - ஜீவனும் ஈச்வரனும் வேறு என்ற எண்ணமானது, **யாவத்பர்யந்தம்** - எது வரையிலும், **திஷ்டதி** - உள்ளதோ, **தாவத்பர்யந்தம்** - அதுவரை, **ஜந்மமரணாதிரூப** - பிறப்பு, இறப்பு வடிவிலான, **ஸம்ஸார:** - பிறவித்துயரானது, **ந நிவர்ததே** - நீங்குவதில்லை.

*இவ்வாறு உபாதி வேற்றுமையினால், ஜீவனும் ஈச்வரனும் வேறு என்ற எண்ணமானது, எது வரையிலும் உள்ளதோ, அதுவரை பிறப்பு, இறப்பு வடிவிலான பிறவித்துயரானது நீங்குவதில்லை.*

## தெளிவுரை

ஜீவனும் ஈச்வரனும் ஒன்று என்ற அத்வைத ஞானமே, பிறப்பு - இறப்பு வடிவிலான பிறவித்துன்பத்தை நீக்கும்.

கடலைப் பார்த்து வியக்கிறோம். பெரிதாக இருக்கிறது என்றாலும் அது தண்ணீர்தான். அலையைப் பார்த்து சிறியது என்கிறோம். சிறியதாக இருப்பினும் தண்ணீர்தான்.

அலை, கடல், தண்ணீர் ஆகிய மூன்று சொற்களும் ஒரே பொருளைத்தான் குறிக்கின்றன என்பதைப் புரிந்த பிறகு, அம்மூன்றும் ஒன்றே என்பது நமக்குத் தெளிவாக விளங்குகிறது.

அதுபோல, ஜீவன், ஈச்வரன், ஜகத் என்று கூறினாலும், உண்மையில் இருப்பது பரம்பொருள் மட்டுமே என்பது விளங்கும். உயிர் என்பது ஜீவ ஆத்மா. இறைவன் பரம ஆத்மா. ஆத்மா என்ற சொல்லால் குறிக்கப்படுவது தூய உணர்வே ஆகும்.

ஸ்படிகத்திற்கு அருகில் நீல நிறத்துணியை எடுத்துச் சென்றால், ஸ்படிகம் நீலநிறமாகக் காட்சியளிக்கும்.

அதுபோல, பஞ்சகோசங்களுடன் இணைத்துக்கொண்டு, அதன் தன்மைகளை உயிர் தன் மீது ஏற்றிக்கொள்கிறது.

நான் உடல் என்று சொல்லும்போது, அந்நமய கோசத்துடன் இணைந்துகொள்கிறோம்.

பசி, தாகம் என்னும்போது ப்ராணனுடன் இணைந்துகொள்கிறோம்.

ஆத்மாவுக்கு, உடல், ப்ராணன், மனம், புத்தி, ஆனந்தம் ஆகிய அனைத்தும் உபாதிகள். நான் உபஹிதம்.

நீல நிறத்துணி உபாதி, அருகிலுள்ள ஸ்படிகம் உபஹிதம்.

குடம் உபாதி, உள்ளிருக்கும் ஆகாசம் உபஹிதம்.

ஜீவனுக்கு அறியாமை உபாதி, பரம்பொருள் உபஹிதம்.

ஈச்வரனுக்கு மாயை உபாதி, பரம்பொருள் உபஹிதம்.

உபாதிகள் உண்மையல்ல. உபஹிதமே உண்மை.

ஜீவனும் ஈச்வரனும் கற்பிக்கப்பட்டவை. பரம்பொருள் மட்டுமே உண்மை.

திருக்கோயில்களில் ஸோமாஸ்கந்தர் பெரிய தேரில் வலம் வருகிறார். சண்டிகேச்வரர் சிறிய தேரில் வருகிறார். இரண்டுமே பஞ்சலோகத்தால் செய்யப்பட்ட விக்ரஹங்கள், இருவருக்குமே ரிஷப வாஹனம். பகவான், பக்தர் இருவரும் ஒருவரே.

கல், பஞ்சலோகம் முதலியவை உபஹிதம். நாமரூபங்கள் உபாதி.

ஐக்யம் - ஒன்றாக இருக்கும் தன்மை என்பது நடைமுறை வாழ்வியலில் அறியப்படுவதல்ல, அது ஞானம். உபாதியில்தான் வேற்றுமை, உபஹிதத்தில் அல்ல என்பது ஞானம்.

உபாதி வேற்றுமைகளில் ஆழ்ந்து, ஈச்வரனும் ஜீவனும் வேறு வேறு என்று கருதும்வரை ஸம்ஸாரம் நீங்காது. வேற்றுமை எண்ணம் நீங்கிவிட்டால், ஸம்ஸாரம் நீங்கிவிடும்.

‘எவன் எனது தெய்விகமான பிறப்பையும் செயலையும் உள்ளவாறு அறிகிறானோ, அவன் பிறப்பு இறப்புக்களை வெல்கிறான்’ என்று பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் கீதையில் கூறுகிறார்.

ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்று தெரிந்துகொள்வதால் என்ன பயன்? இங்கேயே இப்பொழுதே ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை என்பதே பயன். இத்தகைய விடுதலை ஞானத்தினால் ஏற்படுகிறது.

அனைத்தும் எண்ணங்களே. நான் பந்தப்பட்டிருக்கிறேன் என்று நினைப்பதும் ஓர் எண்ணம்தான். நான் ஸம்ஸாரத்திலிருந்து விடுபட்டுவிட்டேன் என்று நினைப்பதும் ஓர் எண்ணம்தான்.

நான் பந்தப்பட்டுள்ளேன் என்ற எண்ணத்தை, நான் முக்தனாக இருக்கிறேன் என்ற எண்ணமாக மாற்றுவதற்கு சாஸ்த்ர விசாரம் தேவைப்படுகிறது. சாஸ்த்ர விசாரம் செய்வதற்குரிய தகுதிகளை வளர்த்துக்கொள்வதற்கு கர்மயோகம், உபாஸனை, யாத்திரை முதலிய ஸாதனைகள் மேற்கொள்ள வேண்டும்.

ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்ற அத்வைத ஞான நிஷ்டையினால், மோக்ஷம் ஸித்திக்கிறது.

## கடாகாசமும் மடாகாசமும்

குடத்திற்குள் உள்ள ஆகாசம் சிறியது. கட்டிடத்திற்குள் உள்ள ஆகாசம் பெரியது. சிறியது, பெரியது என்பது குடம், மடத்தைப் பொறுத்தது. ஆகாசத்தில் சிறியது, பெரியது இல்லை. ஆகாசத்தைச் சிறியதாகக் காட்டுவது குடம். பெரியதாகக் காட்டுவது கட்டிடம்.

நம்முடைய உடல், மனம், புத்தி குடத்தைப் போன்றது. உள்ளிருக்கும் நான் (தூய உணர்வாகிய ஆத்மா) ஆகாசத்தைப் போன்றவன்.

குடத்திற்கு அஹங்காரம் வந்துவிட்டால், நான் குடமாக இருக்கிறேன், பெரிய கட்டிடமாக இல்லையே என்று எண்ணம் தோன்றிவிடும். இதுவே ஸம்ஸாரம்.

கட்டிடத்தைப் போன்றது மாயை. அதற்குள் இருக்கும் ஆகாசத்தைப் போன்றது தூய உணர்வு.

உண்மையில் குடத்திலும் கட்டிடத்திலும்தான் வேற்றுமை. ஆகாசத்தில் வேற்றுமையில்லை.

அலை என்பது ஜீவனைப் போன்றது. கடல் என்பது ஈச்வரனைப் போன்றது. தண்ணீர் என்பது பரம்பொருளைப் போன்றது. அலை என்ற சொல்லும், கடல் என்ற சொல்லும் தண்ணீரின் மீது கற்பிக்கப்படுகிறது. அதுபோல, ஜீவனும் ஈச்வரனும் மாயையால் பரம்பொருளின்மீது கற்பிக்கப்பட்டுள்ளனர்.

## ஜீவனும் ஈச்வரனும்

வேதம் முதலில் ஈச்வரனை அறிமுகப்படுத்தி, ஈச்வரன் நம்மைப் படைத்தவர். ஸர்வ வல்லமை படைத்தவர். நம்மைக் காட்டிலும் மேலானவர் என்று எண்ணி அவரை வழிபடச் சொல்கிறது.

ஈச்வரனை அவ்வாறு அறிமுகப்படுத்தி, அவரை வழிபடுமாறு பணித்த அதே வேதம், நமக்கு மனப்பக்குவத்தைக் கொடுத்து, ஈச்வரனும் நீயும் ஒன்று என்ற உண்மையை உணர்த்தி, அனைத்துவித வேற்றுமைகளையும் நீக்குகிறது.

நீண்ட நாட்கள் கடவுளிடம் பக்தி செலுத்தியவருக்கே இந்த பாடம். இன்னும் ஆன்மிக வாழ்க்கையில் அடியெடுத்து வைக்காதவருக்கு இந்தப் பாடம் பொருந்தாது.

நானும் கடவுளும் ஒன்று என்று சொல்லும்போது, அவர்மீது பக்தி கூடுமே தவிர குறையாது. ஞானி ஒருவர்தான் கடவுள் தனக்கு வேறாக இல்லை என்பதை உணர்ந்து, அவர் மீது அந்யோந்யமாக பக்தி செலுத்துகிறார்.

ஞானி நாள்தோறும் செய்ய வேண்டிய வழிபாடுகளிலும், உலகியல் நடைமுறை வாழ்விலும் மிக இயல்பாக ஈடுபடுகிறார். ஆழமான மனதில் தானும் கடவுளும் ஒன்று என்ற ஞானத்தோடு இருக்கிறார். இது பிளவுப்பட்ட தன்மை (split personality) அல்ல. இதுவே சரியான புரிதல்.

சாஸ்த்ரத்தை முறையாகப் படித்தால், இதில் இரட்டைத்தன்மைக்கோ, போலித்தனத்திற்கோ இடமில்லை என்பது தெளிவாக விளங்கும்.

ஒற்றுமையைப் பற்றியும் வேற்றுமையைப் பற்றியும் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஜீவாத்ம பரமாத்ம அபேதம் ஸத்யம்। (ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையே வேற்றுமையில்லை என்பது உண்மை.)

ஜீவாத்ம பரமாத்ம பேதம் மித்யா। (ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கு இடையே உள்ள வேற்றுமையானது வெறும் தோற்றம்.)

**तस्मात्कारणात् न जीवेश्वरयोर्भेदबुद्धिः स्वीकार्या।**

**தஸ்மாத் காரணாத் ந ஜீவேஶ்வரயோர்**
**பேதபுத்தி: ஸ்வீகார்யா।**

எனவே, ஜீவனும் ஈச்வரனும் வேறு என்று எண்ணும் எண்ணத்தை விட்டுவிட வேண்டும்.

## தெளிவுரை

இறைவனுக்கும் நமக்கும் இடையே உள்ள வேற்றுமை உண்மை என்று எண்ணும் எண்ணமானது, மீண்டும் மீண்டும் ஸம்ஸாரத்தில் நம்மை ஆழ்த்திவிடும். எனவே அந்த வேற்றுமை எண்ணங்களை நீக்கிவிட வேண்டும்.

அடுத்து, ஒரு முக்கியமான ஐயத்தைக் கூறி, அதற்குத் தெளிவான பதில் கூறப்படுகிறது.

**ननु साहंकारस्य किंचिज्ज्ञस्य जीवस्य निरहंकारस्य सर्वज्ञस्य ईश्वरस्य तत्त्वमसीति महावाक्यात् कथमभेदबुद्धिः स्यादुभयोः विरुद्धधर्माक्रान्तत्वात्।**

**நநு ஸாஹங்காரஸ்ய கிஞ்சிஜ்ஞஸ்ய ஜீவஸ்ய நிரஹங்காரஸ்ய ஸர்வஜ்ஞஸ்ய ஈஶ்வரஸ்ய தத்த்வமஸீதி மஹாவாக்யாத் கதம் அபேதபுத்தி: ஸ்யாதுபயோ: விருத்ததர்மாக்ராந்தத்வாத்।**

**நநு** - அப்படியானால், **ஸாஹங்காரஸ்ய** -அஹங்காரத்துடன் கூடிய, **கிஞ்சிஜ்ஞஸ்ய ஜீவஸ்ய** - சிற்றறிவு படைத்த ஜீவனுக்கும், **நிரஹங்காரஸ்ய** - அஹங்காரமற்ற, **ஸர்வஜ்ஞஸ்ய ஈஶ்வரஸ்ய** - வாலறிவு படைத்த ஈச்வரனுக்கும், **தத்த்வமஸீதி** - தத் த்வம் அஸி என்ற, **மஹாவாக்யாத்** - மஹாவாக்கியத்தினால், **கதம்** - எவ்வாறு, **அபேதபுத்தி:** - வேற்றுமையற்ற தன்மை உண்டாகும்?, **ஸ்யாதுபயோ: விருத்ததர்மாக்ராந்தத்வாத்** - இரண்டிற்கும் முரண்பாடான தன்மை உள்ளதன்றோ!

*அப்படியானால் அஹங்காரத்துடன் கூடிய, சிற்றறிவு படைத்த ஜீவனுக்கும், அஹங்காரமற்ற, வாலறிவு படைத்த ஈச்வரனுக்கும், தத் த்வம் அஸி என்ற மஹாவாக்கியத்தினால் எவ்வாறு வேற்றுமையற்ற தன்மை உண்டாகும்? இரண்டிற்கும் முரண்பாடான தன்மை உள்ளதன்றோ!*

## தெளிவுரை

ஜீவனும் ஈச்வரனும் ஒன்று. அவர்களிடையே வேற்றுமை இல்லை என்று சாஸ்த்ரம் கூறுகிறது.

ஜீவனும் ஈச்வரனும் ஒன்று என்பதை உள்ளவாறு விளக்கும் வேத வாக்கியங்களுக்கு மஹாவாக்யம் என்று பெயர்.

தத் த்வம் அஸி। நீ அதுவாக இருக்கிறாய்.

இது ஒரு மஹாவாக்யம்.

மஹாவாக்யம் என்றால் நீளமான வாக்யம் என்று பொருளல்ல.

எந்த ஒரு வாக்யம், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்று சொல்கிறதோ, அது மஹாவாக்யம். (ஜீவ ஈஶ்வர ஐக்ய போதக வாக்யம் மஹாவாக்யம்।)

மஹாவாக்யங்கள் எண்ணிலடங்கா. அவற்றுள் தேர்ந்தெடுத்த நான்கு வாக்கியங்கள் முக்கியமானவை. இவை நிகமநம் (statement) எனப்படும்.

ப்ரஜ்ஞாநம் ப்ரஹ்ம। (பேருணர்வே பரம்பொருள்) என்பது ஐதரேய உபநிஷத்தில் அமைந்துள்ள ரிக் வேத மஹாவாக்யம்.

அயம் ஆத்மா ப்ரஹ்ம। (இந்த ஆத்மாவே பரம்பொருள்) என்பது மாண்டூக்ய உபநிஷத்தில் அமைந்துள்ள அதர்வண வேத மஹாக்யம்.

தத் த்வம் அஸி। (நீ அதுவாக இருக்கிறாய்) என்பது சாந்தோக்ய உபநிஷத்தில் அமைந்துள்ள ஸாம வேத மஹாவாக்யம்.

அஹம் ப்ரஹ்ம அஸ்மி। (நான் பரம்பொருளாக இருக்கிறேன்) என்பது ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் அமைந்துள்ள யஜுர்வேத மஹாவாக்யம்.

தத் த்வம் அஸி। நீ அதுவாக இருக்கிறாய்.

த்வம் என்ற சொல் ஜீவனைக் குறிக்கிறது. தத் என்ற சொல் ஈச்வரனைக் குறிக்கிறது.

அஸி என்பது ஒன்றாக இருக்கும் தன்மையை உணர்த்துகிறது.

தத், த்வம் ஆகிய இரண்டு சொற்களுக்கும் வாச்யார்த்தம் (சொற்பொருள்), லக்ஷ்யார்த்தம் (குறிப்புப்பொருள்) ஆகிய இரண்டு வித அர்த்தங்கள் இருக்கின்றன.

பொதுவாக, பேச்சுவழக்கில் நாம் இவற்றைப் பயன்படுத்துகிறோம்.

தேர்தல் சூடுபிடித்துவிட்டது என்று கூறுகிறோம். சூடு என்பதற்கு உஷ்ணம் என்று பொருளல்ல, தீவிரமாக செயல்கள் நடைபெறுவதைத்தான் அந்த சொல் குறிக்கிறது.

தத் த்வம் அஸி। நீ அதுவாக இருக்கிறாய் என்பது மஹாவாக்யம்.

ஆனால் இதனை எப்படிப் புரிந்துகொள்வது ?

சிற்றறிவு படைத்த ஜீவன் எங்கே ?

வாலறிவு படைத்த இறைவன் எங்கே ?

என்ற கேள்வி எழும். எந்தக் கோணத்தில் ஜீவனும் ஈச்வரனும் ஒன்று என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**इति चेन्न। स्थूलसूक्ष्मशरीराभिमानि त्वंपदवाच्यार्थः। उपाधिविनिर्मुक्तं समाधिदशासंपन्नं शुद्धं चैतन्यं त्वंपदलक्ष्यार्थः।**

**இதி சேந்ந। ஸ்தூலஸூக்ஷ்மஶரீராபிமாநி த்வம்பத வாச்யார்த்த:। உபாதிவிநிர்முக்தம் ஸமாதிதஶாஸம்பந்நம் ஶுத்தம் சைதந்யம் த்வம்பத லக்ஷ்யார்த்த:।**

**இதி சேந்ந** - அப்படியல்ல. **ஸ்தூலஸூக்ஷ்மஶரீராபிமாநி** - பருவுடல், நுண்ணுடல் ஆகியவற்றில் பற்றுள்ள உயிர் என்பது, **த்வம்பத** - நீ என்ற சொல்லுக்கு, **வாச்யார்த்த:** - சொற்பொருள். **உபாதிவிநிர்முக்தம்** - உபாதிகளற்ற, **ஸமாதிதஶாஸம்பந்நம்** - குரு சாஸ்த்ரோபதேசத்தின் துணையோடு, ஒருமுகப்பட்ட மனதுடன் உணரப்படக்கூடிய, **ஶுத்தம் சைதந்யம்** - தூய உணர்வு என்பது, **த்வம்பத லக்ஷ்யார்த்த:** - நீ என்ற சொல்லின் குறிப்புப் பொருள்.

*அப்படியல்ல. பருவுடல், நுண்ணுடல் ஆகியவற்றில் பற்றுள்ள உயிர் என்பது, நீ என்ற சொல்லுக்கு சொற்பொருள்.*

*உபாதிகளற்ற, குரு சாஸ்த்ரோபதேசத்தின் துணையோடு, ஒருமுகப்பட்ட மனதுடன் உணரப்படக்கூடிய தூய உணர்வு என்பது நீ என்ற சொல்லின் குறிப்புப் பொருள்.*

## தெளிவுரை

சொற்களைக் கையாளும்போது, சொல்லின் நேரடிப்பொருள் ஒன்று இருக்கிறது, குறிப்புப் பொருள் ஒன்று இருக்கிறது. எந்தப் பொருளை எடுத்துக்கொள்கிறோம் என்பதே முக்கியம்.

एवं सर्वज्ञत्वादिविशिष्ट ईश्वरः तत्पदवाच्यार्थः।

**ஏவம் ஸர்வஜ்ஞத்வாதிவிஶிஷ்ட ஈஶ்வர: தத்பத வாச்யார்த்த:।**

**ஏவம்** - இவ்வாறே, **ஸர்வஜ்ஞத்வாதிவிஶிஷ்ட ஈஶ்வர:** - வாலறிவு முதலான தன்மைகளோடு கூடிய ஈச்வரன், **தத் பத** - அது என்ற சொல்லின், **வாச்யார்த்த:** - சொற்பொருள்.

*இவ்வாறே வாலறிவு முதலான தன்மைகளோடு கூடிய ஈச்வரன், அது என்ற சொல்லின் சொற்பொருள்.*

उपाधिशून्यं शुद्धचैतन्यं तत्पदलक्ष्यार्थः।

**உபாதிஶூந்யம் ஶுத்தசைதந்யம் தத்பதலக்ஷ்யார்த்த:।**

**உபாதிஶூந்யம்** - உபாதிகளற்ற, **ஶுத்தசைதந்யம்** - தூய உணர்வு, **தத்பதலக்ஷ்யார்த்த:** - அது என்ற சொல்லின் குறிப்புப்பொருள்.

*உபாதிகளற்ற தூய உணர்வு, அது எனும் சொல்லிற்கு குறிப்புப்பொருள்.*

**एवं च जीवेश्वरयोः चैतन्यरूपेणाभेदे बाधकाभावः।**

**ஏவம் ச ஜீவேஶ்வரயோ:**
**சைதந்யஸ்வரூபேணாபேதே பாதகாபாவ:।**

**ஏவம்** -இவ்வாறே, **ஜீவேஶ்வரயோ: ச** - ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும், **சைதந்யஸ்வரூபேண** - தூய உணர்வின் கோணத்தில், **அபேதே** - வேற்றுமையற்ற தன்மையானது கூறப்படுவதால், **பாதகாபாவ:** - குற்றமேற்படுவதில்லை.

*இவ்வாறே ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும், தூய உணர்வின் கோணத்தில், வேற்றுமையற்ற தன்மையானது கூறப்படுவதால் குற்றமேற்படுவதில்லை.*

## தெளிவுரை

பல காலமாக இறைவனைப் போற்றி வழிபட்டிருக்கிறோம். பல்வேறு பூஜைகளும் ஹோமங்களும் செய்திருக்கிறோம். ஜீவனும் ஈச்வரனும் ஒன்று என்று கூறுகிறார்கள். ஜீவனிடம் நிறைய குறைபாடுகள் இருக்கின்றன. ஈச்வரனிடம் ஒரு குறையுமில்லை.

ஜீவன் அஹங்காரமும், அல்ப புத்தியும் உடையவன். கடவுளுக்கு அஹங்காரமில்லை. அவர் அனைத்தைப் பற்றிய அறிவும் உடையவர்.

ஜீவனும் ஈச்வரனும் வாஸ்தவத்தில் ஒன்று என்பதைப் புரிந்து கொள்ள உதவும் வாசகங்களே மஹாவாக்யங்கள்.

த்வம் (சொற்பொருள்) = அஹங்காரத்தை உடைய, அல்ப புத்தியுடைய ஜீவன்

த்வம் (குறிப்புப்பொருள்) = தூய உணர்வு

தத் (சொற்பொருள்) = அஹங்காரமற்ற, அனைத்தையும் அறிந்த ஈச்வரன்

தத் (குறிப்புப்பொருள்) = தூய உணர்வு

தத், த்வம் ஆகிய பதங்களால் குறிக்கப்படும் குறிப்புப்பொருள், தூய உணர்வாகிய பரம்பொருள்.

தூய உணர்வு ஒன்றுதான் இருக்கிறது. உபாதி த்ருஷ்டியில்தான் வேற்றுமை. உபஹித த்ருஷ்டியில் வேற்றுமையில்லை.

உபாதி த்ருஷ்டி ஸம்ஸாரத்திற்குக் காரணமாகிறது.

உபஹித த்ருஷ்டி மோக்ஷத்திற்குக் காரணமாகிறது.

பருவுடல், நுண்ணுடல் ஆகியவற்றில் அபிமானம் கொண்டுள்ள ஜீவன் த்வம் பதத்தின் சொற்பொருள்.

உபாதிகளோடு தொடர்பற்ற தூய உணர்வு த்வம் பதத்தின் குறிப்புப்பொருள். உபாதிகளோடு இணைத்துக்கொள்ளாமல், உபஹிதமாகத் தன்னை உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒருமுகப்பட்ட மனதுடன் இந்த உண்மையை உள்வாங்கி உணர்ந்துகொள்பவர்கள் பிறவித்தளைகளிலிருந்து விடுபடுகிறார்கள். இவ்வாறே, எல்லாமறிந்த தன்மை முதலிய குணங்களுடன் கூடிய ஈச்வரன் தத் பதத்தின் சொற்பொருள். உபாதிகளற்ற தூய உணர்வு தத் பதத்தின் குறிப்புப்பொருள்.

த்வம் = தூய உணர்வு + அவித்யா உபாதி + அவித்யா உபாதியில் ப்ரதிபலிக்கின்ற நிழல் உணர்வு = ஜீவன்

தத் = தூய உணர்வு + மாயா உபாதி + மாயா உபாதியில் ப்ரதிபிம்பிக்கின்ற நிழல் உணர்வு = ஈச்வரன்

ஜீவன், ஈச்வரன் ஆகிய இருவரிடத்திலும் உள்ள உபாதியையும், உபாதியில் ப்ரதிபலிக்கின்ற நிழல் உணர்வையும் நீக்கிவிட்டால், தத் த்வம் அஸி। நீ அதுவாக

இருக்கிறாய் என்ற சமன்பாடு சரியானது என்பது விளங்குகிறது.

ஒரு குறிப்பிட்ட வாக்கியத்தில், எந்தக் கோணம் அறுதி உண்மை என்பதைப் பார்த்து, அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஸூர்யன் உதிக்கிறான், மறைகிறான் என்பது ஒரு கோணத்தில் உண்மை.

ஸூர்யன் இருந்த இடத்தில்தான் இருக்கிறான். பூமிதான் சுற்றுகிறது என்பது மற்றொரு கோணத்தில் உண்மை.

ஸூர்யன் உதிக்கிறான், மறைகிறான் என்பது நம்முடைய அனுபவம் என்றாலும், அது உண்மையான நிகழ்வல்ல என்று விஞ்ஞான அறிவு உணர்த்துகிறது. அதனையே ஏற்றுக்கொள்கிறோம்.

எந்த உண்மையை ஏற்றுக்கொண்டால், நம்முடைய துன்பங்கள் மேலும் மேலும் வளருமோ, அந்த உண்மையை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை.

எந்த உண்மையை ஏற்றுக்கொண்டால், நாம் நிலையான பேரின்பத்தை உணர முடியுமோ அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நம்முடைய வழிபாடுகளைச் சற்று கவனித்துப் பார்த்தால், இறைவனை நம்மிடமிருந்தே எடுத்து ஆவாஹநம் செய்து, பூஜை செய்து, பிறகு நமக்குள்ளேயே வைத்துக்கொள்வதைக் காணலாம். ஆத்ம பூஜையின்றி ஒரு பூஜையுமில்லை.

நாம் நம்மை உடல், மனம், புத்தியோடு கூடிய குறைவுடைய ஜீவனாகக் கருதிக்கொள்வதுதான் நம்முடைய வாழ்க்கையின் அனைத்துவிதமான துன்பங்களுக்கும் காரணம் என்று ஆதிசங்கரர் ப்ரஹ்மஸூத்ரத்தின் அத்யாஸ பாஷ்யத்தில் கூறியிருக்கிறார். உடல், மனம், புத்தியாகிய பொய்யை மெய் என்று கருதுவதுதான் அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம்.

வேற்றுமைகளுக்கு முக்கியத்துவமும், உண்மைத்தன்மையும் கொடுப்பதை நிறுத்திவிட வேண்டும். வேற்றுமைகள் உண்மையல்ல, அவை மாயத்தோற்றங்களே.

உபாதிகளற்ற, இரண்டற்ற பரம்பொருளை தன்னிடத்திலும் இறைவனிடத்திலும் உணர வேண்டும்.

இந்த ஞானம் அனைத்துவித துன்பங்களையும் எதிர்கொள்ளக்கூடிய ஆற்றலை அருளக்கூடியது.

வெள்ளம்போன்று பெரிய அளவில் வரும் துன்பங்களையும் அழிக்கக்கூடிய ஆற்றல், மெய்யறிவுடையவனுக்கு இருக்கிறது.

நானே கடவுள் என்பது உபாதி த்ருஷ்டியில் உண்மையல்ல. நம்மை உடல், மனம், புத்தியோடு கூடிய ஜீவனாகக் கருதிக்கொள்ளும்போது, ஒருபொழுதும் நாம் இறைவனுக்கு ஸமமாக மாட்டோம்.

ஆத்மா அல்லது நான் தூய உணர்வு. உணர்வின் கோணத்தில் நானும் இறைவனும் ஒன்று என்று கூறுவதில் யாதொரு தவறும் இல்லை. அவ்வாறு கூறுவதால் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது.

அவ்வாறு நானும் பரம்பொருளும் ஒன்று என்று கூறுவது, உலகியல் அறத்திற்கு முரண்பாடானது அல்ல.

சொற்களில் வேற்றுமை இருக்கலாம். ஆனால் மௌனத்தில் வேற்றுமை இல்லை. சொல், மௌனம் ஆகிய இருமைகளைக் கடந்தது பரம்பொருள்.

எண்ணுவது, எண்ணாமல் இருப்பது ஆகிய இரண்டையும் கடந்தது பரம்பொருள். சொல்லுவது, சொல்லாமல் இருப்பது ஆகிய இரண்டையும் கடந்தது அது என்று சொல்லவும் வேண்டுமோ?

**एवं च वेदान्तवाक्यैः सद्गुरूपदेशेन च सर्वेष्वपि भूतेषु येषां ब्रह्मबुद्धिरुत्पन्ना ते जीवन्मुक्ताः इत्यर्थः।**

**ஏவம் ச வேதாந்வாக்யை: ஸத்குரூபதேஶேந ச ஸர்வேஷ்வபி பூதேஷு யேஷாம் ப்ரஹ்மபுத்திருத்பந்நா தே ஜீவந்முக்தா: இத்யர்த்த:।**

**ஏவம் ச** - இவ்வாறே, **வேதாந்வாக்யை:** - வேதாந்த வாக்கியங்களாலும், **ஸத்குரூபதேஶேந ச** - ஸத்குருநாதரின் உபதேசத்தினாலும், **யேஷாம்** - எவர்களுக்கு, **ஸர்வேஷ்வபி பூதேஷு**- அனைத்துயிர்களிலும், **ப்ரஹ்மபுத்திருத்பந்நா** - ப்ரஹ்மபுத்தியானது ஏற்படுகிறதோ, **தே** - அவர்கள், **ஜீவந்முக்தா: இத்யர்த்த:** - ஜீவன்முக்தர்கள் எனப்படுவார்கள்.

*இவ்வாறு வேதாந்த வாக்கியங்களாலும், ஸத்குருநாதரின் உபதேசத்தினாலும் எவர்களுக்கு அனைத்துயிர்களிலும் ப்ரஹ்ம புத்தி ஏற்படுகிறதோ அவர்கள் ஜீவன் முக்தர்கள் எனப்படுவர்.*

## தெளிவுரை

வேதாந்த வாக்கியங்களின் துணைகொண்டுதான் நாம் உண்மையை உணர்கிறோம்.

வேதாந்த சாஸ்த்ரமே ப்ரமாணம். நான் பரம்பொருளாக இருக்கிறேன்.

இருப்பவை அனைத்தும் பரம்பொருளே என்ற அறிவு நமக்கு சாஸ்த்ரங்களின் வாயிலாகவே ஏற்படுகிறது.

நிறத்தைப் பற்றிய அறிவானது, கண் என்ற கருவியினால் ஏற்படுகிறது.

ஒவ்வொரு கருவியும் பொருட்களின் ஒவ்வொரு தன்மையைப் பற்றிய அறிவை மனதிற்குக் கொடுக்கின்றன.

இந்த்ரியங்களால் அறிவு ஏற்படுகிறது. ஊகத்தினாலும் அறிவு ஏற்படுகிறது.

அதுபோல, சாஸ்த்ர வாக்கியங்களால் மெய்யறிவு ஏற்படுகிறது.

ரிஷிகளுடைய வாக்கியங்களைக் கற்கிறோம். அவர்கள் பொய் கூற மாட்டார்கள்.

இந்த ஞானத்தை ஏற்றுக்கொள்வதால் நம் துன்பம் அழிந்துவிடும். உரிய பயன் கிடைத்துவிடும்.

**அநதிகத அபாதித அஸந்திக்த அர்த்தவத் ஞாநகரணம் ப்ரமாணம்।**

அறிவைத் தரும் கருவிக்கு ப்ரமாணம் என்று பெயர்.

இதனைத் தெரிந்துகொள்வதை வேறு எதனாலும் தெரிந்துகொள்ள முடியாது. இதனால் தெரிந்துகொள்ளும் விஷயத்தை வேறு எதனாலும் நீக்க முடியாது.

அறிந்துகொள்கின்ற விஷயத்தில் நமக்கு ஸந்தேஹம் எழுந்தால், அறிவு ஏற்படாது.

ஸந்தேஹத்துடன் கூடியதை அறிவுக்கருவியாக ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த அறிவு நமக்குப் பயன் தர வேண்டும்.

வேதாந்தவா க்கியங்களின் துணைகொண்டு இந்த சாஸ்த்ரத்தைக் கற்க வேண்டும். தானாகக் கற்கக்கூடாது. குரு கற்றுக்கொடுத்தாலே புரிவது கடினம்.

ஸம்ப்ரதாயம் அறிந்த குருநாதர் ஒருவரிடமே கற்க வேண்டும். சாஸ்த்ரத்தை கற்பிப்பவரே குரு.

தன்னுடைய சொந்தக் கருத்துக்களைத் திணிப்பவர் குருவல்ல.

நல்ல ஆசிரியர் கற்பிக்கின்ற முறையையும் சேர்த்துக் கற்றுத்தருவார்.

குருநாதர் நற்குணங்கள், பண்பாடு, பழக்கவழக்கங்கள் முதலியவற்றைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

எப்படி வாழ வேண்டும் என்று குருநாதர் கற்றுக்கொடுக்க வேண்டும்.

அருகில் இருந்து வாழ்ந்துகாட்டக்கூடிய குருநாதரே வழிகாட்ட வேண்டும்.

ஸம்ப்ரதாயம் தெரிந்த, நல்வழி காட்டக்கூடிய குருநாதரிடத்தில் கற்க வேண்டும்.

உயிரோடு தற்போது வாழ்ந்துகொண்டிருக்கின்ற குருநாதரிடத்தில் கற்க வேண்டும்.

முற்காலத்தில் வாழ்ந்த மஹானைத்தான் குருவாக ஏற்றுக்கொள்வேன் என்று கூறுவது ஒருவிதமான ஆணவம்.

வேதாந்த சாஸ்த்ரங்களின் உபதேசத்தாலும், ஸத்குருவின் உபதேசத்தினாலும் அனைத்துயிர்களிடத்தும் எவர்களுக்கு ப்ரஹ்மபுத்தி ஏற்படுகிறதோ, அவர்கள் ஜீவன்முக்தர்கள் எனப்படுவார்கள்.

அத்தகைய ஜீவன்முக்தர்கள் பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைகின்ற பரம்பொருளையே காண்பார்கள்.

குருவிற்கு உதாரணமாக எந்த ஒரு பொருளையும் உலகத்தில் கூறிவிட முடியாது. ஸ்பர்சவேதியைத் தொட்டால், இரும்புகூட தங்கமாக மாறிவிடுகிறது.

அப்படி உருவாக்கப்பட்ட தங்கத்திற்கு மற்றொரு பொருளைத் தங்கமாக மாற்றக்கூடிய ஆற்றல் இல்லை.

ஆனால் குருநாதரோ தன்னுடைய ஒவ்வொரு சீடரையும் தன்னைப் போன்றே மெய்யறிவில் சிறந்தவராக விளங்கச் செய்கிறார். சீடரும் சிறந்த குருவாகத் திகழுமாறு செய்கிறார்.

அடுத்து ஞானபலனைக் குறித்த ஆராய்ச்சி தொடங்குகிறது.

ஓம்
ஸ்ரீகுருப்யோ நம:



# ப்ரயோஜன விசார:

**மெய்யறிவின் பயனைப் பற்றிய தெளிந்த அறிவைப் பெறுதல்.**

ஓம்

ஸ்ரீகுருப்யோ நம:

கேள்வி: ननु जीवन्मुक्तः कः? நநு ஜீவந்முக்த: க:?

ஜீவன்முக்தன் என்றால் என்ன?

பதில் : यथा देहोऽहं पुरुषोऽहं ब्राह्मणोऽहं शूद्रोऽहमस्मीति दृढनिश्चयः तथा नाहं ब्राह्मणः न शूद्रः न पुरुषः किन्तु असङ्गः सच्चिदानन्दस्वरूपः प्रकाशरूपः सर्वान्तर्यामी चिदाकाश रूपोस्मीति दृढनिश्चयरूप अपरोक्षज्ञानवान् जीवन्मुक्तः।

**யதா தேஹோऽஹம் புருஷோऽஹம் ப்ராஹ்மணோऽஹம் ஶூத்ரோऽஹமஸ்மீதி த்ருடநிஶ்சய: ததா நாஹம் ப்ராஹ்மண: ந ஶூத்ர: ந புருஷ: கிந்து அஸங்க: ஸச்சிதாநந்த ஸ்வரூப: ப்ரகாஶரூப: ஸர்வாந்தர்யாமி சிதாகாஶ ரூபோஸ்மீதி த்ருடநிஶ்சயரூப அபரோக்ஷஜ்ஞாநவாந் ஜீவந்முக்த:।**

**யதா** - எவ்வாறு (ஒருவனுக்கு), **தேஹோऽஹம்** - நான் உடல், **புருஷோऽஹம்** - நான் ஆண், **ப்ராஹ்மணோऽஹம்** - நான் ப்ராஹ்மணன், **ஶூத்ரோஹேமஸ்மீதி** - நான் சூத்ரன் என்ற, **த்ருடநிஶ்சய:** - ஆழமான எண்ணம் இருக்கிறதோ, **ததா** - அதே போன்று, **நாஹம் ப்ராஹ்மண:** - நான் ப்ராஹ்மணன் அல்லன், **ந ஶூத்ர:** - (நான்) சூத்ரனல்லவன், **ந புருஷ:** - நான் ஆணல்லன். **கிந்து** - ஏனெனில், **அஸங்க:** - நான் பற்றற்ற, **ஸச்சிதாநந்த ஸ்வரூப:** - தூய இருப்புணர்வு இன்ப வடிவமான, **ப்ரகாஶரூப:** - பேரொளி வடிவமான, **ஸர்வாந்தர்யாமி** - அனைவருள்ளும் விளங்குகின்ற, **சிதாகாஶ ரூபோஸ்மீதி** - அறிவுப்பெருவெளி வடிவமாக இருக்கிறேன் என்ற, **த்ருடநிஶ்சயரூப** - ஆழமான, உறுதியான எண்ண வடிவிலான, **அபரோக்ஷஜ்ஞாநவாந்** -

அபரோக்ஷ ஞானத்தை உடையவன், **ஜீவந்முக்த:** - ஜீவன்முக்தன் எனப்படுவான்.

*எவ்வாறு (ஒருவனுக்கு) நான் உடல், நான் ஆண், நான் ப்ராஹ்மணன், நான் சூத்திரன் என்ற ஆழமான எண்ணம் இருக்கிறதோ, அதே போன்று நான் ப்ராஹ்மணனல்லன், நான் சூத்திரனல்லன், நான் ஆணல்லன், ஏனெனில் நான் பற்றற்ற, தூய இருப்புணர்வு இன்ப வடிவமான, பேரொளி வடிவமான, அனைவருள்ளும் விளங்குகின்ற, அறிவுப்பெருவெளி வடிவமாக இருக்கிறேன் என்ற ஆழமான, உறுதியான எண்ண வடிவிலான அபரோக்ஷ ஞானத்தை உடையவன் ஜீவன்முக்தன் எனப்படுவான்.*

வாழும் காலத்திலேயே முக்தனாக இருப்பவன் ஜீவன்முக்தன். அவன் எதிலும் பந்தப்படுவதில்லை. எதற்கும் எதிர்வினை புரிவதில்லை. அறச்செயல்களை மட்டுமே செய்கிறான்.

தனக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களை நீக்கிக்கொள்ள அறவழியில் கூட முயற்சிக்காமல், தன்னில் தான் நிலைத்திருக்கிறான். இதுவே சும்மா இருத்தல்.

உலகில் எவர் போற்றினாலும் தூற்றினாலும் எதிர்வினை புரிவதில்லை. இன்ப துன்பம் எது வந்தாலும் பாதிப்படைவதில்லை. தன்னுடைய அனைத்துவிதமான அபிமானங்களையும் அறிவால் அழிப்பவனே ஜீவன்முக்தன். மெய்யறிவின் துணைகொண்டு, அபிமானங்களிலிருந்து விடுபடும் நிலையே ஜீவன்முக்தி எனப்படும்.

ஜாதி, குலம், கோத்ரம், இனம், மொழி, பால், உடல், மனம், புத்தி, கல்வி என எத்தனையோ வகையான அடையாளங்களை, நம்முடைய தன்மைகளாகக் கருதி பலகாலம் பழகிவிட்டோம். அவை நான் அல்ல, அவை அனைத்தும் பொய்த் தோற்றங்கள்.

நாமே சுயமாக ஏற்படுத்திக்கொள்கின்ற அபிமானங்கள், ஸமுதாயத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற அபிமானங்கள், சாஸ்த்ரத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற அபிமானங்கள் ஆகிய பலவகையான அபிமானங்கள் இருக்கின்றன. இவை எவையுமே உண்மையல்ல.

நான் உடல், நான் ஆண் என்பது இயற்கையாக இருக்கின்ற கட்டு. ஜாதி, மொழி ஆகிய கட்டுக்கள் செயற்கையாக ஸமூஹத்தினாலும், சாஸ்த்ரத்தினாலும் போடப்படுகின்ற கட்டுக்கள்.

இந்தக் கட்டுக்களின் மூலம்தான் கலாசாரம், கட்டுப்பாடு முதலியவற்றை நாம் கடைப்பிடித்து, நம் வாழ்வை நெறிப்படுத்திக்கொள்கிறோம்.

வேதாந்த ஞானம் உள்ளத்தில் ஊன்றிவிட்டால், அனைத்துவித கட்டுக்களும் நீங்கிவிடுகின்றன.

நாம் அனைவரும் ஒன்றுதான். வேறு வேறாகத் தோற்றமளித்தாலும் ஒன்றுதான். வேற்றுமை என்பது மித்யா. ஒன்று என்பதே ஸத்யம்.

நமக்கு என்றுமே மரணமில்லை. யாண்டும் இருக்கின்ற இருப்பே நமது உண்மை வடிவம். தூய அறிவு வடிவினர் நாம், அறியாமைக்கு அங்கு இடமில்லை.

துன்பம் என்பது அணுவளவும் நமக்கு இல்லவே இல்லை. நாம் ஆனந்த வடிவினர். அனைத்தையும் அறிகின்ற பேரறிவு, அனைத்துயிர்களுக்குள்ளும் உறையும் பேருணர்வு, பேரின்பம் நாமே.

‘‘ஒரு மீனவரிடம் சென்று இதைச் சொல். அவன் சிறந்த மீனவராவார். ஒரு துப்புரவாளரிடம் சென்று இதைச் சொல். அவர் சிறந்த துப்புரவாளராவார். ஒரு வணிகரிடம் சென்று இதைச் சொல். அவர் சிறந்த வணிகராவார்’’ என்றார் ஸ்வாமீ விவேகானந்தர்.

நான் தூய இருப்பு - உணர்வு - இன்ப வடிவினன் என்று அறிந்து, அந்த உறுதியான மெய்யறிவில் நிலைத்திருப்பவர் ஜீவன்முக்தர் எனப்படுவார். அவகாசம் கொடுப்பது எதுவோ, அதற்கு ஆகாசம் என்று பெயர். (அவகாஶ ப்ரதாத்ரு ஆகாஶ:।)

உலகப் பொருட்கள் அனைத்திற்கும் அவகாசம் கொடுப்பது ஆகாசம். ஆகாசத்திற்கு அவகாசம் கொடுப்பது தூய உணர்வு.

சித் எனப்படும் தூய உணர்வே சிதாகாசமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஜட ஆகாசத்திற்கு ஆதாரமானது சிதாகாசம். (சித் – தூய உணர்வு)

ஜீவன்முக்தர் சிதாகாசத்தைத் தன்னுடைய இயல்பாக அறிந்து, அதில் நிலைத்திருக்கிறார். நான் உடல் என்ற எண்ணம் நமக்கு உறுதியாக இருக்கிறது. அதே போன்று, நான் உடல் அல்ல என்ற எண்ணம் உறுதியாக எவருக்கு இருக்கிறதோ, அவரே ஜீவன்முக்தர் எனப்படுவார்.

உலகில் பெரும்பாலான மனிதர்கள், உடல் நான் என்று எண்ணுவதுமில்லை, அதனை மறப்பதுமில்லை. அதைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை, உடல்மயமாகவே ஆகிவிடுகிறார்கள்.

உடலுக்குள் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. குழந்தைப் பருவம் இறந்தது, வாலிபப் பருவம் பிறந்தது. வாலிபப் பருவம் இறந்தது, முதுமைப் பருவம் பிறந்தது. உடல் இறந்தது, நான் இறக்கவில்லை.

பருவங்கள் பிறந்து இறந்தன, நான் பிறக்கவும் இல்லை, இறக்கவும் இல்லை. நான் உடல், நான் மனிதன், நான் ஆண், நான் அந்தணன், நான் சூத்ரன் முதலியவை எவையும் உண்மையல்ல. நான் முதல்நிலை ஊழியர், கடைநிலை ஊழியர் முதலியவை சமூக ஏற்பாடுகள். அவையும் உண்மையல்ல.

''அறிவிலிகள் எவ்வாறு பற்றோடு உலகில் பணியாற்றுகிறார்களோ, அவ்வாறே பற்றற்று அதே

ஈடுபாட்டுடன் உலக நன்மையின் பொருட்டு செயல்புரிவாயாக'' என்று பகவான் ஸ்ரீக்ருஷ்ணர் அர்ஜுனனுக்கு அறிவுறுத்துகிறார்.

இந்த உண்மையை உணர்ந்துகொண்டவர், எந்தவிடத்திலும் தனக்கு முக்கியத்துவம் தேவை என்று எதிர்பார்ப்பதில்லை. அவர் தன்னால் இயன்ற ஸேவைகளை மிகுந்த உற்சாகத்துடன் மனமுவந்து ஆற்றுகிறார். அத்தகைய ஜீவன்முக்தருக்கு எவ்வித உயர்வு மனப்பான்மையோ தாழ்வு மனப்பான்மையோ ஏற்படுவதில்லை. உயர்வு, தாழ்வு மனப்பான்மைகளை உண்மையென்று நினைப்பது அறியாமை.

'கற்றறிந்த அந்தணன், பசு, யானை, நாய், நாயைச் சமைத்து உண்பவன் ஆகிய எல்லோரிடத்திலும் ஒரே தத்துவத்தைப் பார்ப்பவன் பண்டிதன்' என்கிறார் பகவான் ஸ்ரீக்ருஷ்ணர்.

'இந்த ஞானம் கீழ்க்குலத்தில் பிறந்தவனிடத்தில் இருந்தால் என்ன? உயர்ந்த குலத்தில் பிறந்தவனிடத்தில் இருந்தால் என்ன? இந்த ஞானம் உடையவர்களே உயர்ந்தவர்கள்' என்கிறார் ஆதிசங்கரர்.

**ब्रह्मैवाहमस्मीत्यपरोक्षज्ञानेन**
**निखिलकर्मबन्धविनिर्मुक्तः स्यात्।**

**ப்ரஹ்மைவாஹமஸ்மீத்யபரோக்ஷஜ்ஞாநேந**
**நிகிலகர்மபந்தவிநிர்முக்த: ஸ்யாத்।**

**அஹம் ப்ரஹ்மைவ அஸ்மி இதி** - நான் பரம்பொருளாகவே இருக்கிறேன் என்ற, **அபரோக்ஷ ஜ்ஞாநேந** - அபரோக்ஷ ஞானத்தினால், **நிகிலகர்மபந்தவிநிர்முக்த: ஸ்யாத்** - ஒருவன் அனைத்துவித கர்மபந்தங்களினின்றும் விடுபடுகிறான்.

*நான் பரம்பொருளாக இருக்கிறேன் என்ற அபரோக்ஷ ஞானத்தினால் ஒருவன் அனைத்துக் கர்மபந்தங்களினின்றும் விடுபடுகிறான்.*

## தெளிவுரை

பரோக்ஷம் என்றால் இந்த்ரியங்களுக்குப் புலப்படாதது என்று பொருள். ஸ்வர்கம், நரகம் போன்றவற்றை நாம் கண்களால் காண்பதில்லை. சாஸ்தரத்தின் மூலமே அவற்றைத் தெரிந்துகொள்கிறோம். சாஸ்த்ரம் பொய் சொல்லாது என்ற ச்ரத்தையின் அடிப்படையில் அவற்றை ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால் நான் என்பது எப்பொழுதும் அபரோக்ஷமாக இருக்கிறது. தெள்ளத்தெளிவாக எப்பொழுதும் இருக்கிறது. நான் உடல், மனிதன், அந்தணன் என்று சொல்வதெல்லாம் அறியாமைபூர்வமான, அறிவுபூர்வமான குழப்பங்கள். நான் என்பது அபரோக்ஷம். நான் என்பது தேஹம் அல்ல என்பதும் அபரோக்ஷம். ப்ரத்யக்ஷம், அபரோக்ஷம் இரண்டும் ஒன்றே.

பொதுவாக, ப்ரத்யக்ஷம் என்றால் இந்த்ரியங்கள் வாயிலாக என்று பொருள். நம்முடைய மனம், மனதில் தோன்றும் உணர்ச்சிகள், அறிவு ஆகிய அனைத்தும் நித்ய அபரோக்ஷம். அதாவது இவை நமக்கு எப்பொழுதும் தெளிவாகத் தெரிகின்றன. நான் என்பதில் குழப்பமில்லை. நான் உடல் என்பதில்தான் குழப்பம், அதுவே மருள் எனப்படுகிறது.

நான் உடலாக இருக்கிறேன். நான் மனிதனாக இருக்கிறேன். நான் அந்தணனாக இருக்கிறேன் என்பவையெல்லாம் வ்யாவஹாரிக ஸத்யம் (நடைமுறை வாழ்வியல் உண்மைகள்).

நான் பரம்பொருளாக இருக்கிறேன் என்பது பாரமார்த்திக ஸத்யம் (அறுதி உண்மை).

பாரமார்த்திக ஸத்யத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தால், பிரச்சினைகளுக்கோ துன்பங்களுக்கோ இடமில்லை.

ஏனெனில், பரம்பொருளாகிய நான் பிறவாதவன், இறவாதவன், மாறாதவன், தேயாதவன், வளராதவன், முழுமையானவன், குறைவில்லாதவன். இதற்குப்பெயர்தான் அபரோக்ஷ ஞானம். இந்த ஞானத்தை உடையவன் அபரோக்ஷ ஞானவான்.

இந்த ஞானத்தைப் பெற்ற பிறகும், வ்யாவஹாரிக ஸத்யமும், பாரமார்த்திக ஸத்யமும் தொடர்கின்றன. ஆனாலும் ஜீவன்முக்தராகிய மெய்யறிவாளர், பாரமார்த்திக ஸத்யத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்.

இந்த மெய்யறிவு உள்ளத்தில் நிலைபெற்றுவிட்டால், எவ்வித வேற்றுமைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கத் தோன்றாது.

ஜீவ - ஜீவ பேதம், ஜட - ஜட பேதம், ஜீவ - ஜட பேதம், ஈச்வர - ஜீவ பேதம், ஈச்வர - பேதம் எனப்படும் வேற்றுமைகளுக்கு இடமில்லை.

''உன்னிடத்திலும் என்னிடத்திலும் மற்றவர்களிடத்திலும் இருப்பவர் மஹாவிஷ்ணு ஒருவரே. உண்மையை உணராமல் ஏன் வீணாகக் கோபிக்கிறாய். எல்லோரிடத்திலும் வேற்றுமை உணர்ச்சியை அறவே நீக்கிவிடு. எல்லோரிடத்திலும் உள்ள தூய உணர்வை உணர்வாயாக'' என்கிறார் ஆதிசங்கரர்.

குருநாதர் சீடர்களை தன்னுடைய அடிமைகளாக வைத்திருப்பதில்லை. அவர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து, ஸ்வதந்திரமாக இருக்கும் தன்மையை உணர்த்துகிறார்.

தன்னை குருநாதர் ஸ்வதந்த்ரமாக்கியதால், அவருக்கு அடிமையாக இருக்க விரும்புகிறான் சீடன்.

அஹங்காரமே நம்மை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது. அஹங்காரத்திலிருந்து விடுபடுவதே உண்மையான ஸ்வதந்த்ரம். ஆத்ம ஞானத்தினால் அஹங்காரம் அழிந்துவிடுகிறது. பிறகு பற்றற்று செயல்பட முடியும்.

## ஸர்வாத்ம பாவம்

வேதத்தின் ஒரு பகுதியான ஸ்ரீருத்ரம், உள்நாட்டுத் திருடர் தலைவர்களாக விளங்கும் இறைவனுக்கு நமஸ்காரம். வெளிநாட்டுத் திருடர் தலைவர்களாக விளங்கும் இறைவனுக்கு நமஸ்காரம் என்று அனைத்துயிர்களிலும் இறைமையைப் போற்றுகிறது.

நம் முன்னோர் திருக்கோயில் கோபுரங்களில் வாழ்க்கையின் நன்மை, தீமைகள் அனைத்தையும் சித்தரிக்கும் அம்சங்களை வைத்துள்ளனர். இருமைகள் நிறைந்த நம்முடைய வாழ்க்கை அனுபவங்களை அவை குறிக்கின்றன. அனைத்தும் இறைமயம் என்பதை உணர்த்துவதற்காகத்தான் கோபுர தர்சநம் கோடி புண்ணியம் என்று கூறுவார்கள்.

உலகில் இன்ப துன்பங்களால் பாதிக்கப்படுகின்ற மனநிலைக்குத்தான் ஸம்ஸாரம் என்று பெயர். அவ்வாறு இன்ப துன்பங்களால் பாதிக்கப்படுகின்ற நிலையிலிருந்து விடுபடுதலே ஜீவன்முக்தி.

நான் பரம்பொருளாக இருக்கிறேன் என்ற அபரோக்ஷ ஞானத்தினால், எல்லா கர்மபந்தங்களிலிருந்தும் அறவே விடுபட்டவனாகிறான். கர்மபந்தங்களைப் பற்றிக் கூறியதால், அடுத்து கர்மபந்தங்களைப் பற்றிய விளக்கம் கூறப்படுகிறது.

**कर्माणि कथि विधानि सन्तीति चेत्**

**आगामिसञ्चितप्रारब्ध भेदेन त्रिविधानि सन्ति।**

**கர்மாணி கதி விதாநி ஸந்தீதி சேத்**
**ஆகாமிஸஞ்சிதப்ராரப்த பேதேந த்ரிவிதாநி ஸந்தி।**

**கர்மாணி கதி விதாநி ஸந்தீதி சேத்** - கர்மங்கள் எத்தனை விதமெனில், **ஆகாமிஸஞ்சிதப்ராரப்த பேதேந த்ரிவிதாநி ஸந்தி** - அவை ஆகாமி (வருவினை), ஸஞ்சிதம் (எஞ்சுவினை), ப்ராரப்தம் (நடவினை) என மூன்று விதங்களாக இருக்கின்றன.

*கர்மங்கள் எத்தனை விதமெனில், அவை ஆகாமி (வருவினை), ஸஞ்சிதம் (எஞ்சுவினை), ப்ராரப்தம் (நடவினை) என மூன்று விதங்களாக இருக்கின்றன.*

**ज्ञानोत्पत्त्यनन्तरं ज्ञानिदेहकृतं पुण्यपापरूपं कर्म यदस्ति तदागामीत्यभिधीयते।**

**ஞாநோத்பத்யநந்தரம் ஞாநிதேஹக்ருதம் புண்யபாபரூபம் கர்ம யதஸ்தி ததாகாமீத்யபிதீயதே।**

**ஞாநோத்பத்யநந்தரம்** - ஞானம் தோன்றிய பிறகு, **ஞாநிதேஹக்ருதம்** - ஞானியின் உடலால் செய்யப்படும், **புண்யபாபரூபம்** - புண்ய பாப வடிவமான, **கர்ம யதஸ்தி** - கர்மம் எதுவோ, **ததாகாமீத்யபிதீயதே** - அது ஆகாமி எனப்படும்.

*ஞானம் தோன்றிய பிறகு, ஞானியின் உடலால் செய்யப்படும் புண்ய பாப வடிவமான கர்மம் எதுவோ அது ஆகாமி எனப்படும்.*

கேள்வி: **सञ्चितं किम्? ஸஞ்சிதம் கிம்?**

ஸஞ்சிதகர்மா என்றால் என்ன?

பதில்: **अनन्तकोटिजन्मनां बीजभूतं सत् यत्कर्मजातं पूर्वार्जितं तिष्ठति तत् सञ्चितं ज्ञेयम्।**

**அநந்தகோடிஜந்மநாம் பீஜபூதம் ஸத் யத்கர்மஜாதம் பூர்வார்ஜிதம் திஷ்டதி தத் ஸஞ்சிதம் ஜ்ஞேயம்।**

**அநந்தகோடிஜந்மநாம் பீஜபூதம் ஸத்** - எண்ணற்ற பல கோடிப் பிறவிகளுக்கு விதையாக இருந்துகொண்டு, **யத்கர்மஜாதம் பூர்வார்ஜிதம் திஷ்டதி** - முன்பு சேர்த்து வைத்தவையான கர்மங்கள் எவையோ, **தத் ஸஞ்சிதம் ஜ்ஞேயம்** - அவற்றை ஸஞ்சித கர்மங்கள் என்று அறிக.

*எண்ணற்ற பல கோடிப் பிறவிகளுக்கு விதையாக இருந்துகொண்டு, முன்பு சேர்த்து வைத்தவையான கர்மங்கள் எவையோ அவற்றை ஸஞ்சித கர்மங்கள் என்று அறிக.*

**प्रारब्धं कर्म किमिति चेत्। ப்ராரப்தம் கர்ம கிமிதி சேத்।**

ப்ராரப்த கர்மம் யாதெனில்.

**इदं शरीरमुत्पाद्य इह लोके एवं सुखदुःखादिप्रदं यत्कर्म तत्प्रारब्धम्। भोगेन नष्टं भवति। प्रारब्धकर्मणां भोगादेव क्षय इति।**

**இதம் ஶரீரமுத்பாத்ய இஹ லோகே ஏவம் ஸுகது:காதிப்ரதம் யத்கர்ம தத்ப்ராரப்தம்। போகேந நஷ்டம் பவதி। ப்ராரப்தகர்மணாம் போகாதேவ க்ஷய இதி।**

**இதம் ஶரீரமுத்பாத்ய** - இவ்வுடலைத் தோற்றுவித்து, **இஹ லோகே** - இவ்வுலகில், **ஏவம் ஸுகது:காதிப்ரதம்** - இவ்வாறு இன்பதுன்பங்களைத் தரும், **யத்கர்ம தத்ப்ராரப்தம்** - கர்மம் எதுவோ அது ப்ராரப்தம். **போகேந நஷ்டம் பவதி** - அது அனுபவித்து அழியக்கூடியது. **ப்ராரப்தகர்மணாம் போகாதேவ க்ஷய இதி** - (ப்ராரப்த கர்மம் அனுபவிப்பதால்தான் அழிவுறும் என்று கூறப்பட்டுள்ளதால்).

*இவ்வுடலைத் தோற்றுவித்து இவ்வுலகில் இவ்வாறு இன்பதுன்பங்களைத் தரும் கர்மம் எதுவோ அது ப்ராரப்தம். அது அனுபவித்து அழியக்கூடியது. (ப்ராரப்த கர்மம் அனுபவிப்பதால்தான் அழிவுறும் என்று கூறப்பட்டுள்ளதால்).*

## தெளிவுரை

நான் பரம்பொருளாக இருக்கிறேன் என்ற ஞானம் எவனுக்கு உறுதியாக ஏற்படுகிறதோ, அவன் அனைத்துவித கர்மங்களிலிருந்தும் விடுபடுகிறான்.

சாஸ்த்ரங்களில் கர்ம என்ற சொல் இடத்திற்குத் தகுந்தாற்போல் பொருள் கொள்ளப்படும். பொதுவாக கர்ம என்பது ஸம்ஸ்க்ருத இலக்கணப்படி செயப்படுபொருளைக் (object) குறிக்கும். நாம் முயற்சித்து செய்யும் செயல்களுக்கும் (action) கர்ம என்றே பெயர்.

கர்ம என்ற சொல் இந்த இடத்தில் கர்மபலனைக் (result of action) குறிக்கும்.

நாம் முன்பு செய்த செயல்கள், கண்ணுக்குத் தெரியாத புண்ணிய பாபங்களாக இருக்கின்றன. அவை இன்பமாகவும் துன்பமாகவும் பலன் கொடுக்கின்றன.

நாம் செய்யும் எந்த ஒரு சிறுசெயலும் பலனை அளிக்காமல் போவதில்லை. தொடர்ந்து உடற்பயிற்சி செய்தால், உடல் எடை குறையும். உணவைக் கூட்டினாலும், குறைத்தாலும் அதற்கேற்ற பலன்கள் உருவாகின்றன. அதுபோல, ஒவ்வொரு செயலும் தனக்குரிய பலனை அளித்தே தீரும்.

நாம் செய்த நற்செயல்களின் பலன்கள் நல்வினைப்பயன் எனப்படும் புண்ணியமாகவும், தீய செயல்களின் பலன்கள் தீவினைப்பயன் எனப்படும் பாபமாகவும் மாறுகின்றன. உரிய காலத்தில் அவை பலனைக் கொடுக்கின்றன. புண்ணியமானது இன்பம் என்ற பலனையும், பாபமானது துன்பம் என்ற பலனையும் கொடுக்கிறது.

**सञ्चितं कर्म ब्रह्मैवाहमिति निश्चयात्मकज्ञानेन नश्यति।**

**ஸஞ்சிதம் கர்ம ப்ரஹ்மைவாஹமிதி**
**நிஶ்சயாத்மகஜ்ஞாநேந நஶ்யதி।**

**ஸஞ்சிதம் கர்ம** – ஸஞ்சித கர்மமானது, **ப்ரஹ்மைவாஹமிதி** – நான் பரம்பொருளாக இருக்கிறேன் என்ற, **நிஶ்சயாத்மகஜ்ஞாநேந** – உறுதியான மெய்யறிவினால், **நஶ்யதி** – அழிவுறும்.

*ஸஞ்சித கர்மமானது, நான் பரம்பொருளாக இருக்கிறேன் என்ற உறுதியான மெய்யறிவினால் அழிவுறும்.*

**आगामि कर्म अपि ज्ञानेन नश्यति। किञ्च आगामि कर्मणां नलिनीदलगतजलवज्ज्ञानिनां सम्बन्धो नास्ति।**

**ஆகாமி கர்ம அபி ஜ்ஞாநேந நஶ்யதி। கிஞ்ச ஆகாமி கர்மணாம் நலிநீதலகதஜலவத் ஜ்ஞாநிநாம் ஸம்பந்தோ நாஸ்தி।**

**ஆகாமி கர்ம அபி** - ஆகாமி கர்மமும், **ஜ்ஞாநேந** - ஞானத்தால், **நஶ்யதி** - அழிவுறும். **கிஞ்ச** - மேலும், **ஆகாமி கர்மணாம்** - ஆகாமி கர்மத்துடன், **ஜ்ஞாநிநாம்** - ஞானிக்கு, **நலிநீதலகதஜலவத்** - தாமரையிலைத் தண்ணீர் போல, **ஸம்பந்தோ நாஸ்தி** - தொடர்பில்லை.

*ஆகாமி கர்மமும் ஞானத்தால் அழிவுறும். மேலும் ஆகாமி கர்மத்துடன் ஞானிக்கு தாமரையிலைத் தண்ணீர் போலத் தொடர்பில்லை.*

## தெளிவுரை

பொதுவாக, நாம் உலகில் பிறந்த பிறகு, புதிதாகப் புண்ணிய பாபங்களைச் செய்கிறோம். அதிகாலை முதல் இரவு வரை எத்தனையோ செயல்களைச் செய்கிறோம்.

இதுவே நம்முடைய முதல் பிறவி என்று எண்ணுகிறோம். ஆனால் எண்ணற்ற பிறவிகள் நமக்கு வந்து சென்றிருக்கின்றன. இத்தகைய புண்ய பாப பலன்கள் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

### ஆகாமி கர்மம்

ஞானத்தை அடைந்த பிறகு, ஞானி செய்கின்ற கர்மங்கள் ஆகாமி கர்மங்கள் எனப்படும். மஹான்கள் இதில் மிகவும் கவனமாக இருக்கிறார்கள்.

### ப்ராரப்த கர்மம்

இந்தப் பிறவியில் பலன் கொடுக்கத் தொடங்கியுள்ள புண்ணிய பாபங்கள் இவை.

இவ்வாழ்க்கையில் ஒரு தவறும் செய்யாத ஒருவர் பல்வேறு துன்பங்களை அனுபவிக்க நேரிடுகிறது.

முற்பிறவிகளில் செய்த தீவினையின் பயன்கள் தற்போது பலன் கொடுக்கத் தொடங்கியுள்ளன என்று பொருள். துன்பம் வரும் காலத்தில் மட்டும், எனக்கு ஏன் இத்தனை துன்பம் ஏற்படுகிறது ? என்று கேட்கிறது.

இன்பம் வரும்போது, எனக்கு ஏன் இன்பம்? என்று எவரும் கேட்பதில்லை. இன்பமும் முன்வினைப்பயனே.

### ஸஞ்சித கர்மம்

ஸமஷ்டி ஸஞ்சித கர்மத்திற்கு மற்றொரு பெயர் மாயை என்பதாகும். எல்லோருடைய (ஒட்டுமொத்த) கூட்டு கர்மங்கள். முதல் கர்மம் எப்பொழுது வந்தது என்று எவருக்கும் தெரியாது. ஸஞ்சிதம் என்றால் நன்றாகச் சேர்க்கப்பட்டது என்று பொருள். (ஸம்யக் க்ருதம் ஸஞ்சிதம்।)

நெற்குதிருக்குள்ளிருந்து நெல்லை எடுத்து, குத்திப் புடைத்து அரிசியாக்கி உண்கிறோம். அதனைப் போன்றது ப்ராரப்த கர்மம் (நடவினை). குதிருக்குள் உள்ள நெல் ஸஞ்சித கர்மம் (எஞ்சுவினை). குதிருக்குள்ளிருந்து சிறிது நெல்லை எடுத்து விதைக்கப் போடுவோம். அதனைப் போன்றது ஆகாமி கர்மம் (வருவினை). விரும்பத்தக்க பலன்கள், விரும்பத்தகாத பலன்கள், இரண்டும் கலந்த பலன்கள் என மூன்று வகையாக கர்மபலன்களை பகவான் கீதையில் பிரித்துக் கூறுகிறார்.

ஞானம் வந்த பிறகும், கர்மபலன்களை அனுபவித்துத்தான் தீர வேண்டும். எத்தனை கல்பகோடி காலங்களானாலும், எந்தக் கர்மமும் பலன் கொடுக்காமல் போவதில்லை.

## ஞானியின் கோணம்

ஞானியின் கோணத்தில், ஞானம் ஏற்பட்ட மாத்திரத்தில், அனைத்துவித கர்மங்களும் அழிந்துவிடுகின்றன. தசரதர் இறந்த பிறகு, யார் முதல் விதவை என்று கூற முடியாது. மூன்று அரசிகளும் ஒரே நேரத்தில் விதவையானார்கள். அதைப்போன்று, ஞானியின் மூன்றுவித கர்மங்களும் மெய்யறிவாகிய நெருப்பில் அழிந்துவிடுகின்றன. 'எவ்வாறு விறகுக்கட்டைகளை நெருப்பானது எரிக்கிறதோ, அதைப்போல, மெய்யறிவு அனைத்துக் கர்மங்களையும் அழித்துவிடுகிறது' என்று பகவான் கீதையில் கூறியுள்ளார்.

ஞானியின் ஸஞ்சித கர்மம் ஞானத்தால் அழிந்துவிடுகிறது. இப்பிறவியில் பலன் கொடுக்கத் தொடங்கியுள்ள ப்ராரப்த கர்மத்தை அனுபவித்துத்தான் தீர்க்க முடியும். ஜீவன்முக்தியை அனுபவிக்க ப்ராரப்த கர்மம் வேண்டும். சாஸ்த்ரங்களின் கோணத்திலும், உலக நடைமுறை வாழ்வின் கோணத்திலும் ஞானிக்கு ப்ராரப்த கர்மம் இருக்கிறது. ஆனால் ஞானியைப் பொறுத்தவரை அதுவும் அழிந்ததாகவே கருதப்படுகிறது. ஞானி அதற்கு உண்மைத்தன்மை கொடுப்பதில்லை. அவை உண்மையல்ல என்பதை உணர்ந்து, அவற்றை மதிக்காமல் இருக்கிறார். ஞானத்தை அடைந்த பிறகு, ப்ராரப்த கர்மத்தை அனுபவிக்கும் நிலைக்குத்தான் ஜீவன்முக்தி என்று பெயர்.

மிகுந்த உற்சாகத்தோடு செயலில் ஈடுபட்டாலும், தான் செயல்புரியாதவன் (அஹம் அகர்த்தா।) என்ற உறுதியான ஞானத்தோடு இருக்கிறான். அவனே செய்யும் செயலைச் செய்து முடித்தவன். ஞானி, தன்னை ஞானி என்று எண்ணிக் கொள்வதில்லை. அவ்வாறு எண்ணுதலும் ஓர் அஹங்காரமே. ஞானி, தன்னை ப்ரஹ்மமாக உணர்கிறான். எனவே, தனக்கு ப்ராரப்த கர்மம் இல்லை என்று எண்ணுகிறான். ஞானியின் ஸஞ்சித கர்மமும் ஆகாமி கர்மமும் ஞானத்தினால் அழிந்துவிடுகின்றன. ஒருவேளை ஆகாமி கர்மம் பலனைக் கொடுக்கும் என்று வைத்துக்கொண்டாலும், அது ப்ராரப்த

கர்மமாக மாறும். தாமரை இலைத் தண்ணீர் போன்று ஞானி அதிலும் ஒட்டாமல் இருப்பார். ஞானத்தை அடைந்த பிறகும், ஞானி புண்ணிய காரியங்களைச் செய்வார். கவனக்குறைவால் சில பாபங்கள் செய்யவும் கூடும். அந்த புண்ணிய பாபங்களின் பலன் எவ்வாறு பலன் கொடுக்கும் ? யாரைச் சென்றடையும் ?

**किञ्च ये ज्ञानिनं स्तुवन्ति भजन्ति अर्चयन्ति**
**तान्प्रति ज्ञानिकृतं आगामिपुण्यं गच्छति।**

**கிஞ்ச யே ஜ்ஞாநிநம் ஸ்துவந்தி பஜந்தி அர்சயந்தி**
**தாந்ப்ரதி ஜ்ஞாநிக்ருதம் ஆகாமிபுண்யம் கச்சதி।**

**கிஞ்ச** - மேலும், **யே** - எவர்கள், **ஜ்ஞாநிநம்** - ஞானியை, **ஸ்துவந்தி பஜந்தி அர்சயந்தி** - போற்றிப் புகழ்ந்து வழிபடுகிறார்களோ, **தாந்ப்ரதி** - அவர்களை, **ஜ்ஞாநிக்ருதம்** - ஞானியால் செய்யப்பட்ட, **ஆகாமிபுண்யம்** - ஆகாமி புண்யம், **கச்சதி** - சென்றடையும்.

*மேலும் எவர்கள் ஞானியைப் போற்றிப் புகழ்ந்து வழிபடுகிறார்களோ, அவர்களை ஞானியால் செய்யப்பட்ட ஆகாமி புண்யம் சென்றடையும்.*

**ये ज्ञानिनं निन्दन्ति द्विषन्ति दुःखप्रदानं कुर्वन्ति तान्प्रति ज्ञानिकृतं सर्वमागामि क्रियमाणं यदवाच्यं कर्म पापात्मकं तद्गच्छति।**

**யே ஜ்ஞாநிநம் நிந்தந்தி த்விஷந்தி து:கப்ரதாநம் குர்வந்தி தாந்ப்ரதி ஜ்ஞாநிக்ருதம் ஸர்வமாகாமி க்ரியமாணம் யதவாச்யம் கர்ம பாபாத்மகம் தத்கச்சதி।**

**யே** - எவர்கள், **ஜ்ஞாநிநம்** - ஞானியை, **நிந்தந்தி த்விஷந்தி து:கப்ரதாநம் குர்வந்தி** - தூற்றி, இகழ்ந்து துன்புறுத்துகிறார்களோ, **தாந்ப்ரதி** - அவர்களை, **ஜ்ஞாநிக்ருதம்** - ஞானியால் செய்யப்பட்ட, **யதவாச்யம் ஸர்வமாகாமி க்ரியமாணம் பாபாத்மகம் கர்ம** - முன்பு கூறப்பட்ட அனைத்து ஆகாமி பாப வடிவிலான கர்மங்களும், **தத்கச்சதி** - சென்றடைகின்றன.

*எவர்கள் ஞானியைத் தூற்றி இகழ்ந்து துன்புறுத்துகிறார்களோ, அவர்களை, ஞானியால் செய்யப்பட்ட, அனைத்து ஆகாமி பாப வடிவிலான கர்மங்களும் சென்றடைகின்றன.*

## தெளிவுரை

ஒருவருக்கு பணத்தாசை போன பிறகு, அவரிடத்தில் நிறைய பணம் சேர்ந்தால், அவர் என்ன செய்வார்? நற்காரியங்களுக்குக் கொடுத்து உதவுவார். எவர் ஞானியை போற்றி வழிபடுகிறார்களோ, அவர்களுக்கு ஞானியின் புண்ணியங்கள் சென்றடைகின்றன. எத்தனையோ கோயில்களுக்குச் சென்று வழிபட்டு அடைகின்ற புண்ணியங்களை ஞானியை நமஸ்கரிப்பதால் அடையலாம். எவர் ஞானியை இகழ்கிறார்களோ, அவர்களுக்கு ஞானி அறியாமல் செய்த பாபங்கள் சென்றடைகின்றன.

### ஞானியின் மனநிலை

ஞானியின் புண்ணிய பாபங்கள் இவ்வாறு, அவரைப் போற்றுபவர்களையும் தூற்றுபவர்களையும் சென்றடைகின்றன என்று சாஸ்த்ரம் கூறுகிறது. ஆனால், ஞானியின் மனதில், நான் புண்ணியம் செய்ததில்லை, செய்யவில்லை, செய்யப் போவதுமில்லை. நான் பாபம் செய்ததில்லை, செய்யவில்லை, செய்யப் போவதுமில்லை. என்ற எண்ணமே மேலோங்கியிருக்கிறது. நான் புண்ணிய பாபங்களைக் கடந்த தூய ஆத்மா என்ற ஞானத்தில் அவர் நிலைத்திருக்கிறார்.

**तथा चात्मवित्संसारं तीर्त्वा ब्रह्मानन्दमिहैव प्राप्नोति।**

**ததா சாத்மவித் ஸம்ஸாரம் தீர்த்வா**
**ப்ரஹ்மாநந்தமிஹைவ ப்ராப்நோதி।**

**ததா** - அவ்வாறு, **ஆத்மவித்** - ஆத்மாவை அறிந்தவன், **ஸம்ஸாரம் தீர்த்வா** - துயரங்களைக் கடந்து மேலும், **இஹைவ** - இவ்வுலக

வாழ்விலேயே, **ப்ரஹ்மாநந்தம்** - பேரின்பத்தை, **ப்ராப்நோதி** - உணர்கிறான்.

*அவ்வாறு ஆத்மாவை அறிந்தவன் துயரங்களைக் கடந்து மேலும், இவ்வுலக வாழ்விலேயே பேரின்பத்தை உணர்கிறான்.*

## தெளிவுரை

ஞானி, இவ்வாறு அனைத்துத் துயரங்களையும் கடந்து, ப்ரஹ்மானந்தத்தை இம்மண்ணுலக வாழ்விலேயே உணர்கிறான். வானோர்க்கும் உயர்ந்த உலகத்தை இங்கேயே அனுபவிக்கிறான். ஞானத்தின் பலன் ஜீவன் முக்தி, கர்ம பந்தங்களிலிருந்து விடுதலை ஆகிய இரண்டு கோணங்களில் விளக்கப்பட்டது.

**तरति शोकमात्मवित् इति श्रुतेः।**

**தரதி ஶோகமாத்மவித் இதி ஶ்ருதே:।**

**ஆத்மவித்** - ஆத்மாவை அறிந்தவன், **ஶோகம் தரதி** - துயரங்களைக் கடக்கிறான். **இதி ஶ்ருதே:** - என்று ச்ருதியில் கூறப்பட்டுள்ளது.

*ஆத்மாவையறிந்தவன் துயரங்களைக் கடக்கிறான் என்று ச்ருதியில் கூறப்பட்டுள்ளது.*

## தெளிவுரை

இதுவரை கூறப்பட்ட கருத்துக்களுக்கு வேத ப்ரமாணம் கூறப்படுகிறது.

ஶ்ருதி எனப்படும் வேதம் அபௌருஷேயம். மனித புத்தியில் உள்ள குறைபாடுகள் அதில் இல்லை. ஆகாசத்திலிருந்து ரிஷிகளால் க்ரஹிக்கப்பட்ட மந்த்ரங்கள் அவை.

ஆத்மாவை அறிபவன் துயரங்களைக் கடக்கிறான் என்று சாந்தோக்ய உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது.

தான் யார் என்ற உண்மையை உணர்ந்தவன் அஹங்காரத்திலிருந்து விடுபடுகிறான், பிறவிச்சுழலிலிருந்து விடுபடுகிறான், முக்தியை உணர்கிறான்.

**तनुं त्यजतु वा काश्यां श्वपचस्य गृहेऽथ वा।**
**ज्ञानसंप्राप्तिसमये मुक्तोऽसौ विगताशयः॥**

**தநும் த்யஜது வா காஶ்யாம் ஶ்வபசஸ்ய க்ருஹேऽத வா।**
**ஜ்ஞாநஸம்ப்ராப்திஸமயே முக்தோऽஸௌ விகதாஶய:॥**

**தநும்** - உடலை, **காஶ்யாம்** - காசியில், **த்யஜது வா** - விட்டால் என்ன? **ஶ்வபசஸ்ய க்ருஹேதே** - நாயைச் சமைத்துண்பவன் வீட்டில், **வா** - விட்டால் என்ன? **விகதாஶய: அஸௌ** - ஆசைகளைத் துறந்த இவன், **ஜ்ஞாநஸம்ப்ராப்தி ஸமயே** - ஞானத்தை அடைந்த மாத்திரத்திலேயே, **முக்த:** - முக்தனாகிவிடுகிறான்.

உடலைக் காசியில் விட்டால் என்ன? நாயைச் சமைத்துண்பவன் வீட்டில் விட்டால் என்ன? ஆசைகளைத் துறந்த இவன் ஞானத்தை அடைந்த மாத்திரத்திலேயே முக்தனாகிவிடுகிறான்.

**इति स्मृतेश्च। இதி ஸ்ம்ருதேஶ்ச।**

இவ்வாறு ஸ்ம்ருதியும் இருக்கிறது.

## தெளிவுரை

ஸ்ம்ருதி என்றால் நினைக்கப்படுவது. வேதக்கருத்துக்கள் இதன் வாயிலாக எண்ணப்படுகின்றன. (ஸ்மர்யதே அநேந இதி ஸ்ம்ருதி:।)

ஸ்ம்ருதியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது -

ஒருவன் உடலை எங்கு உகுத்தால் என்ன? புனிதமான காசியில் விட்டால் என்ன? நாயைச் சமைத்து உண்பவர்கள் வீட்டில் இறந்தால் என்ன? ஒருவன் ஞானத்தைப் பெற்ற மாத்திரத்தில் முக்தியடைகிறான்.

நானே பரம்பொருள் என்பதைப் புரிந்துகொண்டு இறந்தால், இருபது வயதிலும் பூரண ஆயுள்தான்.

இதனை உணராமல், நூறு வயது வாழ்ந்தாலும் அது அல்ப ஆயுளே ஆகும்.

**விகத ஆஶய: அஸெள முக்த:।**

ஆசைகளிலிருந்து விடுபட்ட மாத்திரத்தில் முக்தியை உணர்கிறான் என்று ஸ்ம்ருதியும் உள்ளது. உடல் பற்றை விலக்கி, நானே பரம்பொருள் என்ற ஞானத்தில் நிலைத்திருப்போமாக!

**इति तत्त्वबोधप्रकरणं समाप्तम्।**

**இதி தத்த்வபோதப்ரகரணம் ஸமாப்தம்।**

தத்த்வபோதம் என்ற நூல் முற்றிற்று.

ஓம் தத் ஸத்

ओम्

श्रीगुरुभ्यो नमः

# तत्त्वबोधः

वासुदेवेन्द्रयोगीन्द्रं नत्वा ज्ञानप्रदं गुरुम्।
मुमुक्षूणां हितार्थाय तत्त्वबोधोऽभिधीयते।।

साधनचतुष्टयसंपन्नाधिकारिणां मोक्षसाधनभूतं तत्त्वविवेकप्रकारं वक्ष्यामः।

साधनचतुष्टयं किम्?

नित्यानित्यवस्तुविवेकः।

इहामुत्रार्थफलभोगविरागः।

शमादिषट्कसंपत्तिः।

मुमुक्षुत्वं चेति।

नित्यानित्यवस्तुविवेकः कः?

नित्यवस्त्वेकं ब्रह्म तद्व्यतिरिक्तं सर्वमनित्यम्। अयमेव नित्यानित्यवस्तुविवेकः।

विरागः कः?

इहस्वर्गभोगेषु इच्छाराहित्यम्।

शमादिसाधनसंपत्तिः का?

शमो दम उपरमस्तितिक्षा श्रद्धा समाधानं च इति।

शमः कः?

मनो निग्रहः।

दमः कः?

चक्षुरादिबाह्येन्द्रियनिग्रहः।

उपरमः कः?

स्वधर्मानुष्ठानमेव।

तितिक्षा का?

शीतोष्णसुखदुःखादिसहिष्णुत्वम्।

श्रद्धा कीदृशी?

गुरुवेदान्तवाक्यादिषु विश्वासः श्रद्धा।

समाधानं किं?

चित्तैकाग्रता।

मुमुक्षुत्वं किम्?

मोक्षो मे भूयात् इति इच्छा।

एतत् साधनचतुष्टयम्।

ततस्तत्त्वविवेकस्याधिकारिणो भवन्ति।

तत्त्वविवेकः कः?

आत्मा सत्यं तदन्यत् सर्वं मिथ्येति।

आत्मा कः?

स्थूलसूक्ष्मकारणशरीराद्व्यतिरिक्तः पञ्चकोशातीतः सन् अवस्थात्रयसाक्षी सच्चिदानन्दस्वरूपः सन् यस्तिष्ठति स आत्मा।

स्थूलशरीरं किम्?

पञ्चीकृतपञ्चमहाभूतैः कृतं, सत्कर्मजन्यं, सुखदुःखादिभोगायतनं, शरीरं, अस्ति, जायते, वर्धते, विपरिणमते, अपक्षीयते, विनश्यतीति, षड्विकारवदेतत्स्थूलशरीरम्।

सूक्ष्मशरीरं किम्?

अपञ्चीकृतपञ्चमहाभूतैः कृतं, सत्कर्मजन्यं, सुखदुःखादिभोगसाधनं, पञ्चज्ञानेन्द्रियाणि, पञ्चकर्मेन्द्रियाणि, पञ्चप्राणादयः मनश्चैकं, बुद्धिश्चैका, एवं सप्तदशकलाभिः सह यत्तिष्ठति तत्सूक्ष्मशरीरम्।

श्रोत्रं त्वक् चक्षुः रसना घ्राणम् इति पञ्चज्ञानेन्द्रियाणि।

श्रोत्रस्य दिग्देवता।

त्वचो वायुः।

चक्षुषः सूर्यः।

रसनाया वरुणः।

घ्राणस्य अश्विणौ।

इति ज्ञानेन्द्रियदेवताः।

श्रोत्रस्य विषयः शब्दग्रहणम्।

त्वचो विषयः स्पर्शग्रहणम्।

चक्षुषो विषयः रूपग्रहणम्।

रसनाया विषयः रसग्रहणम्।

घ्राणस्य विषयः गंधग्रहणम् इति।

वाक्पाणिपादपायूपस्थानीति पञ्चकर्मेन्द्रियाणि।

वाचो देवता वह्निः।

हस्तयोरिन्द्रः।

पादयोर्विष्णुः।

पायोर्मृत्युः।

उपस्थस्य प्रजापतिः।

इति कर्मेन्द्रियदेवताः।

वाचो विषयः भाषणम्।

हस्तयोर्विषयः वस्तुग्रहणम्।

पादयोर्विषयः गमनम्।

पायोर्विषयः मलत्यागः।

उपस्थस्य विषयः आनन्द इति।

कारणशरीरं किम्?

अनिर्वाच्यानाद्यविद्यारूपं, शरीरद्वयस्य कारणमात्रं, सत्स्वरूपाज्ञानं, निर्विकल्पकरूपं, यदस्ति तत्कारणशरीरम्।

अवस्थात्रयं किम्?

जाग्रत्स्वप्नसुषुप्त्यवस्था।

जाग्रदवस्था का?

श्रोत्रादिज्ञानेन्द्रियैः शब्दादिविषयैश्च ज्ञायते इति यत् सा जाग्रदवस्था। स्थूलशरीराभिमानि आत्मा विश्व इत्युच्यते।

स्वप्नावस्था केति चेत् जाग्रदवस्थायां यद्दृष्टं यच्छ्रुतं तज्जनितवासनया निद्रासमये यः प्रपञ्चः प्रतीयते सा

स्वप्नावस्था। सूक्ष्मशरीराभिमानि आत्मा तैजस इत्युच्यते।

ततः सुषुप्त्यवस्था का?

अहं किमपि न जानामि सुखेन मया निद्राऽनुभूयत इति सुषुप्त्यवस्था।

कारणशरीराभिमानी आत्मा प्राज्ञ इत्युच्यते।

पञ्चकोशाः के?

अन्नमयः प्राणमयः मनोमयः विज्ञानमयः आनन्दमयश्चेति।

अन्नमयः कः?

अन्नरसेनैव भूत्वा, अन्नरसेनैव वृद्धिं प्राप्य, अन्नरूपपृथिव्यां यद्विलीयते तदन्नमयः कोशः स्थूलशरीरम्।

प्राणमयः कः?

प्राणाद्याः पञ्चवायवः वागादीन्द्रियपञ्चकं प्राणमयः कोशः।

मनोमयः कः?

मनश्च ज्ञानेन्द्रियपञ्चकं मिलित्वा यो भवति स मनोमयः कोशः।

विज्ञानमयः कः?

बुद्धिज्ञानेन्द्रियपञ्चकं मिलित्वा यो भवति स विज्ञानमयः कोशः।

आनन्दमयः कः?

एवमेव कारणशरीरभूताविद्यास्थमलिनसत्त्वं प्रियादिवृत्तिसहितं सत् आनन्दमयः कोशः।

एतत्कोशपञ्चकम्।

मदीयं शरीरं, मदीयाः प्राणाः, मदीयं मनश्च, मदीया बुद्धिर्मदीयं अज्ञानमिति, स्वेनैव ज्ञायते तद्यथा मदीयत्वेन ज्ञातं कटककुण्डलगृहादिकं स्वस्माद्भिन्नं तथा पञ्चकोशादिकं मदीयत्वेन ज्ञातमात्मा न भवति।

आत्मा तर्हि कः?

सच्चिदानन्दस्वरूपः।

सत् किम्?

कालत्रयेऽपि तिष्ठतीति सत्।

चित् किम्?

ज्ञानस्वरूपः।

आनन्दः कः?

सुखस्वरूपः।

एवं सच्चिदानन्दस्वरूपं स्वात्मानं विजानीयात्।

अथ चतुर्विंशतितत्त्वोत्पत्तिप्रकारं वक्ष्यामः।
ब्रह्माश्रया सत्वरजस्तमोगुणात्मिका माया अस्ति।

ततः आकाश संभूतः।

आकाशात् वायुः।

वायोस्तेजः।

तेजस आपः।

अद्भ्यः पृथिवी।

एतेषां पञ्चतत्त्वानां मध्ये आकाशस्य सात्त्विकांशात्
श्रोत्रेन्द्रियं सम्भूतम्।

वायोः सात्त्विकांशात् त्वगिन्द्रियं सम्भूतम्।

अग्नेः सात्त्विकांशात् चक्षुरिन्द्रियं सम्भूतम्।

जलस्य सात्त्विकांशात् रसनेन्द्रियं सम्भूतम्।

पृथिव्याः सात्त्विकांशात् घ्राणेन्द्रियं सम्भूतम्।

एतेषां पञ्चतत्त्वानां समष्टिसात्विकांशात् मनोबुद्ध्यहंकार -
चित्तान्तःकरणानि संभूतानि।

संकल्पविकल्पात्मकं मनः।

निश्चयात्मिका बुद्धिः।

अहंकर्ता अहंकारः।

चिन्तनकर्तृ चित्तम्।

मनसो देवता चन्द्रमाः।

बुद्धेर्ब्रह्मा।

अहंकारस्य रुद्रः।

चित्तस्य वासुदेवः।

एतेषां पञ्चतत्त्वानां मध्ये आकाशस्य राजसांशात्वागिन्द्रियं संभूतम्।

वायोः राजसांशात् पाणीन्द्रियं सम्भूतम्।

वह्नेः राजसांशात् पादेन्द्रियं सम्भूतम्।

जलस्य राजसांशात् गुदेन्द्रियं सम्भूतम्।

पृथिव्या राजसांशात् उपस्थेन्द्रियं सम्भूतम्।

एतेषां पञ्चतत्त्वानां तामसांशात् पञ्चीकृतपञ्चतत्वानि भवन्ति।

पञ्चीकरणं कथं इति चेत्। एतेषां पञ्चमहाभूतानां तामसांशस्वरूपं एकमेकं भूतं द्विधा विभज्य

एकमेकमर्धं पृथक् तूष्णीं व्यवस्थाप्य अपरमपरमर्धं चतुर्धा विभज्य स्वार्धमन्येषु अर्धेषु स्वभागचतुष्टयसंयोजनंकार्यम्। तदा पञ्चीकरणं भवति।

एतेभ्यः पञ्चीकृतपञ्चमहाभूतेभ्यः स्थूलशरीरं भवति।

एवं पिण्डब्रह्माण्डयोरैक्यं सम्भूतम्।

स्थूलशरीराभिमानि जीवनामकं ब्रह्मप्रतिबिम्बं भवति। स एव जीवः प्रकृत्या स्वस्मात् ईश्वरं भिन्नत्वेन जानाति।

अविद्योपाधिः सन् आत्मा जीव इत्युच्यते।

मायोपाधिः सन् आत्मा ईश्वर इत्युच्यते।

एवं उपाधिभेदात्जीवेश्वरभेददृष्टिः यावत्पर्यन्तं तिष्ठति तावत्पर्यन्तं जन्ममरणादिरूपसंसारो न निवर्तते।

तस्मात्कारणात् न जीवेश्वरयोर्भेदबुद्धिः स्वीकार्या।

ननु साहंकारस्य किंचिज्ज्ञस्य जीवस्य निरहंकारस्य सर्वज्ञस्य ईश्वरस्य तत्त्वमसीति महावाक्यात् कथमभेदबुद्धिः स्यादुभयोः विरुद्धधर्माक्रान्तत्वात्।

इति चेन्न। स्थूलसूक्ष्मशरीराभिमानी त्वंपदवाच्यार्थः। उपाधिविनिर्मुक्तं समाधिदशासंपन्नं शुद्धं चैतन्यं त्वंपदलक्ष्यार्थः।

एवं सर्वज्ञत्वादिविशिष्ट ईश्वरः तत्पदवाच्यार्थः।

उपाधिशूण्यं शुद्धचैतन्यं तत्पदलक्ष्यार्थः। एवं च जीवेश्वरयोः चैतन्यरूपेणाभेदे बाधकाभावः। एवं च वेदान्तवाक्यैः सद्गुरूपदेशेन च सर्वेष्वपि भूतेषु येषां ब्रह्मबुद्धिरुत्पन्ना ते जीवन्मुक्ताः इत्यर्थः।

ननु जीवन्मुक्तः कः?

यथा देहोऽहं पुरुषोऽहं ब्राह्मणोऽहं शूद्रोऽहमस्मीति दृढनिश्चयः तथा नाहं ब्राह्मणः न शूद्रः न पुरुषः किन्तु असङ्गः सच्चिदानन्दस्वरूपः प्रकाशरूपः सर्वान्तर्यामी चिदाकाश रूपोस्मीति दृढनिश्चयरूप अपरोक्षज्ञानवान् जीवन्मुक्तः।

ब्रह्मैवाहमस्मीत्यपरोक्षज्ञानेन निखिलकर्मबन्धविनिर्मुक्तः स्यात्।

कर्माणि कति विधानि सन्तीति चेत् आगामिसञ्चितप्रारब्ध भेदेन त्रिविधानि सन्ति।

ज्ञानोत्पत्त्यनन्तरं ज्ञानिदेहकृतं पुण्यपापरूपं कर्म यदस्ति तदागामीत्यभिधीयते।

सञ्चितं किम्?

अनन्तकोटिजन्मनां बीजभूतं सत् यत्कर्मजातं पूर्वार्जितं तिष्ठति तत् सञ्चितं ज्ञेयम्।

प्रारब्धं कर्म किमिति चेत्।

इदं शरीरमुत्पाद्य इह लोके एवं सुखदुःखादिप्रदं यत्कर्म तत्प्रारब्धम्। भोगेन नष्टं भवति। प्रारब्धकर्मणां भोगादेव क्षय इति।

सञ्चितं कर्म ब्रह्मैवाहमिति निश्चयात्मकज्ञानेन नश्यति।

आगामि कर्म अपि ज्ञानेन नश्यति। किञ्च आगामि कर्मणां नलिनीदलगतजलवज्ज्ञानिनां सम्बन्धो नास्ति।

किञ्च ये ज्ञानिनं स्तुवन्ति भजन्ति अर्चयन्ति तान्प्रति ज्ञानिकृतं आगामिपुण्यं गच्छति।

ये ज्ञानिनं निन्दन्ति द्विषन्ति दुःखप्रदानं कुर्वन्ति तान्प्रति ज्ञानिकृतं सर्वमागामि क्रियमाणं यदवाच्यं कर्म पापात्मकं तद्गच्छति।

तथा चात्मवित्संसारं तीर्त्वा ब्रह्मानन्दमिहैव प्राप्नोति।

तरति शोकमात्मवित् इति श्रुतेः।

तनुं त्यजतु वा काश्यां श्वपचस्य गृहेऽथ वा।
ज्ञानसंप्राप्तिसमये मुक्तोऽसौ विगताशयः।।

इति स्मृतेश्च।

इति तत्त्वबोधप्रकरणं समाप्तम्।

ஓம்

ஸ்ரீகுருப்யோ நம:

# தத்வபோதம்

வாஸுதேவேந்த்ரயோகீந்த்ரம் நத்வா ஜ்ஞாநப்ரதம் குரும்।

முமுக்ஷூணாம் ஹிதார்த்தாய

தத்த்வபோதோऽபிதீயதே॥

ஸாதநசதுஷ்டயஸம்பந்நாதிகாரிணாம் மோக்ஷஸாதநபூதம் தத்த்வவிவேகப்ரகாரம் வக்ஷ்யாம:।

ஸாதநசதுஷ்டயம் கிம்?

நித்யாநித்யவஸ்து விவேக:।

இஹாமுத்ரார்த்தபலபோகவிராக:।

ஶமாதிஷட்க ஸம்பத்தி

முமுக்ஷுத்வம் சேதி।

நித்யாநித்யவஸ்துவிவேக: க:?

நித்யவஸ்த்வேகம் ப்ரஹ்ம தத்வ்யதிரிக்தம் ஸர்வமநித்யம்। அயமேவநித்யாநித்யவஸ்துவிவேக:।

விராக: க:?

இஹஸ்வர்கபோகேஷு இச்சாராஹித்யம்।

ஶமாதிஸாதநஸம்பத்தி: கா ?

ஶமோ தம உபரமஸ்திதிக்ஷா ஶ்ரத்தா ஸமாதாநம் ச இதி।

ஶம: க: ?

மநோ நிக்ரஹ:।

தம: க: ?

சக்ஷுராதிபாஹ்யேந்த்ரியநிக்ரஹ:।

உபரம: க: ?

ஸ்வதர்மாநுஷ்டாநமேவ।

திதிக்ஷா கா ?

ஶீதோஷ்ணஸுகது:காதிஸஹிஷ்ணுத்வம்।

ஶ்ரத்தா கீத்ருஶீ ?

குருவேதாந்தவாக்யாதிஷு விஶ்வாஸ: ஶ்ரத்தா।

ஸமாதாநம் கிம் ?

சித்தைகாக்ரதா।

முமுக்ஷுத்வம் கிம் ?

மோக்ஷோ மே பூயாத் இதி இச்சா।

ஏதத் ஸாதநசதுஷ்டயம்।

ததஸ்தத்த்வவிவேகஸ்யாதிகாரிணோ பவந்தி।

தத்த்வவிவேக: க: ?

ஆத்மா ஸத்யம் ததந்யத் ஸர்வம் மித்யேதி।

ஆத்மா க: ?

ஸ்தூலஸூக்ஷ்மகாரணஶரீராத் வ்யதிரிக்த: பஞ்சகோஶாதீத: ஸந் அவஸ்த்தாத்ரயஸாக்ஷீ ஸச்சிதாநந்தஸ்வரூப: ஸந் யஸ்திஷ்டதி ஸ ஆத்மா।

ஸ்தூல ஶரீரம் கிம் ?

பஞ்சீக்ருதபஞ்சமஹாபூதை: க்ருதம், ஸத்கர்மஜந்யம், ஸுகது:காதி போகாயதநம், ஶரீரம், அஸ்தி, ஜாயதே, வர்ததே, விபரிணமதே, அபக்ஷீயதே, விநஶ்யதீதி, ஷட்விகாரவதேதத் ஸ்தூலஶரீரம்।

ஸூக்ஷ்ம ஶரீரம் கிம் ?

அபஞ்சீக்ருதபஞ்சமஹாபூதை: க்ருதம் ஸத்கர்மஜந்யம் ஸுகது:காதி போகஸாதநம் பஞ்சஜ்ஞாநேந்த்ரியாணி பஞ்சகர்மேந்த்ரியாணி பஞ்சப்ராணாதய: மநஶ்சைகம் புத்திஶ்சைகா ஏவம் ஸப்ததஶகலாபி: ஸஹ யத்திஷ்டதி தத்ஸூக்ஷ்மஶரீரம்।

ஶ்ரோத்ரம் த்வக் சக்ஷு: ரஸநா க்ராணம் இதி பஞ்ச ஜ்ஞாநேந்த்ரியாணி।

ஶ்ரோத்ரஸ்ய திக்தேவதா।

த்வசோ வாயு:।

சக்ஷுஷ: ஸூர்ய:।

ரஸநாயா வருண:।

க்ராணஸ்ய அஶ்விநௌ।

இதி ஞாநேந்த்ரிய தேவதா:।

ஶ்ரோத்ரஸ்ய விஷய: ஶப்தக்ரஹணம்।

த்வசோ விஷய: ஸ்பர்ஶ க்ரஹணம்।

சக்ஷுஷோ விஷய: ரூபக்ரஹணம்।

ரஸநாயா விஷய: ரஸக்ரஹணம்।

க்ராணஸ்ய விஷய: கந்தக்ரஹணம் இதி।

வாக்பாணிபாதபாயூபஸ்தாநீதி
பஞ்சகர்மேந்த்ரியாணி।

வாசோ தேவதா வஹ்நி:।

ஹஸ்தயோரிந்த்ர:।

பாதயோர்விஷ்ணு:।

பாயோர்ம்ருத்யு:।

உபஸ்தஸ்ய ப்ரஜாபதி:।

இதி கர்மேந்த்ரியதேவதா:।

வாசோ விஷய: பாஷணம்।

ஹஸ்தயோர்விஷய: வஸ்துக்ரஹணம்।

பாதயோர்விஷய: கமநம்।

பாயோர்விஷய: மலத்யாக:।

உபஸ்தஸ்ய விஷய: ஆநந்த இதி।

காரணஶரீரம் கிம்?

அநிர்வாச்யாநாத்யவித்யாரூபம், ஶரீரத்வயஸ்ய
காரணமாத்ரம், ஸத்ஸ்வரூபாஜ்ஞாநம்,
நிர்விகல்பகரூபம், யதஸ்தி தத்காரணஶரீரம்।

அவஸ்த்தா த்ரயம் கிம்?
ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்த்யவஸ்த்தா।

ஜாக்ரதவஸ்த்தா கா?

ஶ்ரோத்ராதி ஞாநேந்த்ரியை: ஶப்தாதிவிஷயைஶ்ச
ஞாயதே இதி யத் ஸா ஜாக்ரதவஸ்த்தா।
ஸ்தூலஶரீராபிமாநிஆத்மா விஶ்வ இத்யுச்யதே।

ஸ்வப்நாவஸ்த்தா கேதி சேத் ஜாக்ரதவஸ்த்தாயாம்
யத்த்ருஷ்டம் யத்ஶ்ருதம் தத்ஜநிதவாஸநயா
நித்ராஸமயே ய: ப்ரபஞ்ச: ப்ரதீயதே ஸா
ஸ்வப்நாவஸ்த்தா। ஸூக்ஷ்மஶரீராபிமாநிஆத்மா
தைஜஸ இத்யுச்யதே।

தத: ஸுஷுப்த்யவஸ்தா கா?

அஹம் கிமபி ந ஜாநாமி ஸுகேந மயா
நித்ராऽநுபூயத இதி ஸுஷுப்த்யவஸ்த்தா।

காரணஶரீராபிமாநீஆத்மா ப்ராஜ்ஞ இத்யுச்யதே।

பஞ்ச கோஶா: கே?

அந்நமய: ப்ராணமய: மநோமய: விஜ்ஞாநமய: ஆநந்தமயஶ்சேதி।

அன்னமய: க:?

அந்நரஸேநைவ பூத்வா அந்நரஸேநைவ வ்ருத்திம் ப்ராப்ய, அந்நரூபப்ருதிவ்யாம் யத்விலீயதே ததந்நமய: கோஶ: ஸ்தூலஶரீரம்।

ப்ராணமய: க:?

ப்ராணாத்யா: பஞ்சவாயவ: வாகாதீந்த்ரிய பஞ்சகம் ப்ராணமய: கோஶ:।

மநோமய: க:?

மநஶ்ச ஜ்ஞாநேந்த்ரியபஞ்சகம் மிலித்வா யோ பவதி ஸ மநோமய: கோஶ:।

விஜ்ஞாநமய: க:?

புத்திஜ்ஞாநேந்த்ரியபஞ்சகம் மிலித்வா யோ பவதி ஸ விஜ்ஞாநமய: கோஶ:।

ஆநந்தமய: க:?

ஏவமேவ காரணஶரீரபூதாவித்யாஸ்த்த மலிநஸத்த்வம் ப்ரியாதிவ்ருத்திஸஹிதம் ஸத் ஆநந்தமய: கோஶ:।

ஏதத்கோஶபஞ்சகம்।

மதீயம் ஶரீரம் மதீயா: ப்ராணா: மதீயம் மநஶ்ச மதீயா புத்திர்மதீயம் அஜ்ஞாநமிதி ஸ்வேநைவ ஜ்ஞாயதே தத்யதா மதீயத்வேந ஜ்ஞாதம் கடககுண்டலக்ருஹாதிகம் ஸ்வஸ்மாத்பிந்நம் ததா பஞ்சகோஶாதிகம் மதீயத்வேந ஜ்ஞாதமாத்மா ந பவதி।

ஆத்மா தர்ஹி க:?

ஸச்சிதாநந்தஸ்வரூப:।

ஸத் கிம்?

காலத்ரயேऽபி திஷ்டதீதி ஸத்।

சித் கிம்?

ஜ்ஞாந ஸ்வரூப:।

ஆநந்த: க:?

ஸுகஸ்வரூப:।

ஏவம் ஸச்சிதாநந்தஸ்வரூபம் ஸ்வாத்மாநம் விஜாநீயாத்।

அத சதுர்விம்ஶதி தத்த்வோத்பத்தி ப்ரகாரம் வக்ஷ்யாம:।

ப்ரஹ்மாஶ்ரயா ஸத்வரஜஸ்தமோகுணாத்மிகா மாயா அஸ்தி।

தத: ஆகாஶ: ஸம்பூத:।

ஆகாஶாத் வாயு:।
வாயோஸ்தேஜ:।

தேஜஸ ஆப:।

அத்ப்ய: ப்ருதிவீ।

ஏதேஷாம் பஞ்சதத்த்வாநாம் மத்யே ஆகாஶஸ்ய ஸாத்விகாம்ஶாத் ஶ்ரோத்ரேந்த்ரியம் ஸம்பூதம்।

வாயோ: ஸாத்விகாம்ஶாத் த்வகிந்த்ரியம் ஸம்பூதம்।

அக்நே: ஸாத்விகாம்ஶாத் சக்ஷுரிந்த்ரியம் ஸம்பூதம்।

ஜலஸ்ய ஸாத்விகாம்ஶாத் ரஸநேந்த்ரியம் ஸம்பூதம்।

ப்ருதிவ்யா: ஸாத்விகாம்ஶாத் க்ராணேந்த்ரியம் ஸம்பூதம்।

ஏதேஷாம் பஞ்சதத்த்வாநாம் ஸமஷ்டிஸாத்விகாம்ஶாத் மநோபுத்த்யஹங்கார-சித்தாந்த:கரணாநிஸம்பூதாநி।

ஸங்கல்ப விகல்பாத்மகம் மந:।

நிஶ்சயாத்மிகா புத்தி:।

அஹம் கர்த்தா அஹங்கார:।

சிந்தந கர்த்ரு சித்தம்।

மநஸோ தேவதா சந்த்ரமா:।

புத்தேர் ப்ரஹ்மா।

அஹங்காரஸ்ய ருத்ர:।

சித்தஸ்ய வாஸுதேவ:।

ஏதேஷாம் பஞ்சதத்த்வாநாம் மத்யே ஆகாஶஸ்ய ராஜஸாம்ஶாத் வாகிந்த்ரியம் ஸம்பூதம்।

வாயோ: ராஜஸாம்ஶாத் பாணீந்த்ரியம் ஸம்பூதம்।

வஹ்நே: ராஜஸாம்ஶாத் பாதேந்த்ரியம் ஸம்பூதம்।

ஜலஸ்ய ராஜஸாம்ஶாத் குதேந்த்ரியம் ஸம்பூதம்।

ப்ருதிவ்யா: ராஜஸாம்ஶாத் உபஸ்தேந்த்ரியம் ஸம்பூதம்।

ஏதேஷாம் பஞ்சதத்த்வாநாம் தாமஸாம்ஶாத் பஞ்சீக்ருதபஞ்சதத்த்வாநிபவந்தி।

பஞ்சீகரணம் கதம் இதி சேத்। ஏதேஷாம் பஞ்சமஹாபூதாநாம் தாமஸாம்ஶஸ்வரூபம் ஏகமேகம் பூதம் த்விதா விபஜ்ய ஏகமேகமர்தம் ப்ருதக் தூஷ்ணீம் வ்யவஸ்தாப்ய அபரமபரமர்தம் சதுர்தா விபஜ்ய ஸ்வார்த மந்யேஷு அர்தேஷு ஸ்வபாக சதுஷ்டய ஸம்யோஜநம் கார்யம்। ததா பஞ்சீகரணம் பவதி।

ஏதேப்ய: பஞ்சீக்ருதபஞ்சமஹாபூதேப்ய: ஸ்தூலஶரீரம் பவதி।

ஏவம் பிண்டப்ரஹ்மாண்டயோரைக்யம் ஸம்பூதம்।

ஸ்தூலஶரீராபிமாநிஜீவநாமகம் ப்ரஹ்ம ப்ரதிபிம்பம் பவதி। ஸ ஏவ ஜீவ: ப்ரக்ருத்யா ஸ்வஸ்மாத் ஈஶ்வரம் பிந்நத்வேந ஜாநாதி।

அவித்யோபாதி: ஸந் ஆத்மா ஜீவ இத்யுச்யதே।

மாயோபாதி: ஸந் ஆத்மா ஈஶ்வர: இத்யுச்யதே।

ஏவம் உபாதி பேதாத் ஜீவேஶ்வர பேதத்ருஷ்டி: யாவத்பர்யந்தம் திஷ்டதி தாவத்பர்யந்தம் ஜந்மமரணாதிரூப ஸம்ஸாரோ ந நிவர்ததே।

தஸ்மாத் காரணாத் ந ஜீவேஶ்வரயோர் பேதபுத்தி: ஸ்வீகார்யா।

நநு ஸாஹங்காரஸ்ய கிஞ்சிஜ்ஞஸ்ய ஜீவஸ்ய நிரஹங்காரஸ்ய ஸர்வஜ்ஞஸ்ய ஈஶ்வரஸ்ய தத்த்வமஸீதி மஹாவாக்யாத் கதம் அபேதபுத்தி: ஸ்யாதுபயோ: விருத்ததர்மாக்ராந்தத்வாத்।

இதி சேந்ந। ஸ்தூலஸூக்ஷ்மஶரீராபிமாநீ த்வம்பத வாச்யார்த்த:। உபாதிவிநிர்முக்தம் ஸமாதிதஶாஸம்பந்நம் ஶுத்தம் சைதந்யம் த்வம்பத லக்ஷ்யார்த்த:।

ஏவம் ஸர்வஜ்ஞாத்வாதிவிஶிஷ்ட ஈஶ்வர: தத்பத வாச்யார்த்த:।

உபாதிஶூந்யம் ஶுத்தசைதந்யம் தத்பதலக்ஷ்யார்த்த:।

ஏவம் ச ஜீவேஶ்வரயோ: சைதந்யஸ்வரூபேணாபேதே பாதகாபாவ:।

ஏவம் ச வேதாந்த வாக்யை: ஸத்குரூபதேஶேந ச ஸர்வேஷ்வபி பூதேஷு யேஷாம் ப்ரஹ்மபுத்திருத்பந்நா தே ஜீவந்முக்தா: இத்யர்த்த:।

நநு ஜீவந்முக்த: க:?

யதா தேஹோऽஹம் புருஷோऽஹம்

ப்ராஹ்மணோऽஹம் ஶூத்ரோऽஹமஸ்மீதி

த்ருடநிஶ்சய: ததா நாஹம் ப்ராஹ்மண: ந ஶூத்ர: ந புருஷ: கிந்து அஸங்க: ஸச்சிதாநந்த ஸ்வரூப: ப்ரகாஶரூப: ஸர்வாந்தர்யாமி சிதாகாஶ ரூபோஸ்மீதி த்ருடநிஶ்சயரூப அபரோக்ஷஜ்ஞாநவாந் ஜீவந்முக்த:।

ப்ரஹ்மைவாஹமஸ்மீத்யபரோக்ஷஜ்ஞாநேந நிகிலகர்மபந்தவிநிர்முக்த: ஸ்யாத்।

கர்மாணி கதி விதாநிஸந்தீதி சேத் ஆகாமிஸஞ்சிதப்ராரப்த பேதேந த்ரிவிதாநிஸந்தி।

ஞாநோத்பத்யநந்தரம் ஞாநிதேஹக்ருதம் புண்யபாபரூபம் கர்ம யதஸ்தி ததாகாமீத்யபிதீயதே।

ஸஞ்சிதம் கிம் ?

அநந்தகோடிஜந்மநாம் பீஜபூதம் ஸத் யத்கர்மஜாதம் பூர்வார்ஜிதம் திஷ்டதி தத் ஸஞ்சிதம் ஜ்ஞேயம்।

ப்ராரப்தம் கர்ம கிமிதி சேத்।

இதம் ஶரீரமுத்பாத்ய இஹ லோகே ஏவம் ஸுகது:காதிப்ரதம் யத்கர்ம தத்ப்ராரப்தம்। போகேந நஷ்டம் பவதி। ப்ராரப்தகர்மணாம் போகாதேவ க்ஷய இதி।

ஸஞ்சிதம் கர்ம ப்ரஹ்மைவாஹமிதி நிஶ்சயாத்மகஜ்ஞாநேந நஶ்யதி।

ஆகாமி கர்ம அபி ஜ்ஞாநேந நஶ்யதி। கிஞ்ச ஆகாமி கர்மணாம் நலிநீதலகதஜலவத் ஜ்ஞாநிநாம் ஸம்பந்தோ நாஸ்தி।

கிஞ்ச யே ஜ்ஞாநிநம் ஸ்துவந்தி பஜந்தி அர்சயந்தி தாந்ப்ரதி ஜ்ஞாநிக்ருதம் ஆகாமிபுண்யம் கச்சதி।

யே ஜ்ஞாநிநம் நிந்தந்தி த்விஷந்தி து:கப்ரதாநம் குர்வந்தி தாந்ப்ரதி ஜ்ஞாநிக்ருதம் ஸர்வமாகாமி க்ரியமாணம் யதவாச்யம் கர்ம பாபாத்மகம் தத்கச்சதி।

ததா சாத்மவித் ஸம்ஸாரம் தீர்த்வா ப்ரஹ்மாநந்தமிஹைவ ப்ராப்நோதி।

தரதி ஶோகமாத்மவித் இதி ஶ்ருதே:।

தநும் த்யஜது வா காஶ்யாம் ஶ்வபசஸ்ய க்ருஹேऽத வா।

ஜ்ஞாநஸம்ப்ராப்திஸமயே முக்தோऽஸௌ விகதாஶய:।।

இதி ஸ்ம்ருதேஶ்ச।

இதி தத்த்வபோதப்ரகரணம் ஸமாப்தம்।